www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

பிப்ரவரி 2011
ரூ. 7.00





மாலேகான், அஜ்மீர், மெக்கா மசூதி, சம்ஜவ்தா விரைவுவண்டி குண்டு வெடிப்புகள்:

## இந்து பயங்கரவாதத்தின் நிரூபணங்கள்!

படிப்பகம்

www.padippakam.com

## துனிசியா:

# சர்வாதிகார ஆட்சியை வீழ்த்திய உழைக்கும் மக்களின் பேரெழுச்சி



கடந்த ஜனவரியில் நடந்த துனிசிய உழைக்கும் மக்களின் பேரெழுச்சியைக் கண்டு அஞ்சி, அந்நாட்டின் சர்வாதிகார அதிபரான பென் அலி, குடும்பத்தோடு நாட்டை விட்டே தப்பியோடி சவூதி அரேபியாவில் தஞ்சம் புகுந்துள்ளார். அடக்குமுறையும் கைதுகளும் துப்பாக்கிகளும் கவச வண்டிகளும் மக்கள் சக்தியின் முன் மண்டியிடும் என்பதை இப்பேரெழுச்சி நிரூபித்துக் காட்டியுள்ளது.

முன்னாளில் பிரெஞ்சுக் காலனியாக இருந்த ஆப்பிரிக்க கண்டத்தின் வடபகுதியிலுள்ள சிறிய இஸ்லாமிய நாடான துனிசியா, 1956-இல் பெயரளவிலான சுதந்திரம் பெற்றது. 1987-இல் ஆட்சிக் கவிழ்ப்பு மூலம் அதிகாரத்துக்கு வந்த சர்வாதிகார அதிபர் பென் அலி, மக்கள் பேரெழுச்சியில் நாட்டைவிட்டு விரட்டப்படும்வரை தொடர்ந்து 23 ஆண்டுகளாகப் பதவியில் நீடித்து வந்தார். மேற்கத்திய ஏகாதிபத்தியங்களின் நம்பகமான விசுவாசியாக இருந்ததால், அவரது அடக்குமுறையும் அட்டூழியங்களும் சூறையாடல்களும் கேள்விமுறையின்றித் தொடர்ந்தன.

உரிமம் பெறவில்லை என்று போலீசார் தொடர்ந்து தொல்லைப்படுத்தியதால், மனமுடைந்து நகராட்சி அலுவலகத்தின் முன்பாக கடந்த டிசம்பர் 17-ஆம்தேதியன்று தீக்குளித்தார். ஜனவரி 4-ஆம் தேதியன்று சிகிச்சை பலனளிக்காமல் அவர் மரணமடைந்தார்.

வேலையில்லா இளைஞர்களின் குமுறலை எதிரொலித்த அவரது தீக்குளிப்பும் மரணமும், இளைஞர்களின் எழுச்சியாக மாறியது. ஊழல், ஒடுக்குமுறை, அநீதி, வேலையின்மைக்கு எதிராக இளைஞர்கள் போராடத் தொடங்கினர். பெண்கள் பெருந்திரளாக அணிதிரண்டு,''நாட்டைச் சூறையாடும் சர்வாதிகார பென் அலி கும்பல் ஒழிக!'' என்று முழக்கமிட்டபடி பேரணிகளைத் தொடர்ந்தனர். இப்போராட்டத்தில் 80-க்கும் மேற்பட்டோர் போலீசாரால் கொல்லப்பட்டு, -நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்தனர். மொகம்மது வழியில் மேலும் பல இளைஞர்கள் தீக்குளிக்கத் தொடங்கினர். ஊழல் - ஒடுக்குமுறையாலும், ஊதியவெட்டு - வேலையின்மை - விலையேற்றத்தாலும் வெறுப்பிலும் ஆத்திரத்திலும் இருந்த உழைக்கும் மக்களும் நடுத்தர வர்க்கத்தினரும் இக்கொடுமைகளைக் கண்டு பொங்கியெழுந்து அலையலையாக வீதிகளில் திரண்டு போராடினர்.

ஏழை நாடாக இருந்த போதிலும், படித்தவர்கள் நிறைந்த துனிசியாவில் இளைஞர்கள் வேலையின்றிப் பரிதவிக்கின்றனர். உள்நாட்டில் வேலை கிடைக்காததால், சிலர் வெளிநாடுகளுக்கு ஓடி கொத்தடிமைகளாக உழல்கிறார்கள். வெளிநாடு போக வசதியற்றவர்கள் விரக்தியில் உழல்கிறார்கள் அல்லது கலகக்காரர்களாக மாறுகிறார்கள். அரபு நாடுகளின் சர்வாதிகாரிகளும் அமெரிக்காவும் இத்தகையோரை அல்கைதா தீவிரவாதிகள் என்று முத்திரை குத்தி ஒடுக்குவதை நியாயப்படுத்துகின்றன. துனிசியாவில் போராடிய வேலையில்லா இளைஞர்களையும் பென் அலி இப்படி தீவிரவாத முத்திரை குத்தித்தான் ஒடுக்கி வந்தார்.

துனிசியாவின் தென்பகுதியிலுள்ள சிடி பௌசித் நகரில், 26 வயதான மொகம்மது பௌவாசிசி என்ற வேலையற்ற தகவல் தொழில்நுட்பப் பட்டதாரி இளைஞர், தெருவில் பழங்களை விற்க




போராடும் மக்களைப் பயங்கரவாதக் கும்பல், வேலையில்லா பொறுக்கிகளின் அட்டகாசம் என்றெல்லாம் ஆளுங் கும்பல் அவதூறு செய்து இராணுவத்தை ஏவி ஒடுக்கியது. மேற்கத்திய ஊடகங்கள் திட்டமிட்டே துனிசிய மக்கள் எழுச்சியை மூடிமறைத்தன. போராட்டப் படங்கள், வீடியோக்கள், வாக்குமூலங்கள், கட்டுரைகள் முதலான அனைத்தும் இணையதளங்களில் அவசரமாக நீக்கப்பட்டன. இருப்பினும் டுவிட்டர், பேஸ்புக் முதலானவற்றின் மூலமும் அல் ஜசீரா போன்ற சில இணையதளங்களின் வழியாகவும் இப்போராட்டச் செய்திகள் துனிசியாவில் காட்டுத் தீயாகப் பரவி போராட்டத்தை உந்தித் தள்ளின.

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

# விலைவாசி உயர்வு:

# மறுகாலனியாதிக்கக் கொள்கையின் விளைவு!

மகாராஷ்டிரா மாநிலத்தில் பருவம் தப்பிப் பெய்த மழைதான் வெங்காய விலையேற்றத்துக்குக் காரணம் என மைய அரசு கூறி வருகிறது. ஆனால், அதனைவிட, மன்மோகன் சிங் அரசின் ஏற்றுமதிக் கொள்கைதான் வெங்காயத்தின் விலையேற்றத்திற்கு முக்கியமான காரணம் என்பது இப்பொழுது தெட்டத்தெளிவாக அம்பலமாகிவிட்டது.

மகாராஷ்டிரா மாநிலத்தில் பருவம் தப்பிப் பெய்த மழை காரணமாக வெங்காய விளைச்சல் பாதிக்கப்படும் எனத் தெரிந்திருந்தபோதும், மைய அரசு வெங்காய ஏற்றுமதிக்கு உடனடியாக எந்தத் தடையும் விதிக்கவில்லை. மாறாக, மழை கொட்டி தீர்த்த செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் வெங்காய ஏற்றுமதிக்கான அடிப்படை ஆதார விலையைக் கூட்டிக் கொடுத்து, வெங்காய ஏற்றுமதியை ஊக்கப்படுத்தியது. இதனைப் பயன்படுத்திக் கொண்ட மொத்த வியாபாரிகள் அம்மாதங்களில் 1.33 இலட்சம் டன் வெங்காயத்தை ஏற்றுமதி செய்தனர். இதன் மூலம் உள்நாட்டில் செயற்கையான தட்டுப்பாட்டை உருவாக்கிய மொத்த வியாபாரிகள் கூட்டணி, அத்தட்டுப்பாட்டைக் காட்டி வெங்காயத்தின் விலையையும் எகிற வைத்தனர்.

இதன் பின் வெங்காய ஏற்றுமதிக்குத் தடை விதித்த மன்மோகன் சிங் அரசு, இத்தட்டுப்பாட்டையும் விலையேற்றத்தையும் கட்டுப்படுத்த வெங்காயத்தை இறக்குமதி செய்யும் முடிவை எடுத்தது. வெங்காயத்தை ஏற்றுமதி செய்து கொள்ளை இலாபம் பார்த்த மொத்த வியாபாரிகளே, அதனை வரிகளின்றி, அதாவது மானியத்தோடு இறக்குமதி செய்து கொழுத்த இலாபம் பார்க்கவும் வழி ஏற்படுத்திக் கொடுத்தது, மன்மோகன் சிங் அரசு.

வெங்காயம் மட்டுமின்றி, தக்காளி, பூண்டு, முருங்கைக்காய், பருப்பு, சமையல் எண்ணெய், பால், இறைச்சி எனப் பல்வேறு அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் சமீபகாலமாக ஒன்று மாற்றி ஒன்று என உயர்ந்து வருகின்றன. மேலும், கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை உயர்வு என்பது வாடிக்கையான நிகழ்ச்சி நிரலாகிவிட்டது. ''பொருளாதார வளர்ச்சியின் காரணமாக இந்திய மக்கள் அதிகமாக நுகரத் தொடங்கிவிட்டதாகவும், ஆனால், அதற்கேற்ப பொருட்கள் கிடைக்காமல் பற்றாக்குறை நிலவுவதால்தான் விலைவாசி அதிகரித்து வருவதாகவும்'' திரும்பத்திரும்பக் கூறி, ஒரு பொய்யை உண்மையாக்க முயலுகிறார்கள், ஆட்சியாளர்கள். ஆனால், போதுமான அளவு உற்பத்தியும், கையிருப்பும் உள்ள உணவுப் பொருட்களின் விலைகள் கூடத் தாறுமாறாக உயர்ந்து வருகின்றன என்பதுதான் கண்கூடு.

உணவுப் பொருள் உற்பத்தியில் பற்றாக்குறை நிலவுவதாகக் கூறும் அரசு, விவசாய உற்பத்தியை அதிகரிக்கும் நடவடிக்கைகளை எடுப்பதற்குப் பதிலாக, உணவு உற்பத்தியில் ஏற்கெனவே நிலவி வரும் அரைகுறை தன்னிறைவை சீர்குலைக்கும் விதமான நடவடிக்கைகளைத்தான் எடுத்து வருகிறது; உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்குப் பதிலாக, பற்றாக்குறையை இறக்குமதி செய்வதன் மூலம் ஈடுகட்டுவது என்ற பன்னாட்டு விவசாயக் கழகங்களுக்குச் சாதகமான கொள்கையை முன்னிறுத்துகிறது. இறக்குமதி செய்யும் பொறுப்பினையும் தற்பொழுது தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைத்துவிட்டது, மைய அரசு. அதற்காக அத்தனியார் நிறுவனங்களுக்கு மானியம் தருவதோடு, இறக்குமதி செய்த உணவுப் பொருளை பொது ஏலத்தில் அதிக விலைக்கு விற்பதற்கும் துணை நிற்கிறது. துவரம் பருப்பு துயரம் பருப்பானது இப்படித்தான் எனச் சில்லறை வியாபாரிகள் குற்றம் மத்துகின்றனர்.

புதிய ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 26 இதழ்: 4
பிப்ரவரி 2011

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 7.00
ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: ரூ.750.00

தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி: 94446 32561



படிப்பகம்

www.padippakam.com

> **''சூப்பர் மார்க்கெட்டு''களில் பொருட்களை வாங்கும் கலாச்சாரத்தில் மூழ்கித் திளைக்கும் மேல்தட்டு வர்க்கத்தை இந்த விலைவாசி உயர்வு எவ்விதத்திலும் பாதிப்பதில்லை. அதனால், அவர்களால் ஆதரிக்கப்படும் மன்மோகன் சிங் அரசு அடித்தட்டு மக்களைப் பாதிக்கும் விலைவாசி உயர்வை ஒரு பொருட்டாகவே கருதுவதில்லை.**

விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த, உணவுப் பொருள் ஏற்றுமதிக்குத் தடை விதிக்க அர முன் வருவதில்லை. மாறாக, கார்ப்பரேட் நிறுவனங்கள் இந்திய விவசாயிகளிடமிருந்து மலிவான விலையில் உணவுப் பொருட்களைக் கொள்முதல் செய்து, அவற்றை சர்வதேச சந்தையில் விற்று அமெரிக்க டாலர்களை இலாபமாக ஈட்டும் கொள்ளைக்கும் அரசே துணை நிற்கிறது. உள்நாட்டில் சர்க்கரை விலை எகிறிய பிறகும், அவசரப்பட்டு சர்க்கரை ஏற்றமதிக்குத் தடை விதித்துவிடக் கூடாது என அறிவுறுத்தியிருக்கிறார், மன்மோகன் சிங். நிதியாதிக்கக் கும்பல்கள் முன்பேர வர்த்தகம், இணைய தள வர்த்தகம் என்ற பெயரில் உணவுப் பொருளை வைத்துச் சூதாட்டம் நடத்துவது தான் விலைவாசி உயர்வுக்கு முதன்மையான காரணம் எனத் தெரிந்த பிறகும், அதனை முற்றிலுமாகத் தடை செய்ய மறுத்து வருகிறது, மன்மோகன் சிங் அர .

மேலும், 'பற்றாக்குறை' நிலவும் சமயத்தில்தான், நொறுக்குத் தீனி தயாரிப்பில் இறங்கியுள்ள கார்ப்பரேட் நிறுவனங்கள் உருளைக்கிழங்கு போன்ற உணவுப் பொருட்களை மூட்டைமூட்டையாகக் கொள்முதல் செய்து 'சேமித்து' வைத்துக் கொள்வது தடையின்றி அனுமதிக்கப்படுகிறது. இன்னொருபுறமோ, விவசாயிகளுக்குத் தேவைப்படும் குளிர்பதன சேமிப்புக் கிடங்குகளை ஏற்படுத்தித் தராமல் இருப்பதன் மூலம் பல இலட்சம் டன் காய்கறிகளையும் பழங்களையும் அழுகிப் போக அனுமதிக்கிறது. வெங்காய விலை ஏறிக்கொண்டிருந்த சமயத்தில் மேற்கு வங்கத்தில் 40 இலட்சம் டன் உருளைக்கிழங்கு அழுகிப் போகுமாறு கைவிடப்பட்டது. அதே சமயம் குளிர்பதனக் கிடங்குகளைக் கட்டிக் கொள்ள கார்ப்பரேட் நிறுவனங்களை அனுமதிப்பதன் மூலம், அந்நிறுவனங்கள் சட்டப்படியே உணவுப் பொருட்களைப் பதுக்கி வைத்துக் கொள்ளுவதற்கு வழி ஏற்படுத்தித் தரப்படுகிறது. இதற்கேற்ப அத்தியாவசிய உணவுப் பொருள் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்படுகின்றன.

உணவுப் பொருட்களின் விலையைக் குறைப்பதற்கு அவற்றின் உற்பத்திச் செலவைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை எடுப்பதற்குப் பதிலாக, உர விலையை உரக் கம்பெனிகளே தீர்மானித்துக் கொள்ளுமாறு அனுமதித்தது அரசு. இதன் மூலம் விவசாய உற்பத்திச் செலவை அதிகரிக்க வைத்த அரசு, பின்பு அதனையே காரணமாகக் காட்டி உணவுப் பொருட்களின் விலைகளைக் குறைக்க முடியாது என வாதாடி வருகிறது. அப்படி மலிவாகக் கொடுத்தால், விவசாயிகள் நட்டமடைவார்கள் என்றொரு பசப்பலான வாதத்தையும் முன் வைத்து வருகிறது, மன்மோகன் சிங் கும்பல்.

வெங்காய விலையேற்றத்தால் ஆதாயமடைந்த ஒரு சிறு விவசாயியையாவது இவர்களால் அடையாளம் காட்ட முடியுமா? மாறாக, மகாராஷ்டிரா மாநில வெங்காய விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து, அதற்கு ஈடாக வெங்காயத்தைக் கொள்முதல் செய்து கொள்வது என்ற ஏற்பாட்டின்படி, மொத்த வியாபாரிகள் கூட்டணி விவசாயிகளிடமிருந்து வெங்காயத்தை அடிமாட்டு விலைக்கு வாங்கி, ஏற்றுமதி செய்தும், விலையை உயர்த்தியும் கொள்ளை இலாபம் அடைந்துள்ளனர்.

இப்படிபட்ட இடைத்தரகர்களிடமிருந்து விவசாயிகளை மீட்பது என்ற பெயரில் இப்பொழுது விவசாயிகள் கார்ப்பரேட் நிறுவனங்களின் பிடிக்குள் சிக்க வைக்கப்படுகின்றனர். இதற்காகவே, ஒப்பந்த விவசாயம், கார்ப்பரேட் நிறுவனங்களே விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்து கொள்வதற்கு வசதியாக கிராமப்புறப் பகுதிகளில் கிடங்குகளை அமைத்துக் கொள்ள நிறுவனங்களுக்கு அனுமதி அளிப்பது ஆகிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. மேலும், கார்ப்பரேட் நிறுவனங்களே விவசாய விளைபொருட்களின் விலைகளைத் தீர்மானிப்பதற்கு வசதியாக அர ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை ஒழித்துவிடலாம் என்ற ஆலோசனையும் தனியார்மய ஆதரவாளர்களால் முன்வைக்கப்படுகிறது.






படிப்பகம்

www.padippakam.com

உணவுப் பொருள் உற்பத்தி, கொள்முதல், சேமிப்பு, விநியோகம் முதலான சமூக நலன் சார்ந்த கடமைகளிலிருந்து அரசு சிறிதுசிறிதாக விலகிக்கொண்டு, அந்த இடத்தில் கார்ப்பரேட் நிறுவனங்களை அனுமதித்த பிறகுதான், உணவுப் பொருட்களின் விலைகள் முன்னெப்போதும் இல்லாத வகையில் செங்குத்தாக உயர்ந்து கொண்டே செல்கின்றன. இதனை நிரூபிக்கும் பொருளாதாரப் புள்ளி விவரங்களும் இப்பொழுது வெளிவந்துள்ளன. சில்லறை விற்பனையில் கார்ப்பரேட் நிறுவனங்களை அனுமதித்த பின், அவற்றின் இலாப விகிதம் சரிந்துவிடாதபடி, விலை உயர்வை அனுமதிப்பதைத்தான் தனது கொள்கையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது, மன்மோகன் சிங் அரசு. விலைவாசி உயர்வை வளர்ச்சியின் ஆதாரமாகக் காட்டி நியாயப்படுத்தவும் இவர்கள் தயங்குவதில்லை.

''சூப்பர் மார்க்கெட்டு''களில் பொருட்களை வாங்கும் கலாச்சாரத்தில் மூழ்கித் திளைக்கும் மேல்தட்டு வர்க்கத்தை இந்த விலைவாசி உயர்வு எவ்விதத்திலும் பாதிப்பதில்லை. அதனால், அவர்களால் ஆதரிக்கப்படும் மன்மோகன் சிங் அரசு அடித்தட்டு மக்களைப் பாதிக்கும் விலைவாசி உயர்வை ஒரு பொருட்டாகவே கருதுவதில்லை. மாறாக, விலைவாசி உயர்வு என்பது தமக்கும் தமது எஜமானர்களுக்கம் ஆதாயம் தரத்தக்கதாகவே கருதுகிறது. இலாபத்திற்காகத்தான் வியாபாரம் நடத்த முடியும் என வெளிப்படையாகவே பேசி, கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வக்காலத்து வாங்குகிறார், சரத் பவார். உணவுப் பொருட்களின் விலைகளைக் குறைக்கும் கொள்கை எதுவும் அரசிடம் கிடையாது என அறிவிக்கிறது, நுகர்வோர் விவகாரத் துறை.

## ''விலைவாசி உயருது! ஏழைகளின் வயிறு எரியுது!

### – விலைவாசி உயர்வுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்.




உழைக்கும் மக்களை வாட்டி வதைக்கும் விலைவாசி உயர்வை எதிர்த்துப் பெண்கள் விடுதலை முன்னணி 28.12.2010 அன்று திருச்சி - ஜங்ஷன் காதிகிராப்ட் அருகில், உழைக்கும் வர்க்கப் பெண்களை அணிதிரட்டி ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. பெ.வி.மு.-வைச் சேர்ந்த தோழர் நிர்மலா தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் திருச்சி கிளைத் தலைவர் தோழர் காவிரிநாடன், பு.மா.இ.மு. இணைச் செயலர் தோழர் கிளர்ச்சியாளன், ம.க.இ.க. செயலர் தோழர் ராஜா ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

விலைவாசி உயர்வுக்குக் காரணம் அரசின் தனியார்மய - தாராளமயக் கொள்கைதான் என்பதை விளக்கியும், விலைவாசி உயர்வை ஒரு பொருட்டாகக் கருதாமல் அலட்சியப்படுத்தும் ஆட்சியாளர்களின் திமிர்த்தனத்தைத் தோலுரித்துக் காட்டியும், உணவு தானியங்களைப் பதுக்கிவைத்துக் கொள்ளை இலாபமடிக்கும் ஆன்லைன் வர்த்தகத்தைத் தடைசெய்யக் கோரியும், தனியார்மய-தாராளமயத்தை எதிர்க்காமல் மக்களின் அதிருப்தியை அறுவடை செய்ய அடையாளப் போராட்டங்களை நடத்தும் ஓட்டுக்கட்சிகளை அம்பலப்படுத்தியும், தனியார்மய-தாராளமயத்தை வீழ்த்தப் போராட அறைகூவியும் எழுச்சியுடன் நடந்த இந்த ஆர்ப்பாட்டம் உழைக்கும் மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றது.

– தகவல்: பெ.வி.மு., திருச்சி.

சி.பி.எம். உள்ளிட்ட எதிர்க்கட்சிகளோ சண்டைக்காரனின் காலில் விழுவதைப் போல, விலையைக் குறைக்குமாறு மன்மோகனிடமே முறையிடுகின்றன. விலை உயர்வைக் கண்டித்து அரசை நிலைகுலைய வைக்கும் கலகங்களை நடத்துவதற்குப் பதிலாக, கேலிக்கூத்தான போராட்டங்களைத் தான் நடத்துகின்றன. இக்கட்சிகள் இப்பிரச்சினையை மறுகாலனியாதிக்கத் தாக்குதலாக மக்களிடம் எடுத்துச் சொல்வதில்லை. அதுமட்டுமல்ல, அக்கட்சிகளிடம் விலைவாசியைக் குறைக்க எங்களுக்கு ஓட்டுப் போடுங்கள் என்ற வெற்று முழக்கத்தைத் தவிர, வேறேந்த மாற்றுப் பொருளாதாரக் கொள்கையும் கிடையாது.

அதனால்தான் மன்மோகன் சிங் துணிந்து விலைவாசியை மேலும்மேலும் அதிகரிக்கும் நடவடிக்கைகளை அடுத்தடுத்து எடுத்து வருகிறார். கடந்த ஒரே மாதத்தில் மட்டும் பெட்ரோல் விலையை இரண்டு முறை அதிகரித்திருக்கிறது, மைய அரசு. மன்மோகன் சிங்கின் பொருளாதார ஆலோசகரான ரங்கராஜன், ''ரேஷன் கடைகளில் வழங்கப்படும் அரிசி, கோதுமையின் விலைகளைப் பண வீக்கத்திற்குத் தகுந்தவாறு ஏற்ற வேண்டும்'' என அறிவித்திருக்கிறார். உணவுப் பொருள் வர்த்தகத்தில் தனியார்மயத்தை இன்னும் தீவிரமாக நடைமுறைப்படுத்துவதன் மூலம்தான் விலைவாசியைக் குறைக்க முடியும் எனக் கூறி, அதற்கேற்ப சில்லறை விற்பனையில் 51 சதவீதம் அந்நிய முதலீட்டிற்கு அனுமதி அளிக்கும் அறிவிப்பையும் வெளியிட்டிருக்கிறது, மன்மோகன் சிங் அரசு. இவை அனைத்தும் அரசே விலைவாசி உயர்வை திட்டமிட்டு ஊக்குவித்து வருகிறது என்பதைத்தான் நிரூபிக்கின்றன.

●



படிப்பகம்

www.padippakam.com

### மாலேகான், அஜ்மீர், மெக்கா மசூதி, சம்ஜவ்தா குண்டு வெடிப்புகள்:

# இந்து பயங்கரவாதத்தின் நிரூபணங்கள்

**ஆர்.எஸ்.எஸ். பரிவாரம் இந்துவெறி பயங்கரவாத கும்பல்தான் என்பதை அசீமானந்தாவின் வாக்குமூலம் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.**

***‘‘மலேகான் நகரில் முஸ்லிம்கள் 80 சதவீதத் தினராக இருப்பதால், எங்களது முதலாவது குண்டு வெடிப்பை மலேகானில் நடத்தினோம்... இதற்காக 2006-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் பிரக்யா சிங், சுனில் ஜோஷி, பாரத் ரித்தேஷ்வர் ஆகியோருடன் சேர்ந்து நான் திட்டமிட்டேன்... அஜ்மீர் தர்காவுக்கு இந்துக் களும் அதிக அளவில் வழிபாட்டுக்கு வருவதால், அதனைத் தடுக்கவும் இந்துக்களை அச்சுறுத்தவும் குண்டு வெடிப்பு நடத்தப்பட்டது... சம்ஜவ்தா விரைவு வண்டி குண்டுவெடிப்பை சுனில்ஜோஷி பொறுப் பேற்று நடத்தினான்...’’ - ஆர்.எஸ்.எஸ். பயங்கர வாதி அசீமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம்.***

•••

கடந்த 2006-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ஆம் நாள் மகாராஷ்டிரா மாநிலம் மலேகான் நகரின் முஸ் லிம்கள் நெருக்கமாக வாழும் பகுதியில் நான்கு குண்டு கள் வெடித்தன. 2007 நவம்பர் 11-ஆம் தேதியன்று ராஜஸ்தானின் அஜ்மீர் தர்காவில் ரம்ஜான் நோன்பு காலத்தில் குண்டுகள் வெடித்தன. 2007-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் இந்தியாவின் டெல்லிக்கும் பாகிஸ்தானின் லாகூருக்குமிடையே ஓடும் சம்ஜவ்தா விரைவு வண்டியில், அரியானா மாநிலத்தின் பானிபட் அருகே குண்டு வெடித்தது. அதைத் தொடர்ந்து மே மாதத்தில் ஆந் திராவின் தலைநகர் ஐதராபாத்தின் மெக்கா மசூதியில் குண்டு வெடித்தது. மலேகான் நகரில் 2008-ஆம் ஆண்டு செப்டம்பர் 29-ஆம் தேதியன்று மீண்டும் குண்டுகள் வெடித்தன. இக்குண்டு வெடிப்பு களில் -ற்றுக்கும் மேற்பட்டோர் கோரமாகக் கொல்லப்பட்டார்கள். பலர் படுகாயமடைந்தார்கள்.

இப்படி ஒவ்வொரு முறையும் குண்டுகள் வெடிக்கும் போதெல்லாம், பார்ப்பன - முத லாளித்துவ ஊடகங்கள் இதற்கு முஸ்லிம் தீவிரவாதிகள்தான் கார ணம் என்று எவ்வித விசாரணையு மின்றி குற்றம் சாட்டின. 2007-ஆம் ஆண்டில் பாகிஸ்தானின் வெளியுறவுத் துறை அமைச்சர் குர்ஷித் கசூரி அமைதிப் பேச்சுவார்த்தை நடத்த இந்தியா வந்திருந்த போது, சம்ஜவ்தா விரைவு வண்டியில் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. இந்தியா-பாகிஸ்தானிடையே நல்லுறவு ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் இஸ்லாமியத் தீவிரவாதிகள் இக்குண்டு வெடிப்பை நடத்தியதாக பார்ப்பன - முதலாளித்துவ ஊடகங்கள் சகட்டு மேனிக்குக் குற்றம் சாட்டின. இது ஹூஜி மற்றும் லஸ்கர்-இ-தொய்பா ஆகிய இஸ்லாமிய பயங்கரவாத இயக்கங்களின் சதி என்று அமெரிக்காவும் கூறியது.

இக்குண்டு வெடிப்புகள் குறித்து ஆரம்ப விசா ரணை தொடங்குவதற்கு முன்பாகவே போலீசையும் துணை ராணுவப் படைகளையும் ஏவி முஸ்லிம் குடியிருப்புகளை அரசு சுற்றி வளைத்தது. சட்டப் படியும் சட்டவிரோதமாகவும் -ற்றுக்கணக்கான அப் பாவி முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு கொடிய சித்திரவதைக்கு ஆளாயினர். அவர்களது இளமையும் எதிர்காலமும் நொறுங்கிப் போயின. பயங்கரவாதி என்ற அவமானத்தோடு, அவர்களது குடும்பங்கள் அலைக்கழிக்கப்பட்டு கையறு நிலை யில் தவித்தன. குண்டு வெடிப்புகளில் கொல்லப்பட் டோரின் குடும்பங்களைப் போலவே, குண்டு வெடிப் பில் ஈடுபட்டதாகப் பொய்க் குற்றம் சாட்டி கைது செய்யப் பட்ட அப்பாவிகளின் குடும் பங்களும் பிச்சையெடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டன.

பயங்கரானந்தா:
குண்டுவைப்புகளில் ஈடுபட்டதாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ள இந்துவெறி பயங்கரவாதி அசீமானந்தா.



•••

கடந்த 2006-ஆம் ஆண்டு மகாராஷ்டிர மாநிலத்தின் நான் டெட் நகரில் வெடிகுண்டுகள் தயாரித்தபோது விபத்து நடந்து ஆர்.எஸ்.எஸ். பயங்கரவாதிகள் இருவர் மாண்டனர். ஐந்துபேர் படுகாயமடைந்தனர். அதைத் தொடர்ந்து பார்ப்பன பயங்கர வாதிகள் 21 பேரை மகாராஷ்டிர பயங்கரவாத எதிர்ப்பு அதிரடி போலீசு அடுத்தடுத்து கைது



படிப்பகம்

www.padippakam.com



குண்டுவைப்புச் சதிகளில் ஈடுபட்ட இந்துவெறி பயங்கரவாதிகளில் சிலர்: (மேல்வரிசை) பெண் சாமியார் பிரக்யா சிங், ஜம்முவைச் சேர்ந்த சாரதா பீட சாமியார் தயானந்த பாண்டே, முன்னாள் இராணுவ அதிகாரி சிறீகாந்த் புரோகித். (கீழ்வரிசை) ஆர்.எஸ்.எஸ்-இன் முக்கிய பிரமுகர் லோகேஷ் சர்மா, ஆர்.எஸ்.எஸ். மத்தியக் கமிட்டி உறுப்பினர் இந்திரேஷ் குமார், பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஆதித்யானந்தா.

செய்து ஔரங்காபாத் தலைமைக் குற்றவியல் நீதிமன்றத்தில் அவர்களுக்கு எதிராகக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தது. இருப்பினும், போதிய ஆதாரங்கள் இல்லை என்று கூறி நீதிமன்றம் அவர்களுள் 11 பேரை விடுவிக்க எத்தணித்தது. இதை எதிர்த்து உள்ளூர் முஸ்லிம்கள் போராடியதோடு, சி.பி.ஐ. விசாரணை கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். நீண்ட இழுபறிக்குப் பிறகே, சி.பி.ஐ.யின் விசாரணை தொடங்கியது.

சம்ஜவ்தா விரைவு வண்டி குண்டு வெடிப்பில் பயன்படுத்தப்பட்ட ஆர்.டி.எக்ஸ். ரகத்தைச் சேர்ந்த வெடிபொருளை முன்னாள் இராணுவ அதிகாரியான சிறீகாந்த் புரோகித் கள்ளத்தனமாக ஜம்முவிலிருந்து வாங்கிக் கொடுத்ததற்கான அறிகுறிகள் கிடைத்தன. மலேகான் குண்டு வெடிப்பிலும் ஆர்.டி.எக்ஸ். ரக வெடிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்தது. இக்குண்டு வெடிப்புக்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளின் சேசிஸ் எண்ணைக் கொண்டு, அது அகில பாரத வித்யார்த்தி பரிசத் எனும் மாணவர் அமைப்பின் தலைவராக இருந்து, பின்னர் அபிநவ் பாரத் எனும் அமைப்பின் பெண் சாமியாரான சாத்வி பிரக்யா சிங்கினுடையது என்பதை மகாராஷ்டிர தீவிரவாத எதிர்ப்பு சிறப்புப் போலீசுப்படைத் தலைவரான ஹேமந்த் கார்கரே கண்டறிந்தார். கடந்த 2008-ஆம் ஆண்டில் பிரக்யா சிங் கைது செய்யப்பட்டாள்.

அவளைத் தொடர்ந்து முன்னாள் இராணுவ அதிகாரியான சிறீகாந்த் புரோகித், ஜம்முவில் சாரதா பீடம் என்ற பெயரில் ஆசிரம் நடத்தி வந்த தயானந்த் பாண்டே மற்றும் மலேகான் குண்டுவெடிப்பில் ஈடுபட்ட 11 பேரை ஹேமந்த் கார்கரே கைது செய்தார். பிரக்யா சிங்கை விசாரணை செய்த போது, ம.பி.யைச் சேர்ந்த சுனில்ஜோஷி, ராமச்சந்திர கல்சங்கரா, சந்தீப் டாங்கே, அசீமானந்தா, பாரத் ரித்தேஷ்வர் முதலானோர் முக்கிய சதிகாரர்கள் என்பது தெரிய வந்தது. விசாரணை நடந்து கொண்டிருந்தபோதே 2008, நவம்பர் 26 அன்று மும்பையில் நடந்த இஸ்லாமியத் தீவிரவாதிகளின் தாக்குதலில் கார்கரே பலியானார். இதற்கிடையே சுனில்ஜோஷி இந்துவெறி பயங்கரவாதிகளாலேயே கொல்லப்பட்டான். மற்றவர்கள் தப்பியோடி தலைமறைவாகிவிட்டனர்.

மலேகான் மற்றும் சம்ஜவ்தா எக்ஸ்பிரசில் வெடித்த குண்டுகள் ஆர்.டி.எக்ஸ். ரகத்தைச் சேர்ந்தவையாக இருந்ததால், இக்குண்டு வெடிப்புகளில் இந்துவெறி பயங்கரவாதிகளுக்குத் தொடர்பு இருக்கலாம் என்ற கோணத்தில் சி.பி.ஐ. விசாரணையை மேற்கொண்டது. தயானந்த் பாண்டேயின் கணினியிலிருந்து கிடைத்த 37 உரையாடல்கள் பதிவு செய்யப்பட்டன. இவையனைத்தும் பயங்கரவாதத் தாக்குதலுக்கு இவர்கள் திட்டமிட்டதை நிரூபித்துக் காட்டின. இதனடிப்படையில், கடந்த 2010-ஆம் ஆண்டு நவம்பர் 19-ஆம் தேதியன்று ஆர்.எஸ்.எஸ்.-இன் முழுநேர ஊழியரான சுவாமி அசீமானந்தா எனப்படும் நாப குமார் சர்க்கார் கைது செய்யப்பட்டு சிறையிடப்பட்டான். ஒரு மாதம் கழித்து டிசம்பர் 18-ஆம் தேதியன்று டெல்லி வழக்கு மன்றத்துக்கு விசாரணைக்குக் கொண்டுவரப்பட்ட அசீமானந்தா, இக்குண்டுவைப்புகளில் ஈடுபட்டது நாங்கள்தான் என்று ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளான். போலீசாரின் முன்னிலையில் பெறப்படும் வாக்குமூலங்களை விட, நீதிபதி முன்னிலையில் அளிக்கப்பட்ட வாக்குமூலங்கள் சட்டப்படி உறுதியான ஆதாரங்களாகியுள்ளதால், குண்டுவைப்பு பயங்கரவாதச் செயல்களில் இந்துவெறி ஆர்.எஸ்.எஸ். ஈடுபட்டிருப்பது சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணமாகியுள்ளது.

மே.வங்கத்தைச் சேர்ந்த நாப குமார் எனப்படும் அசீமானந்தா, 1977-இல் ஆர்.எஸ்.எஸ்-இன் முழுநேர ஊழியனாகி மே.வங்கத்திலும் பின்னர் அந்தமானிலும் ஆர்.எஸ்.எஸ்.-இன் பரிவாரங்களில் ஒன்றான வனவாசி கல்யாண் ஆசிரமத் தலைவராகப் பணியாற்றியுள்ளான். பின்னர் 1997-இல், இவன் குஜராத்தின் டாங் மாவட்டத்தில் ஷப்ரிதாம் என்னும் ஆசிரமத்தை



படிப்பகம்

www.padippakam.com

நிறுவிக் கொண்டு சிறுபான்மை முஸ்லிம்களுக்கும் கிறித்துவர்களுக்கும் எதிராக ஆத்திரமூட்டும் பிரச் சாரத்தை மேற்கொண்டு வந்தான். இவன் குஜராத் முதல்வர் மோடி, ம.பி. முதல்வர் சிவராஜ்சிங் சௌகான், ஆர்.எஸ்.எஸ். தலைவர்களான சுதர்சன், மோகன் பாகவத் ஆகியோருக்கு நெருக்கமானவன். பயங்கரவாதிகளின் சித்தாந்த குருவான இவன்தான் அஜ்மீர், ஐதராபாத், மலேகான் முதலான இடங்களில் குண்டுவைக்க இலக்குகளைத் தீர்மானித்து வழிகாட்டி யுள்ளான். 2008-இல் பெண் சாமியாரான பிரக்யா சிங் கைது செய்யப்பட்ட பிறகு, அசீமானந்தா தப்பியோடி தலைமறைவாகிவிட்டான். கடந்த 2010 நவம்பர் 19-ஆம் தேதியன்று அரித்துவாரில் பதுங்கியிருந்தபோது சி.பி.ஐ.யால் கைது செய்யப்பட்டான்.

தன்னோடு இக்குண்டுவைப்பு சதியில் ஈடுபட்ட ஆர்.எஸ்.எஸ். மத்தியக் கமிட்டி உறுப்பினர் இந்திரேஷ் குமார், மத்தியப் பிரதேச ஆர்.எஸ்.எஸ். முழுநேர ஊழி யரான (பிரச்சாரக்) சுனில் ஜோஷி, இந்தூர் மாநகர ஆர்.எஸ்.எஸ். முழுநேர ஊழியரான சந்தீப் டாங்கே, மூத்த ஆர்.எஸ்.எஸ். முழுநேர ஊழியரான ராம்ஜி, தேவேந்திர குப்தா, மேல்மட்ட உறுப்பினரான சிவம் தாக்கத், முன்னாள் இராணுவ அதிகாரியான சிறீகாந்த் புரோஹித், பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினரான யோகி ஆதித்யானந்த், குஜராத்தின் விவேகானந்தா சேவா கேந்திரத்தின் பாரத் பாய், அந்த அமைப்பின் மாநில அமைப்பாளரான டாக்டர் அசோக், முக்கிய பிர முகர்களான லோகேஷ் சர்மா, ராஜேஷ் மிஸ்ரா, ஜம் முவைச் சேர்ந்த சாரதா பீட சாமியார் தயானந்த் பாண்டே ஆகியோரின் பெயர்களையும் அவன் வாக்கு மூலமாக அறிவித்துள்ளான். ''யாருடைய தூண்டு தலோ, நிர்ப்பந்தமோ இல்லாமல், எவ்வித அச்சமு மின்றி சுய நினைவோடு'' தான் இந்த வாக்குமூலத்தை அளிப்பதாகவும் அவன் தெரிவித்துள்ளான்.

ஐதராபாத்தின் சன்சல்குடா சிறை யில் அசீமானந்தா அடைக்கப்பட்ட போது, அந்தச் சிறைக் கொட்டடியில் அவனுடன் இருந்த கைதியான கலீம் என்ற இளைஞர், வயதில் மூத்தவரான அவனுக்குத் தண்ணீர் எடுத்துக் கொடுப்பது, உணவு எடுத்து வந்து கொடுப்பது முதலான பல உதவி களைச் செய்துள்ளார். ஐதராபாத் மெக்கா மசூதி குண்டுவெடிப்பை யொட்டி கைது செய்து சிறையிடப் பட்ட அப்பாவி இளைஞர்தான் கலீம். குண்டு வைத்த அசீமானந்தா, தன்னால் ஒரு அப்பாவி முஸ்லிம் இளைஞன் சிறையில் வதைபடு வதைக் கண்டு வருந்தியதாகவும், மன சாட்சி உலுக்கியதாகவும், அதற்குப் பிராயச்சித்தம் தேடும் வகையில் உண்மைகளை வாக்குமூலமாக அளிப் பதாகவும் தெரிவித்துள்ளான்.

தனது நன்னடத்தையால் அசீமானந்தாவின் மனசாட்சியை உலுக்கிய இஸ்லாமிய இளைஞர்: மெக்கா மசூதி குண்டுவெடிப்பையொட்டி பொய்வழக்கு சோடிக்கப்பட்டு சிறையிடப்பட்ட கலீம்.



இப்பயங்கரவாதச் சதித் திட்டத்தில் முக்கியமான வனாகிய சுனில் ஜோஷி, கடந்த 2007-ஆம் ஆண்டு டிசம்பரில் ஆர்.எஸ்.எஸ். குண்டர்களாலேயே கொல்லப்பட்டான். இக்குண்டுவெடிப்பு வழக்கில் மேலிருந்து கீழ்மட்டம் வரை சங்கிலித் தொடர்போல பலர் கைதாகி வருவதால், ஆர்.எஸ்.எஸ். தலைமை தனது விசுவாச ஊழியனையே கொன்றொழிக்க உத் தரவு பிறப்பித்திருக்க வாய்ப்புள்ளது. இதேபோன்ற நிலைமை தனக்கும் ஏற்படும் என்பதாலும், முஸ்லிம் இளைஞரால் ஏற்பட்ட குற்ற உணர்ச்சியும் சேர்ந்துதான் அசீமானந்தாவை ஒப்புதல் வாக்குமூலத்துக்குத் தள்ளி யிருக்க வேண்டும்.

கடந்த டிசம்பர் 20-ஆம் தேதியிட்டு அசீமானந்தா, இந்திய அரசுத் தலைவிக்கும் பாகிஸ்தான் அதிபருக் கும் பாவமன்னிப்பு கோரி கடிதம் எழுதியுள்ளான். அதில், அஜ்மீர், மலேகான், ஐதராபாத், சம்ஜவ்தா விரைவு வண்டி குண்டு வெடிப்புகளைத் திட்டமிட்டு நடத்தியவர்களில் நானும் ஒருவன் எனக் குறிப்பிட் டுள்ளான். ஐதராபாத்தின் சஞ்சலகுடா சிறையிலிருந்து அவன் எழுதிய இக்கடிதங்கள் இப்போது ஊடகங் களில் பகிரங்கமாகியுள்ளது.

•••

பா.ஜ.க.வும் ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்களும் அசீ மானந்தாவைச் சித்திரவதை செய்து கட்டாயப்படுத்தி வாக்குமூலம் பெறப்பட்டதாகவும், இந்துத்துவப் பயங்கரவாதம் என்ற அவதூறு கிளப்பப்படுவதாகவும் வழக்கம் போலவே கூச்சலிடுகின்றன. ஆனால் அசீ மானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் மட்டுமின்றி, வலுவான தடயவியல் ஆதாரங்களும் சி.பி.ஐ. விசா ரணையில் கிடைத்துள்ளன. புதுப்புது அமைப்புகளை திட்டமிட்டு உருவாக்கி, இத்தகைய பயங்கரவாத நட வடிக்கைகளை அத்தகைய அமைப்புகளின் பெயரால் நடத்தி வருவதை ஆர்.எஸ்.எஸ். ஒரு உத்தியாகக் கொண்டு இயங்கி வரு வதும் இப்போது நிரூபணமாகி யுள்ளது.

ஐதராபாத் மெக்கா மசூதி குண்டு வெடிப்புக்குப் பயன்படுத் தப்பட்ட நோக்கியா செல்போனும் அதிலுள்ள வோடபோன் சிம் கார்டும் குண்டு வைக்கப்பட்ட இடத்தில் கிடைத்துள்ளன. இது, குறிப்பிட்ட நேரத்தில் அலாரம் அடிக்குமாறு செய்து அதன் மூலம் மின் இணைப்பு பெற்று குண்டு களை வெடிக்கச் செய்யும் அதிநவீன தொழில்நுட்ப முறையாகும். இதே போன்ற செல்போன் மூலமாக குண்டுகளை வெடிக்கச் செய்யும் முறையில்தான் சம்ஜவ்தா விரைவு வண்டியிலும் குண்டு வெடித் துள்ளது. மெக்கா மசூதியில் 6.53



படிப்பகம்

www.padippakam.com



**ஆர்.எஸ்.எஸ். ஒரு பயங்கரவாத அமைப்பு என்று நிரூபணமாகியிருப்பது மட்டுமல்ல; நாட்டுக்கும் மக்களுக்கும் பேரபாயமாகிவிட்ட இப்பயங்கரவாத கும்பலைக் கடுமையான நடவடிக்கைகள் மூலமாகவோ, சட்டரீதியாகவோ, ஓட்டுக்கட்சிகளின் தேர்தல் வெற்றிகள் மூலமாகவோ வீழ்த்திட முடியாது என்பதும் இப்போது நிரூபணமாகியுள்ளது.**

வாட்ஸ் திறன் கொண்ட பேட்டரி பயன்படுத்தப்பட்டது. அதே வகையான பேட்டரிகள்தான் சம்ஜவ்தா விரைவு வண்டி குண்டு வெடிப்பிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. குண்டுக்கான வார்ப்பு இரும்பு உலோகமும் ஒரே மாதிரியாக இருந்துள்ளன. இத்தடயவியல் ஆதாரங்களின் அடிப்படையில்தான் இக்குண்டுவெடிப்புகள் அனைத்திலும் ஒரு இந்துவெறி பயங்கரவாத கும்பல் ஈடுபட்டுள்ளதென புலனாய்வுத் துறையினர் அறுதியிட்டனர்.

செல்போன்கள் வாங்கப்பட்ட இடமும், வாங்கிய நபரின் பெயர் பாபுலால் யாதவ் என்பதும், போலியான ஆவணங்களைக் கொடுத்து இதேபெயரில் 11 சிம் கார்டுகள் வாங்கப்பட்டிருப்பதும் விசாரணையில் தெரிய வந்தன. பாபுலால் யாதவ் வாங்கிய செல்போன்களின் குறியீட்டு எண்ணை வைத்து அவற்றில் நான்கு செல்போன்களை ராஜஸ்தானிலுள்ள ஆர்.எஸ்.எஸ் முழுநேர ஊழியர்கள் பயன்படுத்தி வருவதை வைத்து, அவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மூலமாக பாரத் ரித்தேஷ்வர் உள்ளிட்ட இதர சதிகாரர்கள் சிக்கினர்.

இவர்கள் மகாராஷ்டிரா, குஜராத், ராஜஸ்தான் முதலான பிற மாநிலங்களிலிருந்தும் இப்பயங்கரவாதச் செயல்களுக்கு ஆட்களைத் திரட்டியுள்ளனர். ஆர்.எஸ்.எஸ். மட்டுமின்றி அதன் பரிவாரத்தைச் சேர்ந்த பஜ்ரங்தள், விசுவ இந்து பரிஷத், அபிநவ் பாரத், ஜெய் வந்தேமாதரம், வனவாசி கல்யாண் ஆசிரமம் முதலானவற்றிலிருந்தும் ஆட்களைப் பொறுக்கியெடுத்து மூன்று குழுக்களை உருவாக்கினர். இதன்படி, ஒரு குழு நிதி ஏற்பாடுகளையும் வாகன ஏற்பாடுகளையும் செய்யும். அடுத்த குழு, வெடிகுண்டுகளையும் தேவையான சாதனங்களையும் ஏற்பாடு செய்யும். கடைசியாக உள்ள குழு, குண்டு வைப்புகளில் ஈடுபடும். ஒரு குழுவினருக்கு மற்ற குழுவினர் பற்றித் தெரியாது. இதனால் ஒருவர் கைது செய்யப்பட்டாலும் மற்ற குழுவினர் பற்றித் தெரியாது. இந்தச் சதித் திட்டத்துடன்தான் இப்பயங்கரவாதக் கும்பல் இயங்கியது என்பதும் இப்போது ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இவை மட்டுமின்றி, 2002-இல் குஜராத் பயங்கரவாதப் படுகொலைகளைத் தொடங்கிவைத்த கோத்ரா எம்.எல்.ஏ.வான ஹரேஷ் பட்டுக்குச் சொந்தமான பட்டாசுத் தொழிற்சாலையில், டீசல் வெடிகுண்டுகளும் பைப் வெடிகுண்டுகளும் தயாரிக்கப்பட்டு குஜராத் பயங்கரவாதப் படுகொலையின்போது இந்துவெறி பயங்கரவாதிகளுக்கு விநியோகிக்கப்பட்டன என்பதும், சபர்கந்தா மாவட்ட விசுவ இந்து பரிசத்தின் தலைவரான தவால் ஜெயந்தி பட்டேலின் கல்குவாரியில் ஆர்.டி.எக்ஸ். ரக வெடிகுண்டுகள் ஏராளமாகத் தயாரிக்கப்பட்டு வெளியிடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்பதும் ஏற்கெனவே ஆதாரங்களுடன் நிரூபணமாகியுள்ளது. மேலும், கடந்த 2007-ஆம் ஆண்டில் ''தெகல்கா'' வார இதழ் குஜராத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக பார்ப்பன பாசிச பயங்கரவாதிகள் நடத்திய கொலைவெறியாட்டத்தையும், இந்துவெறி பயங்கரவாதிகளிடையே ஊடுருவி அந்தக் கொடூரங்களை அரங்கேற்றியவர்களின் வாயிலிருந்தே மறுக்க முடியாத ஒப்புதல் வாக்குமூலங்களையும் ஆதாரங்களுடன் வெளியிட்டது. கடந்த 2007-ஆம் ஆண்டு தென்காசியில் நடந்த குண்டுவெடிப்பை நிகழ்த்தியவர்கள் இந்து முன்னணி கும்பலைச் சேர்ந்தவர்கள்தான் என்பதும் நிரூபணமாகியுள்ளது.

உண்மைகள் அம்பலமானபோதிலும், ம.பி.யில் பா.ஜ.க. ஆட்சியில் இருந்ததால் இந்துவெறி பயங்கரவாதிகள் கைது செய்யப்படவில்லை. நெருக்கடிகள் அதிகரித்த பின்னரே ம.பி. போலீசு வேறு வழியின்றி இந்துவெறி பயங்கரவாதிகளில் சிலரைக் கைது செய்தது. அஜ்மீர், மெக்கா மசூதி விசாரணைகளில் உண்மைகள் வெளிவந்துள்ள போதிலும், ராஜஸ்தான் மற்றும் ஆந்திரப் போலீசார் குற்றவாளிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆந்திராவிலும் ராஜஸ்தானிலும் அப்பாவி முஸ்லிம்கள் சிறையில் வதைக்கப்பட்ட பின்னர், அவர்கள் குற்றமற்றவர்கள் என்று தீர்ப்பாகிய போதிலும், வேறொரு பொய்வழக்கு சோடித்து அவர்களை மீண்டும் சிறையிலடைத்து வதைத்தது, இம்மாநிலங்களின் போலீசு.

இந்துவெறி ஆர்.எஸ்.எஸ்.-இன் பயங்கரவாதம் அடுத்தடுத்து வெளியான போதிலும், ஒருசில ஆங்கில ஊடகங்கள் மட்டுமே இவற்றை வெளியிட்டுள்ளனவே தவிர, தமிழகம் மற்றும் பிற மாநிலங்களில் அவை திட்டமிட்டே மறைக்கப்பட்டு வருகின்றன. அதேசமயம், தீவிரவாதிகள் என்றாலே முஸ்லிம்களும் நக்சல்பாரிகளும்தான் என்ற கருத்து ஊடகங்களால் திட்டமிட்டு உருவாக்கப்படுகிறது. இந்த அடிப்படையிலேயே போலீசும் அதிகார வர்க்கமும் ஒரு



படிப்பகம்

www.padippakam.com

தலைப்பட்சமாக அணுகுகின்றன. மதச்சார்பற்றவர்களாகக் கூறிக்கொள்ளும் ''இந்து''க்களே கூட ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள் இரகசிய குண்டுவைப்புகள் மூலம் அப்பாவி பொதுமக்களைக் கொல்லும் பயங்கரவாதச் செயல்களில் இறங்க மாட்டார்கள் என்றே இன்னமும் கருதுகின்றனர்.

ஆர்.எஸ்.எஸ். ஒரு பயங்கரவாத அமைப்பு என்பது நிரூபிக்கப்பட்டுள்ள போதிலும், பல்வேறு சாட்சியங்கள், தடயவியல் ஆதாரங்கள், ஒப்புதல் வாக்கு மூலங்கள் வாயிலாக தெளிவாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள போதிலும், இந்துவெறி பயங்கரவாத ஆர்.எஸ்.எஸ். பரிவாரம் சட்டபூர்வமாகத் தடை செய்யப்படவில்லை. தண்டிக்கப்படவும் இல்லை. உண்மைகள் அடுத்தடுத்து வெளிவந்துள்ள போதிலும், எந்த ஓட்டுக் கட்சியும் இதுகுறித்து வாய்திறப்பதுமில்லை. இந்துக்கள் பெரும்பான்மையாக இருப்பதாலும், இந்நாட்டின் அரசியலமைப்பு முறையின் பிரிக்கமுடியாத அங்கமாக இந்துத்துவம் கோலோச்சுவதாலும் அரசும் ஓட்டுக்கட்சிகளும் ஊமையாகி நிற்கின்றன.

ஆர்.எஸ்.எஸ். ஒரு பயங்கரவாத அமைப்பு என்று நிரூபணமாகியிருப்பது மட்டுமல்ல; நாட்டுக்கும் மக்களுக்கும் பேரபாயமாகிவிட்ட இப்பயங்கரவாத கும்பலை கடுமையான நடவடிக்கைகள் மூலமாகவோ, சட்டரீதியாகவோ, ஓட்டுக்கட்சிகளின் தேர்தல் வெற்றிகள் மூலமாகவோ வீழ்த்திட முடியாது என்பதும் இப்போது நிரூபணமாகியுள்ளது. பார்ப்பனியத்தால் இந்து எனும் பெயரில் அடிமைப்படுத்தப்பட்டிருக்கும் பெரும்பான்மை உழைக்கும் மக்களை ஒன்றிணைத்துப் போராடுவதும், இக்கொடிய பயங்கரவாத மிருகங்களை அம்பலப்படுத்தி மக்களிடமிருந்து தனிமைப்படுத்துவதும், நேருக்குநேராக நின்று எதிர்த்து முறியடிப்பதும் மதச்சார்பற்ற-ஜனநாயக சக்திகளின் அவசர அவசியக் கடமையாகியுள்ளது.

● தனபால்



# செங்கொடி வரலாறு திரும்புகிறது! கோவை மீண்டும் சிவக்கிறது!

## – கோவை மண்டலப் பஞ்சாலைத் தொழிலாளர் சங்க வெற்றிவிழா பொதுக்கூட்டம்

கடந்த டிசம்பர் 18-ஆம் தேதியன்று கோவை என்.டி.சி. மில் தொழிற்சங்க அங்கீகாரத்துக்கான தேர்தலில் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியுடன் இணைந்துள்ள கோவை மண்டல பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் பெருவெற்றி பெற்றது (பார்க்க: பு.ஜ. ஜனவரி 2011 இதழ்). இம்மகத்தான வெற்றியைப் பறைசாற்றியும், தொழிலாளர்களுக்கு நம்பிக்கையையும் போராட்ட உணர்வையும் ஊட்டும் வகையிலும் கடந்த ஜனவரி 9-ஆம் நாளன்று கோவை - பீளமேடுபுதூர் சந்தை மைதானத்தில் இத்தொழிற்சங்கத்தின் சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

ஏறத்தாழ ஆயிரம் பேருக்கும் மேலான தொழிலாளர்கள் தமது குடும்பத்துடன் திரண்டிருந்த இக்கூட்டத்தைப் பார்த்து, கடந்த முப்பதாண்டுகளில் இதுபோல வர்க்க உணர்வுடன் தொழிலாளர்களின் கூட்டம் நடந்ததேயில்லை என்று மூத்த தலைமுறையைச் சேர்ந்த தொழிலாளர்கள் பேருற்சாகத்துடன் வாழ்த்தினர்.

செங்கொடிகள் பட்டொளி வீசப் பறக்க, மேடையில் என்.டி.சி. யின் ஏழு மில்களைச் சேர்ந்த சங்கத் தலைவர்கள் முன்னிலை வகிக்க, தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்திக் கூட்டம் தொடங்கியது. ஏழு மில்களின் சங்கப் பிரதிநிதிகளும், பு.ஜ.தொ.மு. மாவட்டச் செயலாளர்களும், மாநிலச் செயலர் தோழர் சுப.தங்கராசுவும், ம.க.இ.க. மாநிலச் செயலர் தோழர் மருதையனும் சிறப்புரையாற்றினர். தோழர் மருதையன் ஆற்றிய சிறப்புரை, துவண்டு கிடந்த கோவைத் தொழிலாளி வர்க்கத்துக்கு புதிய நம்பிக்கையை அளிப்பதாக அமைந்தது. போராட்ட உணர்வைத் தட்டியெழுப்பிய ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலை நிகழ்ச்சியால் உந்தப்பட்ட பல தொழிலாளிகள் அடுத்தடுத்து போட்டி போட்டுக் கொண்டு மேடையில் வந்து நன்கொடைகளை அளித்தனர்.

தொழிலாளி வர்க்கத்துக்கு அவநம்பிக்கைக்கு மாற்றாக நம்பிக்கையையும், துரோகத்துக்கு எதிராக தியாகத்தையும், கருங்காலித்தனத்துக்கு எதிராகப் போர்க்குணத்தையும் தனது பதாகையில் ஏந்தி நிற்கும் புரட்சிகர தொழிற்சங்கத்தின் இந்த வெற்றிவிழா பொதுக்கூட்டம், தொழிலாளி வர்க்கத்திடம் புதிய நம்பிக்கையை விதைத்துப் புதிய போராட்டப் பாதையைக் காட்டியுள்ளது. தொழிலாளி வர்க்கத்தின் உரிமைகளுக்காகப் போராடுபவர்கள் யாரோ, போராடக் கற்றுக் கொடுப்பவர்கள் யாரோ, இழப்புகளை முன் வந்து ஏற்பவர்கள் யாரோ, அவர்கள் மட்டும்தான் தொழிலாளி வர்க்கத்தின் நம்பிக்கையைப் பெற முடியும் என்பதை இப்பொதுக்கூட்டம் நிரூபித்துக் காட்டியது.

தகவல்: பு.ஜ.தொ.மு., கோவை.



படிப்பகம்

www.padippakam.com

## சேலம் ஜி.டி.பி. நிறுவனத்தின் அட்டூழியத்துக்கு எதிராக

# தொழிலாளி வர்க்கத்தின் அதிரடிப் போராட்டம்!

**சேலம்** - மாமாங்கத்திலுள்ள ஜி.டி.பி. கிரானைட்ஸ் நிறுவனத்தில் தொழிற்சங்கம் அமைத்த ஒரே காரணத்திற்காக, கடந்த அக்டோபர் 2007-இல் இந்நிறுவனத்தைச் சேர்ந்த 53 தொழிலாளர்கள் திடீர் வேலைநீக்கம் செய்யப்பட்டனர். இச்சட்டவிரோத வேலை நீக்கத்துக்கு எதிராகவும், கடந்த மூன்றாண்டுகளுக்கும் மேலாக வேலையிழந்த தொழிலாளர் குடும்பங்கள் பட்டினியால் பரிதவிப்பதை உணர்த்தியும் மாவட்ட ஆட்சியரிடமும் தொழிலாளர் துறையிடமும் பலமுறை மனு கொடுத்தும்கூட, இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. உண்ணாவிரதம், கண்டன ஆர்ப்பாட்டம், மனிதச் சங்கிலி -எனத் தொழிலாளர்கள், தமது குடும்பத்தோடு பல போராட்டங்களை நடத்திய போதிலும் ஆலை நிர்வாகமோ, அதிகார வர்க்கமோ அசைந்து கொடுக்கவில்லை.

இந்நிலையில் கடந்த 3.1.2011 அன்று மக்கள் குறை தீர்க்கும் முகாம் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடந்தபோது, பு.ஜ.தொ.மு.வின் ஜி.டி.பி. கிளைச் சங்கத்தைச் சேர்ந்த 70 தொழிலாளர்கள் தமது குடும்பத்துடன் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வந்து மீண்டும் மனு கொடுத்தனர். இதுவரை 12 முறை மனு கொடுத்த போதிலும் எந்த நடவடிக்கையும் எடுக்காத ஆட்சியர் சந்திரகுமார், நிர்வாகத்திடம் பேசிவிட்டுப் பொங்கலுக்குப் பிறகு சொல்வதாக மீண்டும் தட்டிக் கழித்தார். கடந்த மூன்றாண்டுகளாக இதையே சொல்லி ஏய்த்து வருவதை அனைவரின் முன்பாகப் போட்டுடைத்த ஜி.டி.பி. கிளைச் செயலாளர் தோழர் கண்ணன், ''நீங்கள் சொல்கிற தேதியை எழுதிக் கையெழுத்து போட்டுக் கொடுங்கள்'' என்று கோரினார்.

ஆத்திரமடைந்த ஆட்சியர், ''நீ யார்? யாருக்கிட்டே பேசிக்கிட்டு இருக்கேன்னு தெரியுமா?'' என்று அதிகாரத் திமிரில் சீற, உடனே அனைத்துத் தொழிலாளர்களும் ''இன்றே எங்களுக்கு ஒரு முடிவைத் தெரிவியுங்கள்; உங்கள் அதிகாரத்தைக் கொண்டு ஜி.டி.பி முதலாளியை உடனே அழைத்துப் பேசுங்கள்'' என்று கூறி, அப்படியே தரையில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். இதை ஊடகங்கள் படமெடுப்பதைக் கண்ட ஆட்சியர், ''என்ன, ரகளை பண்றீங்களா? வெளிய வர முடியாத செக்சன்ல தூக்கி உள்ள போட்ருவேன்!'' என்று மிரட்டிப் பார்த்தும் பலனில்லாததால், அனைவரையும் கைது செய்ய உத்தரவிட்டார். ஆட்சியர் அலுவலகத்தில் இப்படியொரு போராட்டத்தைப் பார்த்திராத அதிகாரிகளும் ஊழியர்களும் அதிர்ச்சியில் உறைந்து போயினர்.



பெண்கள், குழந்தைகளோடு கைது செய்யப்பட்டு ஒரு திருமண மண்டபத்தில் அடைத்து வைக்கப்பட்டிருந்த தொழிலாளர்கள், போலீசார் கொடுத்த மதிய உணவை மறுத்து உண்ணாநிலை போராட்டத்தை மேற்கொண்டனர். கைதான தொழிலாளர்கள் அன்று மாலையில் விடுவிக்கப்பட்டனர். ''குடும்பத்துடன் கைது செய்யப்பட்ட ஜி.டி.பி. தொழிலாளர்களை விடுதலை செய்!'' என்ற முழக்கத்துடன் நகரெங்கும் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளும், நாளேடுகளில் வெளியான செய்திகளும் இந்நியாயமான போராட்டத்தை மக்களிடம் பிரச்சாரப்படுத்தியதால், தலைமைச் செயலகத்திலிருந்து சேலம் மாவட்ட ஆட்சியரிடம் விளக்கம் கேட்டு நெருக்குதல் கொடுக்கப்பட்டதாக அதிகாரத் தாழ்வாரங்களிலிருந்து தகவல் கசிந்துள்ளன.

இப்போராட்டத்தின் விளைவாக, கடந்த ஜனவரி 19-20 தேதிகளில் மாவட்ட ஆட்சியரின் முன்பாக பேச்சுவார்த்தைக்கு வந்த ஜி.டி.பி. நிர்வாகத்தினர், சங்கத்தின் முன்னணியாளர்கள் 8 பேரைத் தவிர மற்றவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்வதாகக் கூறியதை பு.ஜ.தொ.மு. ஏற்க மறுத்துவிட்டது. நிர்வாகத்தினர் இது பற்றிப் பரிசீலித்து மீண்டும் பேச்சுவார்த்தைக்கு வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

தொழிலாளர் உரிமைகளும் தொழிற்சங்க உரிமைகளும் பறிப்பு, திடீர் வேலைநீக்கம், பழிவாங்குதல்கள் எனத் தொடரும் முதலாளித்துவப் பயங்கரவாதத்தையும், அதற்குத் துணைநிற்கும் அதிகார வர்க்கத்தையும், மறுகாலனியாக்கம் என்றால் என்ன என்பதையும் ஜி.டி.பி. கிரானைட் தொழிலாளர்கள் தங்களது போராட்டத்தின் மூலம் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளனர். முதலாளிகளின் கொட்டத்துக்கும் அதிகார வர்க்கத்தின் திமிருக்கும் எத்தகைய போராட்டங்களின் மூலம் பதிலடி கொடுக்க வேண்டும் என்பதையும் பு.ஜ.தொ.மு. தலைமையிலான தொழிலாளர்களின் இப்போராட்டம் நிரூபித்துக் காட்டியுள்ளது.

-பு.ஜ. செய்தியாளர்,
சேலம்.



படிப்பகம்

www.padippakam.com

## ஸ்டெயின்ஸ் பாதிரியார் கொலை வழக்குத் தீர்ப்பு:

# நீதிமன்றமா? காவிமன்றமா?

**ஸ்டெயின்ஸ் பாதிரியார் கொலை வழக்கிலும், உச்ச நீதிமன்றத்தின் காவித்தனம் அம்பலமாகிவிட்டது.**

ஒரிசா மாநிலத்தில் கடந்த 1999-ஆம் ஆண்டு பஜ்ரங் தள்ளைச் சேர்ந்த தாரா சிங் என்ற இந்து பயங்கரவாதியின் தலைமையில் வந்த கும்பலொன்று, அம்மாநிலத்தில் மதப் பிரச்சாரம் செய்து வந்த ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த கிறித்துவப் பாதிரியார் கிரஹாம் ஸ்டெயின்ஸையும், சிறுவர்களான பிலிப், திமோதி என்ற அவரது இரு மகன்களையும் - அவர்கள் மூவரும் ஒரு ஜீப்பில் உறங்கிக் கொண்டிருந்த வேளையில் உயிரோடு எரித்துக் கொன்றனர். இப்பயங்கரவாதப் படுகொலையைச் செய்த தாரா சிங் உள்ளிட்ட 13 பேரையும் குற்றவாளிகள் என அறிவித்த குர்தா குற்றவியல் நீதிமன்றம், தாராசிங்கிற்குத் தூக்கு தண்டனையும், மற்ற 12 குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தது.

இவ்வழக்கின் மேல்முறையீட்டில், ஒரிசா உயர் நீதிமன்றம் தாரா சிங்கிற்கு விதிக்கப்பட்ட தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தது; ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட மற்ற 12 குற்றவாளிகளுள் மகேந்திரா ஹெம்ப்ராம் என்பவனின் தண்டனையை மட்டும் உறுதி செய்து, மீதி 11 குற்றவாளிகளையும் நிரபராதிகள் என விடுதலை செய்து தீர்ப்பளித்தது.

ஒரிசா உயர் நீதிமன்றத்தின் இத்தீர்ப்பை எதிர்த்து சி.பி.ஐ. தொடுத்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், ஒரிசா உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை இம்மி பிசகாமல் உறுதி செய்து தீர்ப்பளித்திருக்கிறது. ‘‘அரிதினும் அரிதான வழக்குகளில் மட்டுமே மரண தண்டனை விதிக்க வேண்டும்; அதுவும் அந்தந்த சம்பவத்தின் உண்மை நிலை, சூழ்நிலையை பொறுத்தே அமைய வேண்டும்; இவ்வழக்கில் பாதிரியார் ஸ்டெயின்ஸும் அவரது இரு குழந்தைகளும் உறங்கிக் கொண்டிருந்த வேளையில் எரித்துக் கொல்லப்பட்டிருந்தாலும், (குற்றவாளிகளின்) நோக்கம் மதப் பிரச்சாரம் என்ற பெயரில் ஏழை பழங்குடியின மக்களைக் கிறித்தவ மதத்திற்கு மாற்றிக் கொண்டிருந்த பாதிரியார் ஸ்டெயின்ஸுக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டும் என்பதுதான்’’ எனக் குறிப்பிட்டு, தாரா சிங்கின் தண்டனை குறைக்கப்பட்டதை நியாயப்படுத்தியிருக்கிறது. இவ்வழக்கில் சதித் திட்டம் தீட்டப்பட்டதற்கான ஆதாரமும் இல்லை என்றும் உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

1999-ஆம் ஆண்டு ஸ்டெயின்ஸ் பாதிரியார் தனது குழந்தைகளோடு எரித்துக்கொல்லப்பட்டபொழுது நாட்டில் நிலவிய சூழ்நிலை என்ன? அப்பொழுது வாஜ்பாயின் தலைமையில் பா.ஜ.க. கூட்டணி ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. தாழ்த்தப்பட்டவர்களும் பழங்குடி மக்களும் இந்து மதத்தில் இருந்து தப்பித்து ஓடுவதைத் தடுக்கும் முகமாக, ‘‘மதமாற்றம் பற்றித்

இந்து மதவெறி பயங்கரவாதிகளால் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்ட கிறித்தவப் பாதிரியார் கிரஹாம் ஸ்டெயின்ஸ், அவரது இரு மகன்கள் பிலிப், திமோதி மற்றும் தீயில் எரிந்து கருகிப்போன ஜீப்.





படிப்பகம்

www.padippakam.com

தேசிய விவாதம் நடத்த வேண்டும்'' என ஆர்.எஸ்.எஸ். கும்பல் கூச்சல் போட்டுக் கொண்டிருந்ததோடு, மைய அரசு அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு மத மாற்றத் தடைச் சட்டத்தைக் கொண்டுவரவும் முயன்று கொண்டிருந்தது.

இதற்கு இணையாக இன்னொருபுறம் குஜராத்திலுள்ள டாங்ஸ் மாவட்டத்தில் கிறித்தவர்கள் மீதும் தேவாலயங்கள் மீதும் தாக்குதலை நடத்தி வந்தது, ஆர்.எஸ்.எஸ். இத்தாக்குதலுக்கு அம்மாநில பா.ஜ.க. அரசு துணை நின்றது. இதே காலகட்டத்தில் ஒரிசாவில் பா.ஜ.க. - பிஜு ஜனதாதள் கூட்டணி ஆட்சிதான் நடைபெற்று வந்தது. நாடெங்கிலும் கிறித்தவர்களைக் குறிவைத்துத் தாக்குவது என்ற ஆர்.எஸ்.எஸ். திட்டத்தின் ஒரு பகுதியாகத்தான் ஸ்டெயின்ஸ் பாதிரியாரை உயிரோடு கொளுத்தும் சதித் திட்டம் நிறைவேற்றப்பட்டது.



உச்சநீதிமன்றத்தின் அனுக்கிரஹத்தைப் பெற்ற இந்து பயங்கரவாதி தாராசிங். (கோப்புப் படம்).

உச்ச நீதிமன்றம் கூறியிருப்பது போல ஸ்டெயின்ஸ் பாதிரியாருக்கு ஒரு பாடம் புகட்டுவது மட்டும்தான் தாரா சிங்கின் நோக்கம் என்றால், அவர் தனது இரு குழந்தைகளோடு தூங்கிக் கொண்டிருக்கும் நேரம் பார்த்து ஜீப்பைக் கொளுத்தியிருக்க வேண்டிய அவசியமே கிடையாது. அவரை எழுப்பி மிரட்டிவிட்டு, ரெண்டு தட்டுதட்டிவிட்டுப் போயிருக்கலாம். ஆனால், தாரா சிங் தலைமையில் வந்த கும்பலோ, மனோகர்பூர் கிராமத்திற்குள் நுழைந்தவுடன், அக்கிராமத்தின் தகவல் தொடர்புகளைத் துண்டித்தனர். தீ வைக்கப்பட்ட ஜீப்பில் இருந்து அம்மூவரும் தப்பித்துவிடாதபடி ஜீப்பைச் சுற்றி நின்றுகொண்ட அக்குண்டர்கள், அம்மூவரும் கருகி இறந்தபின்தான் அக்கிராமத்தை விட்டுத் தப்பிச் சென்றனர்.

ஸ்டெயின்ஸ் பாதிரியாரை உயிரோடு கொளுத்திக் கொல்லுவதன் மூலம், ஆர்.எஸ்.எஸ். கும்பல் மதம் மாற்றும் பாதிரியார்கள், மதம் மாறிய பழங்குடியினரை மட்டுமின்றி, நாடெங்கிலும் உள்ள சிறுபான்மை கிறித்தவ சமூகத்தினர் மத்தியில் பாதுகாப்பற்ற அச்ச உணர்வை உருவாக்க முயன்றது என்பதுதான் உண்மை. இந்தியத் தண்டனைச் சட்டங்களின்படி பயங்கரவாதக் குற்றமாகக் குறிப்பிட்டிருக்க வேண்டிய இக்கொலையை, நீதிபதிகள் சாதாரண கொலை வழக்காக நீர்த்துப் போகச் செய்துவிட்டனர்.

ஒரு உயிரற்ற கட்டிடத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் வழக்கில், அப்பாவியான அப்சல் குருவுக்குத் தூக்கு தண்டனை அளிக்கத் தயங்காத உச்ச நீதிமன்றம், இவ்வழக்கில் இரண்டு குழந்தைகள் உள்ளிட்டு மூவரை உயிரோடு கொளுத்திக் கொன்ற குற்றவாளிக்கு அதிகபட்ச தண்டனை வழங்காமல் கருணை காட்டியிருக்கிறது. எப்பேர்பட்ட நடுநிலை! எப்பேர்பட்ட மதச்சார்பின்மை!

இப்படுகொலை பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட வாத்வா கமிசன், ''1991-க்கும் 1998-க்கும் இடைபட்ட காலத்தில் ஒரிசாவின் கியோஞ்சர் மாவட்டத்தில் - படுகொலை நடந்த பழங்குடியின மக்கள் வசித்து வரும் மாவட்டம் - குறிப்பிடத்தக்க அளவில் கிறித்தவ மக்களின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை. இக்காலகட்டத்தில் கிறித்தவ மக்கள் தொகை அதற்கு முந்தைய காலத்தைவிட 575 எண்ணம்தான் அதிகரித்திருக்கிறது. இது இயற்கையான உயர்வுதான்'' எனக் குறிப்பிட்டுள்ளது. ஆனால், உச்ச நீதிமன்ற நீதிபதிகளோ இந்த உண்மையை ஒதுக்கித் தள்ளிவிட்டு, மதம் மாற்றுவதைத்தான் அபாயகரமானதைப் போலத் தீர்ப்பு எழுதியுள்ளனர்.

''பலவந்தமாகவோ, ஆசை காட்டியோ, மதம் மாற்றியோ, மற்ற மதங்களைவிடத் தன் மதம் உயர்ந்தது என்ற கருத்தின் அடிப்படையிலோ மற்றவர்களது நம்பிக்கைகளில் தலையிடுவதை நியாயப்படுத்த முடியாது'' என்ற நீதிபதிகளின் சூக்குமமான வார்த்தைகளுக்கு, ''கிறித்தவர்கள் மருந்து கொடுத்து, கல்வி கொடுத்துப் பழங்குடியின மக்களை மதம் மாற்றுவது சட்டப்படி குற்றம்'' என்ற ஆர்.எஸ்.எஸ்.-இன் கொள்கையைத்தான் பொழிப்புரையாக எழுத முடியும்.

இக்காவித் தீர்ப்பைக் கண்டித்துப் பல்வேறு தரப்பிலிருந்தும் விமர்சனங்கள் எழுந்தவுடன், ''பாதிரியார் ஸ்டெயின்ஸும் அவரது இரு குழந்தைகளும் உறங்கிக் கொண்டிருந்த வேளையில் எரித்துக் கொல்லப்பட்டிருந்

**ஒரு உயிரற்ற கட்டிடத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் வழக்கில், அப்பாவியான அப்சல் குருவுக்குத் தூக்கு தண்டனை அளிக்கத் தயங்காத உச்ச நீதிமன்றம், இவ்வழக்கில் இரண்டு குழந்தைகள் உள்ளிட்டு மூவரை உயிரோடு கொளுத்திக் கொன்ற குற்றவாளிக்கு அதிகபட்ச தண்டனை வழங்காமல் கருணை காட்டியிருக்கிறது.**



படிப்பகம்

www.padippakam.com

தாலும், (குற்றவாளிகளின்) நோக்கம் மதப் பிரச்சாரம் என்ற பெயரில் ஏழை பழங்குடியின மக்களை கிறித்தவ மதத்திற்கு மாற்றிக் கொண்டிருந்த பாதிரியார் ஸ்டெயின்ஸுக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டும் என்பதுதான்'' என்ற வரிகள் வரும் பத்தியைத் தீர்ப்பில் இருந்து நீதிபதிகள் நீக்கிவிட்டனர்.

இதை நீக்கியவுடன், ''தாரா சிங்கிற்கு மரண தண்டனை அளிக்கப்படாதது ஏன்?'' என்ற கேள்வி வந்துவிடும் என்பதை உணர்ந்திருந்த நீதிபதிகள், ''குற்றம் நடந்து 12 ஆண்டுகள் கடந்துவிட்டதால், ஒரிசா உயர் நீதிமன்றம் அளித்த ஆயுள் தண்டனையை அதிகரிக்கத் தேவையில்லை'' எனத் தீர்ப்பைத் திருத்தியும் விட்டனர்.

தாரா சிங்கிற்கு அதிகபட்ச தண்டனை அளிக்கக்கூடாது என்பதை மனதில் வைத்துக்கொண்டுதான் நீதிபதிகள் செயல்பட்டுள்ளனர் என்பதற்கு இதைவிட வேறென்ன ஆதாரம் வேண்டும்?

600-க்கும் மேற்பட்ட முசுலீம்கள் படுகொலை செய்யப்பட்ட மும்பய்க் கலவரம் நடந்து 17 ஆண்டுகள் கடந்துவிட்டன. 2,000 முசுலீம்கள் படுகொலை செய்யப்பட்ட குஜராத் கலவரம் நடந்து 8 ஆண்டுகள் மறைந்துவிட்டன. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி பார்த்தால், இக்குற்றச் செயல்களைப் புரிந்த இந்து மதவெறி பயங்கரவாதிகளுள் ஒருவருக்குக்கூட அதிகபட்ச தண்டனை அளிக்கவே முடியாது.

''பலவந்தமாகவோ, ஆசை காட்டியோ, மதம் மாற்றியோ, மற்ற மதங்களைவிடத் தன் மதம் உயர்ந்தது என்ற கருத்தின் அடிப்படையிலோ மற்றவர்களது நம்பிக்கைகளில் தலையிடுவதை நியாயப்படுத்த முடியாது'' என்பதற்குப் பதிலாக, ''மற்றவர்களின் மத நம்பிக்கையில் எந்த வழியில் தலையீடு செய்வதையும் நியாயப்படுத்த முடியாது'' எனத் தீர்ப்பு தற்பொழுது மாற்றப்பட்டுள்ளது. முழுக்க நனைந்த பின்னும் முக்காடு போட்டுத் திரிவது என்பது இதுதானோ!

• திப்பு

# கே.ஜி.கண்ணபிரான் (1929- 2010)

# மனித உரிமைகளுக்கான போரின் கலங்கரை விளக்கம்

**அரசியல்–சமூக உரிமைகளைக் காக்க, அரசு பயங்கரவாதத்தை முதன்மை இலக்காகக் கொண்டு போராடியவர், கே.ஜி.கண்ணபிரான்.**

அரசின் அடக்குமுறைக்கு எதிராகவும், உழைக்கும் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காகவும் கடந்த நான்கு தலைமுறைகளாகப் போராடிவந்த முதுபெரும் மனித உரிமைப் போராளி தோழர் கே.ஜி.கண்ணபிரான், நீரழிவு நோயினால் கடந்த டிசம்பர் 30 அன்று தனது 81-வது வயதில் காலமாகிவிட்டார்.

1960-களின் தொடக்கத்தில் ஆந்திர உயர் நீதிமன்ற வழக்குரைஞராகப் பணியாற்றத் தொடங்கிய கண்ணபிரான், ஆந்திரப் பிரதேசக் குடியுரிமைக் கழகத்தில் (APCLC) 15 ஆண்டுகளாகத் தலைவராகவும், பத்தாண்டுகளாகக் குடியுரிமைக்கான மக்கள் கழகத்தின் (PUCL) அனைத்திந்தியத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். தள்ளாத வயதிலும் தற்போது அரசியல் கைதிகள் விடுதலைக்கான கமிட்டியின் தலைவராகப் பணியாற்றி வந்தார்.

1973-இல் தொடங்கப்பட்ட ஆந்திரப் பிரதேசக் குடியுரிமைக் கழகத்தின் நிறுவனர்களில் ஒருவர்தான் கண்ணபிரான். 1975-இல் இந்திராவின் அவசரநிலை பாசிச ஆட்சிப் பிரகடனப்படுத்தப்பட்டுப் புரட்சிகர ஜனநாயக இயக்கங்களும் எதிர்க்கட்சிகளும் ஒடுக்கப்பட்ட நிலையில், கொடிய ''மிசா'' சட்டத்தை எதிர்த்து கண்ணபிரான் நீதிமன்றத்தில் சட்டரீதியாகப் போராட்டம் நடத்தினார். அவசரநிலை பாசிசத்துக்கு எதிரான முதல் சட்டரீதியான போராட்டமும் இதுதான். அவசரநிலை பாசிச ஆட்சிக் காலத்தில் ஆந்திராவின் நக்சல்பாரிப் புரட்சியாளர்களான தோழர்கள் பூமையா, கிஸ்த கவுடா ஆகியோருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டபோது, அவர்கள் அரசியல் கைதிகள் என்பதால் தூக்குத் தண்டனையை நிறுத்தி வைக்க வேண்டுமென சட்டரீதியாக மனு செய்து நீதித்துறையிடம் போராடினார். இப்பாசிச ஆட்சிக் காலத்தில் சிறையிடப்பட்ட 500-க்கும் மேற்பட்ட அரசியல் கைதிகள் மற்றும் சாமானிய மக்களுக்களின் விடுதலைக்காக அவர் நீதிமன்றத்தில் வாதிட்டார்.

அவசரநிலை பாசிச ஆட்சிக் காலத்தில் நடந்த போலீசின் மோதல் படுகொலைகளுக்கு எதிராக அமைக்கப்பட்ட தார்

மனித உரிமைப்போராளி கே.ஜி.கண்ணபிரான்.





படிப்பகம்

www.padippakam.com

குண்டே கமிசனில் கண்ணபிரான் முன்னணிப் பாத்திர மாற்றினார். இப்படுகொலைகள் பற்றி விசாரிக்க நிய மிக்கப்பட்ட பார்கவா கமிசனில் கண்ணபிரான் வாயி லாக ஆதாரபூர்வமான உண்மைகள் செய்தித்தாள்களில் வெளிவரத் தொடங்கியதும், பீதியடைந்த அப்போதைய ஆந்திர முதல்வரான வெங்கல்ராவ், இந்த விசார ணையை இரகசியமாக நடத்தும்படி உத்தரவிட்டார். இதை எதிர்த்து கண்ணபிரானும் ஆந்திரப் பிரதேசக் குடி யுரிமைக் கழகமும் இந்த விசாரணையில் பங்கேற்காமல் புறக்கணித்து, இம்மோதல் படுகொலையின் பின்னே யுள்ள பாசிச அரசியலை அம்பலப்படுத்திக் காட்டினர்.

1980-களில் ஆந்திராவில் நக்சல்பாரி புரட்சிகர விவ சாய இயக்கம் தெலுங்கானா பகுதியில் முன்னேறிய போது, அவற்றை ஒடுக்க மோதல் படுகொலைகளை போலீசு தீவிரப்படுத்தியது. போலீசின் இரகசிய கூலிப் படைகளால் புரட்சியாளர்களும் மனித உரிமைப் போராளிகளும் அடுத்தடுத்து கொல்லப்பட்டு வந்த இருண்ட காலம் அது. உயிருக்கு உத்திரவாதமற்ற சூழல் நிலவிய அக்காலத்தில், போலீசு பயங்கரத்துக்கு எதி ராகத் துணிவோடு கண்ணபிரான் தொடர்ந்து போராடி னார். விசாரணைகள் மூலமும் வழக்குகள் தொடுத்தும் இப்படுகொலைகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தார். 1997முதல் 2007 வரை ஆந்திராவில் 1800 மோதல் படுகொலைகள் நடந்துள்ளதை ஆதாரங்களு டன் அவர் அம்பலப்படுத் தியதால், இப்படுகொலை களுக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப் பட வேண்டும் என்றும், சுயேச்சையான நீதி விசாரணை நடைபெற வேண்டும் என்றும் ஆந்திர உயர் நீதிமன்றம் கூறியது. இது, போலி மோதல் படுகொலைகளுக்கு எதிரான சட்ட ரீதியான போராட்டத்தின் முக்கியமானதொரு வெற்றியாகும்.

**போலீசின் இரகசியக் கூலிப்படைகளால் புரட்சியாளர்களும் மனித உரிமைப் போராளிகளும் அடுத்தடுத்துக் கொல்லப்பட்டு, உயிருக்கு உத்தரவாதமற்ற சூழல் நிலவிய போதிலும் போலீசு பயங்கரத்தை வழக்குகள், விசாரணைகள் மூலம் வெளிச்சத்துக்குக் கொண்டுவந்தார், தோழர் கண்ணபிரான்.**

போலீசின் பயங்கரவாதத்தையும் அதற்கெதிரான நக் சல்பாரி புரட்சியாளர்களின் நியாயமான போராட்டங் களையும் சமப்படுத்தி, இரண்டையும் ''வன்முறை'' என்று கூறும் சில மனித உரிமை அமைப்புகளின் போலித்தனமான 'நடுநிலைக்கு' மாறாக, அரசு பயங் கரவாதத்தை முதன்மை எதிரியாக அவர் உணர்த்தினார். ''மக்களின் நல்வாழ்வுக்காகவும் சமத்துவத்துக்காகவும் மாவோயிஸ்டுகள் உள்ளிட்டு பலதரப்பட்ட இயக் கங்கள் போராடி வருகின்றன. இவற்றுக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமேயன்றி, இதைச் சட்டம்-ஒழுங்கு பிரச்சினையாகப் பார்த்து, போலீசுக்கும் உளவுத்துறைக்கும் எல்லையற்ற அதிகாரத்தை வழங்கி வன்முறைகளில் ஈடுபட அரசு அனுமதிப்பதும், கிரி மினல் சட்டங்களை ஏவி அரசியல் இயக்கங்களை ஒடுக் குவதும் நியாயமென்றால், நமது ஜனநாயகத்தின் பொருள்தான் என்ன?'' என்று கேள்வி எழுப்பினார்.

முற்போக்கு - ஜனநாயக இயக்கங்களின் மீது அர சால் சோடிக்கப்பட்ட சதிவழக்குகளையும், ஏறத்தாழ 400-க்கும் மேற்பட்ட பொதுநல வழக்குகளையும் எவ்விதக் கட்டணமுமின்றித் தானே வழக்காடி, பாதிக்கப்பட் டோரை அடக்குமுறைகளிலிருந்து தோழர் கண்ணபி ரான் மீட்டுள்ளார். சட்டிஸ்கர் முக்தி மோர்ச்சா எனும் தொழிற்சங்க இயக்கத்தின் தலைவரான தோழர் சங்கர் குகா நியோகி, 1993-இல் கொடூரமாகக் கொல்லப்பட்ட போது, கூலிப்படையினர் மட்டுமல்லாது முதலாளி களையும் கைது செய்ய வைத்துக் குற்றவாளிக் கூண்டி லேற்றினார்.

ஈழ அகதிகள் நடுக்கடலில் சுற்றி வளைக்கப்பட்டு இந்தியாவில் சிறையில் வதைக்கப்பட்டபோதும், வீரப் பனுக்கு உதவியதாகக் குற்றம் சாட்டிப் பழங்குடியின மக்கள் ''தடா'' சட்டத்தில் வதைக்கப்பட்ட போதும், கோவை குண்டு வெடிப்பு வழக்குகளில் அப்பாவிகள் சித்திரவதை செய்யப்பட்ட போதும், அவர் நீதிமன்றங் களில் போலீசின் பயங்கரத்துக்கு எதிராகப் பல வழக்கு களில் வாதிட்டார். அக்கறையுள்ள குடிமக்கள் கமிட்டி யின் சார்பில் அவர் குஜராத்தில் நடந்த இந்துவெறி பாசிச பயங்கரவாதப் படுகொலைகள் பற்றி விசாரணை நடத் தும் குழுவிலும் இடம் பெற்றார். சர்வதேச கடல் பகு தியில் பயணித்த விடுதலைப் புலிகளின் படகை அடா வடியாகக் கைப்பற்றி இந்திய அரசு வழக்கு தாக்கல் செய்த போது, பழ.நெடுமாறன் சார்பில் வாதிட்டு அந்த வழக்கில் வெற்றி பெற்றார். முன்னாள் இராணுவ சுபே தார் நல்லகாமன் தொடுத்திருந்த போலீசு எஸ்.பி.பிரேம் குமார் மீதான வழக்கில், மதுரை உயர் நீதிமன்றத்தில் வாதிட்ட தோழர் கண்ணபிரான், இப்போலீசு அதிகாரி யின் சட்டவிரோத பயங்கரவாதத்தைத் திரைகிழித்துக் காட்டித் தண்டிக்க வலியுறுத்தினார்.

தனது வாழ்நாள் முழுவதும் அரசு பயங்கர வாதத்துக்கு எதிராகவும் மனித உரிமைகளுக்காகவும் தொடர்ந்து பாடுபட்ட உன்னதப் போராளி அவர். மறு காலனியாக்கமும் பாசிச அடக்குமுறையும் தீவிரமாகி வரும் இன்றைய சூழலில், மனித உரிமைக்கான போராட்டங்களை ஏகாதிபத்தியங்கள் நிறுவனமயமாக் கிவரும் இன்றைய சூழலில், உழைக்கும் மக்களின் ஜன நாயக உரிமைகளுக்காகத் தொடர்ந்து உறுதியாகப் போராடுவதுதான், நாம் அவருக்குச் செலுத்தும் உண்மை யான அஞ்சலியாக இருக்க முடியும்.

● மனோகரன்



படிப்பகம்

www.padippakam.com



பிநாயக் சென்

## பிநாயக் சென் மீதான வழக்கும் தண்டனையும்:

# காட்டு வேட்டையின் நீட்டிப்பு!

அடுக்கடுக்கான இலஞ்ச-ஊழல் கதைகளாலும், விலைவாசி உயர்வின் தாக்குதலாலும் நடுத்தர வர்க்கம் பிரமை தட்டிப் போயிருக்கையில், அதன் அறிவுஜீவிப் பிரிவினரை உலுக்கி இருக்கிறது, பிரபல சமூக சேவை மருத்துவரும், மனித உரிமைகள் ஆர்வலருமான பிநாயக் சென் அவர்களுக்கு மாவோயிஸ்ட் ஆதரவாளர் என்ற முத்திரை குத்தி, வாழ்நாள் கடுங்காவல் தண்டனை விதித்து சட்டிஸ்கார் மாநில, ரெய்ப்பூர் நகர விசாரணை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு.

மருத்துவர் பிநாயக் சென் மீதான இத்தாக்குதலைத் தனியொரு விவகாரமாகப் பார்க்க முடியாது. காங்கிரசு, பா.ஜ.க. ஆகிய பாசிச பயங்கரவாதிகளின் நேரடித் தலைமையிலும், சில சமயம் நேரடியாகவும் சில சமயம் மறைமுகமாகவும் போலி கம்யூனிஸ்டுகளின் பங்கேற்புடனும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள காட்டு வேட்டை (ஆபரேஷன் கிரீன் ஹண்ட்) தாக்குதல் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகத்தான் பார்க்க வேண்டியுள்ளது. நடுத்தர வர்க்கத்தின் அறிவுஜீவிகளும் இதை உணர்ந்துதான் உள்ளனர்.

தாராளமயம் - தனியார்மயம் - உலகமயமாக்கம் அடிப்படையிலான புதிய பொருளாதாரக் கொள்கைகளால் பொன்னுலகம் படைக்கப் போவதாக ஊதிவிடப்பட்ட வண்ண வண்ணக் குமிழிகள் எல்லாம் வெடித்துச் சிதறிவிட்டன. அமெரிக்க - ஐரோப்பிய நாடுகளில் மட்டுமல்ல; தங்க மணலில் பெட்ரோலிய டாலர்கள் இறைந்து கிடக்கும் வடஆப்பிரிக்க, அரேபிய நாடுகளிலும் கூட மக்கள் எழுச்சிகள் ஆட்சியாளர்களை நடுநடுங்கச் செய்கின்றன. அந்த அளவுக்கு நமது நாட்டு மக்கள் எழுச்சியுறவில்லை என்றாலும், பா.ஜ.க. கூட்டணி படம் போட்டுக் காட்டிய ‘‘ஒளிரும் இந்தியா’’வும், காங்கிரசு கூட்டணி முழங்கும் ‘‘நம் மக்கள் ஆட்சி’’யும் அப்பட்டமாகப் பொய்த்துப் போனதைக் கண்டார்கள்.

நாட்டைப் பொருளாதார வல்லரசாக்குவது, இரண்டு இலக்கப் பொருளாதார முன்னேற்றத்துக்கான திட்டங்கள் என்ற பெயரில் நீர், நிலம், காடுகள், மலைகள், கனிமவளங்கள், எரிசக்தி - எண்ணெய் வளங்கள், அரசுத் துறைத் தொழில்கள் என்று அனைத்து அரசுச் சொத்துக்களும், இயற்கை வளங்களும், உள்நாட்டு - தேசங்கடந்த தரகு முதலாளிகள், அன்னிய, பன்னாட்டுத் தொழிற்கழகங்களின் கொள்ளைக்காக தாரை வார்க்கப்படுகின்றன. இவர்களின் கொள்ளைக்காக, தொழிலாளர்கள் கொத்தடிமைகளாக்கப்படுகிறார்கள், விவசாயிகள் தற்கொலைக்குத் தள்ளப்படுகிறார்கள், பழங்குடிகள் வாழ்விடங்களில் இருந்து விரட்டப்படுகிறார்கள்; பொதுவில் மக்களின் வாழ்வாதாரங்கள் பறிபோகின்றன. மதவெறியாலும், பிரிவினைவாத, தீவிர



படிப்பகம்

www.padippakam.com

வாத, பயங்கரவாதப் பீதியூட்டியும் அரசு பாசிசமயமாக்கப்படுகிறது. ஓட்டுக் கட்சி அரசியல்வாதிகளும், அதிகாரிகளும், கார்ப்பரேட் முதலாளிகளும் மாஃபியா - கிரிமினல்களாகவும், மாஃபியா-கிரிமினல்கள் அரசியல் தலைவர்களாகவும், கார்ப்பரேட் முதலாளிகளாகவும் மாறி ஆதிக்கம் செய்கிறார்கள். இவர்களின் கிரிமினல், கொள்ளைத் தாக்குதல்களிலிருந்து மக்களைக் 'காக்க வேண்டிய' போலீசு, இராணுவம், சி.பி.ஐ. மற்றும் நீதித்துறையோ குற்றவாளிகளுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு எங்கும் எதிலும் லஞ்ச-ஊழல், அதிகார முறைகேடுகள் - மோசடிகள் - கொள்ளைகளில் ஈடுபடுவதை மக்கள் பார்க்கிறார்கள்.

**காட்டுவேட்டைத் தாக்குதலைக் கட்டவிழ்த்துவிட்டுத் தமக்குச் சாதகமான சூழலை ஏற்படுத்தித் தரும்படி இந்திய முதலாளிகளின் சங்கமே அரசுக்கு நேரடி வேண்டுகோள் விட்டது.**

அடிப்படைத் தேவைகள், குடியுரிமைகள் மற்றும் ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடும் மக்கள் மட்டுமல்ல; மனித உரிமைப் போராளிகளும் ஆட்சியாளர்களின் ஏவல் படைகளால் காலில் போட்டு மிதிக்கப்படுவதைக் காண்கிறார்கள். இந்த அநீதி-அக்கிரமங்களுக்கு எதிராகப் போராடும் கம்யூனிசப் புரட்சியாளர்களை, குறிப்பாக மாவோயிஸ்டுகளை ஒடுக்குவதற்குக் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள உள்நாட்டுப் போர்தான் ஆபரேசன் கிரீன்ஹண்ட் என்ற காட்டுவேட்டை. இத்தகைய தாக்குதலைக் கட்டவிழ்த்துவிட்டு தமக்குச் சாதகமான சூழலை ஏற்படுத்தித் தரும்படி இந்திய முதலாளிகளின் சங்கமே அரசுக்கு நேரடி வேண்டுகோள் விட்டது.

இந்த உண்மையை முதலில் உணர்ந்து கொண்டவர்கள், கம்யூனிசப் புரட்சியாளர்களின் அரசியல் செல்வாக்கின் கீழுள்ள மக்கள்தாம்; அடுத்து, காட்டுவேட்டையின் காரணத்தையும் நோக்கத்தையும் புரிந்து கொண்டவர்கள், நடுத்தர வர்க்கத்தின் அறிவுஜீவிப் பிரிவினர்கள். அவர்களிலும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், ஜனநாயக மற்றும் மனித உரிமை இயக்கத்தவர்கள் ஆகியவர்களோடு ஒரு பிரிவு பத்திரிக்கையாளர்களும் காட்டுவேட்டைக்கு எதிராகக் குரல் கொடுத்தனர்.

குறிப்பாக, கார்ப்பரேட் முதலாளிகளின் நலன்களுக்காக மேற்கு வங்கம் சிங்கூர், நந்திகிராமிலும்; ஒரிசாவின் கலிங்காநகர், நியாம்கிரியிலும்; ஜார்கண்ட், சட்டிஸ்கரிலும் விவசாயிகள் மற்றும் பழங்குடி மக்கள் மீது துணை இராணுவத்தை ஏவிப் பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. முக்கியமாக சட்டிஸ்கரில், சல்வாஜூடும் என்ற கூலிப்படை பழங்குடி மக்கள் மீது நடத்திய வக்கிரமான பாசிச பயங்கரவாதத் தாக்குதல்கள். இலட்சக்கணக்கான பழங்குடி மக்களை, சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கி வதை முகாம்களில் அடைத்து வைத்திருப்பது, நியமகிரியிலும், கலிங்கா நகரிலும் பழங்குடி மக்களைப் படுகொலை செய்து வெறியாட்டம் போட்டது, உள்நாட்டில் மட்டுமல்ல, வெளிநாடுகளிலும் அம்பலப்படுத்தப்பட்டு, காங்கிரசு மற்றும் பா.ஜ.க. அரசுகளுக்கு எதிராகக் கடும் வெறுப்பையும் ஆத்திரத்தையும் பெற்றது.

காட்டுவேட்டைக்கு எதிராக மாவேயிஸ்டுகளின் மக்கள் விடுதலைக் கொரில்லாப்படை சட்டிஸ்கரிலும், ஜார்க்கண்ட், ஒரிசாவிலும் நடத்திய பதிலடித் தாக்குதல்கள் அரசின் துணை இராணுவப் படைக்கும், சல்வாஜூடும் என்ற கூலிப்படைக்கும் பேரிழப்பை ஏற்படுத்தியபோது, காட்டுவேட்டையின் தோல்வியை அறிவுஜீவிகள் அறிவித்தனர். அரசப் படைகளே தார்மீகத் துணிவை இழக்கத் தொடங்கின. அரசியல், பொருளாதார நெருக்கடிகள் முற்றி, அரசு நிர்வாகம், நீதித்துறை, பொருளாதாரம் ஆகிய அனைத்தும் தழுவிய தோல்வி அடைந்தபோது, நாட்டில் கட்டமைப்பு நெருக்கடியும் தோல்வியும் ஏற்பட்டு விட்டதாக அறிவுஜீவிகள் ஒவ்வொரு விவகாரத்திலும் பிரகடனப்படுத்தினார்கள். இந்தக் கருத்து நடுத்தர மற்றும் உழைக்கும் மக்களிடையிலும் வேகமாகப் பரவி வருகிறது. கட்டமைப்பு நெருக்கடிக்குத் தீர்வும் மாற்றும் நாடாளுமன்ற அரசியல் அமைப்புக்குள்ளாகவே காண முடியாத போது, மாவோயிஸ்டுகள் உட்பட கம்யூனிசப் புரட்சியாளர்கள் மீது நம்பிக்கையையும், ஆதரவையும் வைக்கும் திசையில் அவர்களின் கவனம் திரும்பி வருகிறது.

பழங்குடியின மக்கள் சேவையில் பினாயக் சென்





படிப்பகம்

www.padippakam.com




நடுத்தர வர்க்க அறிவு ஜீவிகளை எழுச்சியுறச் செய்துள்ளது,
பிநாயக் சென் மீதான அர பயங்கவரவாதத் தாக்குதல்.

இதனால், ஆத்திரமுற்ற பாசிச பயங்கரவாத ஆட்சியாளர்கள் மாவோயிஸ்டுகள் உட்பட கம்யூனிச புரட்சியாளர் மீதான கொடூரமான தாக்குதல்களை அவர்களின் ஆதரவாளர்கள், அனுதாபிகள் மீது மட்டுமல்ல; ஜனநாயக மற்றும் மனித உரிமைப் போராளிகள் மீதும் நீட்டித்து, பீதியூட்டிப் பழிவாங்கும் செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள். இதை அரச பாசிச பயங்கரவாதத் தலைவனாகிய அமைச்சர் சிதம்பரம் பகிரங்கமாகவே அறிவித்திருக்கிறார். மாவோயிச ஆதரவாளர்கள், அனுதாபிகளைக்கூடத் தீவிரவாதிகளாகத்தான் கருதுவோம் என்று எச்சரித்திருக்கிறார். இதைச் செயல்படுத்தும் விதமாகத்தான், சுவாமி அக்னிவேஷ் மூலமாக அமைதிப் பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்பட்ட மாவோயிசத் தலைவர் தோழர் ஆசாத்துடன் உத்திரகண்ட் பத்திரிக்கையாளர் பாண்டேவும் போலி மோதல் மூலம் படுகொலை செய்யப்பட்டார்.

புரட்சிகரத் தலைமையையும் அணிகளையும் ஒழித்துக் கட்டுவதற்காக போலி மோதல் - என்கவுண்டர் வழிமுறை மட்டுமல்ல; புரட்சிகர அமைப்பின் ஆதரவாளர்கள், அனுதாபிகளிடையே பயபீதியைப் பரப்புவதற்கும் பயன்படும். ஜனநாயகவாதியும் எழுத்தாளருமான அருந்ததிராய், காட்டுவேட்டை என்பது சொந்த நாட்டு மக்கள் மீதே, கார்ப்பரேட் முதலாளிகளின் நலன்களுக்காகத் தொடுக்கப்பட்டுள்ள உள்நாட்டுப் போர் என்பதை அம்பலப்படுத்தி எழுதியும் பேசியும் வருகிறார். மனித உரிமைப் போராளி பிநாயக் சென் காட்டு வேட்டையின் கொடூரங்களையும் மனித உரிமை மீறல்களையும் எதிர்த்துப் போராடுவதோடு பழங்குடி மக்களுக்கும், மாவோயிஸ்டு சிறைக் கைதிகளுக்கும் மருத்துவச் சிகிச்சையளித்து வருகிறார். இப்படிப்பட்டவர்களின் பணிகள் நடுத்தர மக்களிடையே, குறிப்பாக நடுத்தர வர்க்க அறிவுஜீவிகளிடையே அரச பாசிச பயங்கரவாதிகளுக்கு எதிரான நல்ல கருத்துருவாக்கம் செய்கின்றன.

அருந்ததிராய், பிநாயக் சென் போன்றவர்கள் மீது போலி மோதல் - என்கவுண்டர் தாக்குதலை நடத்த முடியாது; அது பாரிய எதிர்விளைவை ஏற்படுத்தி விடும் என்பதால் அரசுக்கு எதிராகக் கலகத்தைத் தூண்டியதாகவும், தீவிரவாதத்துக்கு உடந்தையாக இருந்ததாகவும், ராஜதுரோக (ஆங்கிலேயர்கள் கொண்டு வந்த 120- ஆ, 124-அ ஆகிய காலனியக் கருப்புச் சட்டங்கள்) வழக்குகளை சோடித்து நீண்டகாலம் சிறையிலடைக்க எத்தணிக்கிறார்கள், இந்திய அரச பாசிச பயங்கரவாதிகள். புதுதில்லியில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் ஜம்மு-காஷ்மீர் ஹூரியத் கூட்டணியின் தலைவர் சையது கிலானியோடு கலந்து கொண்டு காஷ்மீர் விடுதலைக்கு ஆதரவு தெரிவித்தார் என்பது அருந்ததி ராய் மீதான குற்றசாட்டுக்கு ஆதாரம்.

சட்டிஸ்கர் மாநிலம் ரெய்ப்பூர் மத்திய சிறையில் மாவோயிச தலைவர் நாராயண சன்யாலைப் பலமுறை சந்தித்து, அவரிடமிருந்து ரகசியக் கடிதத்தை மாவோயிசத் தலைமைக்குக் கொடுத்தார் என்பது பிநாயக் சென் மீதான குற்றச்சாட்டு. இந்தக் குற்றச்சாட்டுக்கு அடிப்படையோ, ஆதாரமோ, சாட்சியமோ எதுவு

**“டாக்டர் பிநாயக் சென்னுக்கு விதிக்கப்பட்டுள்ள ஆயுள்தண்டனையை உடனே ரத்து செய்து விடுதலை செய்!”**

**– புரட்சிகர அமைப்புகளின் ஆர்ப்பாட்டம்.**

**ச**த்தீஸ்கர் மாநிலத்தில் துணை இராணுவப் படைகளும் போலீசும் பழங்குடி மக்கள் மீது தொடுத்துவரும் கொடிய தாக்குதல்களையும் படுகொலைகளையும் எதிர்த்துப் போராடும் இந்தியாவின் புகழ் பெற்ற மனித உரிமைப் போராளியும் ஏழைகள்-பழங்குடி மக்களின் அன்புக்குரிய மருத்துவருமான டாக்டர் பிநாயக் சென் மற்றும் நாராயண் சன்யால், பிஜூஷ் குகா ஆகியோருக்கு சத்தீஸ்கர் மாநில ராய்ப்பூர் கூடுதல் அமர்வு நீதிமன்றம் விதித்துள்ள ஆயுள்தண்டனையை உடனே ரத்து செய்யக் கோரியும், மனித உரிமைப் போராளிகளை ஒடுக்கும் நீதித்துறையின் பாசிசத் தீர்ப்பை எதிர்த்தும் கடந்த 31.12.2010 அன்று தஞ்சை ரயிலடியில் ம.க.இ.க., பு.மா.இ.மு., வி.வி.மு., ஆகிய புரட்சிகர அமைப்புகள் இணைந்து ஆர்ப்பாட்டத்தை நடத்தின.

தோழர் இராவணன் தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், நாம் தமிழர் இயக்க மாநில ஒருங்கிணைப்பாளரான வழக்குரைஞர் தோழர் நல்லதுரை, மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் வழக்குரைஞர் சதீஷ்குமார், ம.க.இ.க. மாநில இணைச் செயலர் தோழர் காளியப்பன் மற்றும் பிற முன்னணியாளர்கள் கண்டன உரையாற்றினர். பொதுவுடமை இயக்கங்களைச் சேர்ந்த முன்னணியாளர்களும், தமிழின உணர்வாளர்களும் தொழிற்சங்க இயக்கத்தினரும் திரண்டு வந்து ஆதரித்த இந்த ஆர்ப்பாட்டம், இந்தியா மட்டுமின்றி உலகெங்கும் டாக்டர் பினாயக் சென்னை விடுதலை செய்யக் கோரி நடந்துவரும் போராட்டத்தின் ஓர் அங்கமாக அமைந்து, போராட்டக் குரலை எதிரொலித்தது.

-பு.ஜ. செய்தியாளர், தஞ்சை.



படிப்பகம்

**அருந்ததிராய், பிநாயக் சென் போன்றவர்கள் மீது போலி மோதல் தாக்குதலை நடத்த முடியாது; அதனால் அரசுக்கு எதிராகக் கலகத்தைத் தூண்டியதாகவும் தீவிரவாதத்துக்கு உடந்தையாக இருந்ததாகவும், கூறி ராஜதுரோக வழக்குகளை சோடிக்கிறார்கள்.**

மில்லை, எல்லாம் புனைகதை என்று முதலாளிய செய்தி ஊடகங்களும், உயர் சட்டவல்லுநர்களுமே கேலி-கிண்டல் செய்கின்றனர். மத்திய சிறை உயர் போலீசு அதிகாரி உட்பட சாட்சியமளித்த அனைவரும் குற்றச்சாட்டுக்களை மறுத்தபோதும், வழக்குக்கு ஆதாரமாக பொய்யாக போலீசே தயாரித்து வைத்த ஆவணங்களையும் சாட்சிகளையும் ஏற்று, அரசு-போலீசின் குற்றப் பத்திரிக்கை வாசகங்களை அப்படியே வாந்தி எடுக்கும் வகையில் பிநாயக் சென்னுக்கு வாழ்நாள் கொடுந்தண்டனை வழங்கியுள்ளது, விசாரணை நீதிமன்றம். ஏற்கெனவே இரண்டு ஆண்டுகள் சிறையின் தனிமை கொட்டடியில் அடைக்கப்பட்டிருந்த பிநாயக் சென், மேல்முறையீடு காலத்திலும், பிணையில் வெளிவந்து விடக்கூடாது என்பதற்காக மேலும் சில பொய் வழக்குகள் போடப்பட்டுள்ளன.

இந்திய நீதிமன்றங்கள், பாசிச பயங்கரவாத அமைப்புகள் தாம்; அவற்றின் நீதிபதிகளின் கருப்பு அங்கிக்குள் காக்கி - காவிச் சீருடை பாசிஸ்டுகள் ஒளிந்திருக்கிறார்கள் என்று கம்யூனிசப் புரட்சியாளர்கள் ஏராளமான சான்றுகளுடன் எடுத்துச் சொல்லி வருகிறார்கள். கேரளத் தோழர் வர்கீஸ் கொலை வழக்கில் உயர் போலீசு அதிகாரிக்கு ஆயுள் தண்டனை வழங்கியதைப் போன்ற தீர்ப்புகள் விதிவிலக்கானவைதாம் என்பதையும் அவர்கள் சுட்டிக் காட்டத் தவறுவதில்லை.

நீதிமன்றங்களின் பாசிச பயங்கரவாதத் தீர்ப்புகள் வந்து எத்தனை முறை இடித்துரைத்தாலும் எல்லா வண்ணப் போலி கம்யூனிஸ்டுகளும் திரும்பத் திரும்ப அவற்றின் மீது நம்பிக்கை வைக்கும் தோரணையிலேயே சித்தரிக்கிறார்கள். ''சில நேரங்களில் நீதிமன்றங்கள் வழங்கும் தீர்ப்புகள், காவல்துறை அதிகாரிகள் வழங்கிய தீர்ப்புகள் போல் இருக்கின்றன. கருப்புக் கவுனுக்குள் காக்கிச் சீருடை மறைந்துள்ளதோ என்ற ஐயம் ஏற்படுகிறது... பிநாயக் சென்னுக்கு வாழ்நாள் சிறைத்தண்டனை அளித்ததும் இவ்வாறான ஐயத்தை எழுப்புகிறது.'' (பெ. மணியரசன், தமிழ்த்தேசியத் தமிழர் கண்ணோட்டம், சனவரி 16-31, 2011)

ஆனால், பாசிச பயங்கரவாதிகள் சில நேரங்களில் அல்ல; எப்போதும் ஐயத்திற்கு இடமின்றி ஒரே நீதிமுறையைத்தான் பின்பற்றுகிறார்கள். முதலில் தண்டனையைத் தீர்மானிக்கிறார்கள். பிறகுதான் குற்றப்பத்திரிகையையும், தண்டனையையும் தீர்மானிக்கிறார்கள். பிறகுதான் சாட்சியங்களையும் சோடணை செய்கிறார்கள். நீதிபதிகள் அதையே தீர்ப்பாக அறிவிக்கிறார்கள். பிநாயக் சென் வழக்கிலும் இதுதான் நடந்தது.

கம்யூனிச புரட்சியாளர்களைத் தனிமைப்படுத்தி ஒடுக்குவது, குறிப்பாக நடுத்தர மக்களிடையே பயபீதியை உருவாக்கவும் அரசு மேற்கொண்டு வரும் இத்தகைய சதி நடவடிக்கைகள், அவர்கள் எதிர்பார்த்த விளைவை ஏற்படுத்தவில்லை. மாறாக, அரச பாசிச பயங்கரவாதிகளுக்கு எதிரான ஆத்திரத்தையும் கோபத்தையும் உலகம் முழுவதிலும் உள்ள ஜனநாயக மற்றும் மனித உரிமைப் போராளிகளிடையேயும் அரசியலற்ற மக்கள் பிரிவினரிடையேயும் கூடத் தூண்டி விட்டுள்ளது. பிநாயக் சென்னை விடுதலை செய்யும்படி நோபல் பரிசு பெற்ற 22 அறிஞர்களும் விஞ்ஞானிகளும் இந்திய அரசைக் கோரி மனுப் போட்டுள்ளனர். அமெரிக்கா, கனடா, இங்கிலாந்தைச் சேர்ந்த 55 சமூக அமைப்புகள் கூட்டணி அமைத்து உலகின் பெருநகரங்களில் கூட்டங்கள் நடத்தி, இந்தியாவில் மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்தி, இந்திய அரசின் ஒடுக்குமுறைகளை எதிர்த்து தியாகிகள் தினம் கடைப்பிடிக்கின்றன.

பிநாயக் சென் வேலூர் கிறித்தவ மருத்துவக் கல்லூரியில் படித்தவர், சட்டிஸ்கரில் நீண்டகாலம் மருத்துவ சேவை புரிந்தவர் என்பதால் ஏராளமான தொண்டு நிறுவனங்கள் திரண்டு அவருக்கு எதிரான அடக்குமுறையைக் கண்டித்து இயக்கங்கள் நடத்துகின்றன. அவரது உருவப்படமும் ''பிநாயக் சென் கலகக்காரர் என்றால், நானும்தான்!'' என்ற வாசகங்களும் பொறித்த பனியன்கள் பிரபலமாகி வருகின்றன. பள்ளி, கல்லூரிகளிலும் இந்த இயக்கம் பரவி வருகிறது.

அருந்ததி ராய், பிநாயக் சென் முதலானோர் பிரபலமான நடுத்தர வர்க்க அறிவுஜீவிகள். அதனால் அவர்கள் மீதான ஒடுக்குமுறை வெளிவந்து கடும் கண்டனத்துக்குள்ளாகி உள்ளது. ஆனால், இன்னும் -ற்றுக் கணக்கானோருக்கு எதிராக அரச துரோக வழக்குகள் போட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தில் சமீபத்தில் மூட்டை சுமக்கும் தொழிலாளியும் ம.க.இ.க. அமைப்பின் செயல்வீரருமான தோழர் இராவணன் மீது சுவரெழுத்துக் குற்றத்துக்காக இதுவரை மூன்று முறை அரச துரோக வழக்குப் போட்டு சிறையிலடைத்தனர். இப்படி வழக்குகள் பதிவு செய்துவிட்டு, பின்னர் குண்டர் சட்டத்திலோ, தேசியப் பாதுகாப்புச் சட்டத்திலோ பலநாள் விசாரணையின்றி சிறையிலடைக்க சதி நடக்கிறது.

உள்ளூர் அளவில் நடக்கும் இத்தகைய அடக்குமுறைகளை ஊடகங்கள் கண்டுகொள்வதே இல்லை. ஆனால், இத்தகைய அடக்குமுறைகள், இருட்டடிப்புகளால் குமுறும் மக்கள் உணர்வுகளை அடக்கிவிட முடியாது.

● ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com

# அமெரிக்கா கோலெடுத்தது இந்தியா ஆடியது

**இரானுக்கு நெருக்கடி கொடுத்துவரும் அமெரிக்காவிற்கு, இந்தியா பக்கமேளம் வாசிக்கிறது.**

''இரானில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு இனி பழைய முறையில் பணப் பட்டுவாடா செய்வதற்கு உதவ முடியாது '' என இந்திய ரிசர்வ் வங்கி கடந்த டிசம்பர் மாத இறுதியில் அறிவித்தது. ''இரானுடனான ஏற்றுமதி-இறக்குமதி வர்த்தகத்தில் முக்கிய பங்கு வகிப்பது கச்சா எண்ணெய் இறக்குமதிதான். எனவே, பணப் பட்டுவாடா செய்வதற்கு மாற்று வழியை உடனடியாக ஏற்பாடு செய்யாவிட்டால், அடுத்த ஓரிரு மாதங்களுக்குள்ளாகவே உள்நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுவிடும்'' எனக் குறிப்பிட்டு, உள்நாட்டு முதலாளித்துவப் பத்திரிகைகள்கூட ரிசர்வ் வங்கியின் இந்த அறிவிப்பை ஏற்றுக் கொள்ள முடியாமல் முணுமுணுத்துக் கொண்டிருக்கும்பொழுது, அமெரிக்கா, ''இது குறிப்பிடத்தக்க நடவடிக்கை'' எனக் கூறி, இந்தியாவைப் பாராட்டியிருக்கிறது.

இந்தியாவின் மொத்த கச்சா எண்ணெய்த் தேவையில் ஏறத்தாழ 12 சதவீதம் இரானில் இருந்து இறக்குமதி செய்வதன் மூலம்தான் பெறப்படுகிறது. கடந்த ஆண்டு டிசம்பர் வரை இரானில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய்க்கான நிலுவையை ஆசியன் கணக்குத்தீர்வு ஒன்றியம் (Asian Clearing Union) என்ற அமைப்பு மூலம்தான் இந்திய ரிசர்வ் வங்கி பட்டுவாடா செய்து வந்தது. 1974-ஆம் ஆண்டு ஐ.நா. மன்றத்தால் உருவாக்கப்பட்ட இந்த ஒன்றியத்தில், இரான், இந்தியா மட்டுமின்றி, பிற தெற்காசிய நாடுகளும், மியான்மரும் உறுப்புகளாக உள்ளன. இந்த நாடுகளுக்கு இடையே நடைபெறும் ஏற்றுமதி-இறக்குமதி வர்த்தகத்துக்கான பணப் பட்டுவாடா அனைத்தும் இந்த ஒன்றியத்தின் மூலம்தான் நடைபெற்று வருகிறது.

இரானின் கச்சா எண்ணெய் ஏற்றுமதியை ஐ.நா. மூலம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அமெரிக்கா எடுத்துவரும் முயற்சிகள் இன்னும் வெற்றி பெறவில்லை. எனினும், அவ்வர்த்தகத்தைச் சீர்குலைக்கும் நோக்கத்தோடு, இரானுடனான ஏற்றுமதி-இறக்குமதி வர்த்தகத்தில் அமெரிக்க டாலர் செலாவணியாகப் பயன்படுத்தப்படுவதை அமெரிக்கா 2008-ஆம் ஆண்டில் தன்னிச்சையாகத் தடை செய்தது. அதுவரை, இந்த ஒன்றியத்திற்குள் அமெரிக்க டாலரில் நடைபெற்று வந்த இரானுடனான ஏற்றுமதி-இறக்குமதி வர்த்தகம், அதன் பின்னர் யூரோவுக்கு மாற்றப்பட்டது.

இதனையும் தடுக்க முடிவு செய்த அமெரிக்கா, இந்த ஒன்றியத்தைச் சேர்ந்த நாடுகளின் ஏற்றுமதி-இறக்குமதி வர்த்தகத்தின் பணப் பட்டுவாடாவிற்கு உதவி வருவதோடு, ஜெர்மனியில் உள்ள ஹாம்பர்க் நகரில் செயல்பட்டு வருவமான இரான்-ஐரோப்பிய வர்த்தக வங்கியான ''ஏ.ஜி. (இ.ஐ.எச்)'' என்ற இரானுக்குச் சொந்தமான வங்கி மீது பொருளாதாரத் தடை உத்தரவைப் பிறப்பித்தது. இதனையடுத்து ஐரோப்பிய ஒன்றியத்துக்கு நெருக்கடி கொடுத்து, ''இரானுடனான ஏற்றுமதி-இறக்குமதி வர்த்தகத்தில் யூரோவைச் செலாவணியாகப் பயன்படுத்தும் நாடுகள், தாங்கள் பட்டுவாடா செய்யும் யூரோ, பொருளாதாரத் தடையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள பொருட்களை இரானில் இருந்து இறக்குமதி செய்வதற்குப் பயன்படுத்தப்படவில்லை '' எனச் சான்றளிக்க வேண்டும் என உத்தரவிட வைத்தது.

இரானில் இருந்து கச்சா எண்ணெயை இறக்குமதி செய்து கொள்வது இன்னும் தடை செய்யப்படாத நிலையில், இந்திய ரிசர்வ் வங்கிக்கு இப்படிபட்ட சான்றிதழ் அளிப்பது மிகவும் எளிதான வேலைதான். ஆனால், இந்திய ரிசர்வ் வங்கியோ இந்தச் சான்றிதழ் வழங்க வேண்டிய 'தொல்லையை'க் காரணமாகக் காட்டி, ஆசியன்






படிப்பகம்

www.padippakam.com

கணக்குத்தீர்வு ஒன்றியத்தில் இருந்தே விலகிக் கொண்டு விட்டது. இந்த அமைப்பிற்குப் பதிலாக ஒரு புதிய பணப் பட்டுவாடா முறையை ஏற்பாடு செய்யப் போவதாக அறிவித்திருக்கிறது, இந்திய ரிசர்வ் வங்கி. இதன் மூலம் ஆசியன் கணக்குத்தீர்வு ஒன்றியத்தை ஒழித்துக் கட்டிவிடத் துடித்துக் கொண்டிருந்த அமெரிக்காவின் ஆசையை நிறைவேற்றி வைத்திருக்கிறது, இந்தியா.

இரானுக்கு எதிரான இக்கூட்டுச் சதியைத் தனிப்பட்ட தவறான பொருளாதார நடவடிக்கையாகப் பார்க்க முடியாது. மேற்காசியாவில் இராக்கிற்கு அடுத்து இரானைக் குறிவைத்திருக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியம், அந்நாட்டின் அரசியல்- பொருளாதார பலத்தைச் சீர்குலைக்க கடந்த மூன்றாண்டுகளாகப் பல்வேறு சதிகளை வெளிப்படையாகவே செய்து வருகிறது. அந்நாட்டின் மீது தன்னிச்சையாகப் பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதித்துள்ள அமெரிக்கா, கடந்த ஆண்டில் இரானில், முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளில் நடத்தியதைப் போல, தனது ஆதரவாளர்களைப் பயன்படுத்திக் கொண்டு ஒரு ''வண்ணப் புரட்சி''யை நடத்த முயன்று தோற்றுப் போனது.

இதனையடுத்து, கடந்த ஆண்டு ஜூனில் ஐ.நா.வின் மூலம் அந்நாட்டின் 40-க்கும் மேற்பட்ட பொருளாதார-வர்த்தக நிறுவனங்களின் மீதும் முக்கிய வங்கிகளின் மீதும் பொருளாதாரத் தடையை விதிக்கச் செய்தது, அமெரிக்கா. அந்நாட்டின் கச்சா எண்ணெய் தொழிலில் எந்தவொரு நாடும் முதலீடு செய்யக்கூடாது; இரானுக்கு எந்தவொரு நாடும் சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலியப் பொருட்களை ஏற்றுமதி செய்யக் கூடாது; இரானின் கப்பல்கள் இரானின் அணு ஆராய்ச்சிக்குத் தேவையான பொருட்களை ஏற்றிக் கொண்டு செல்வதாகச் சந்தேகித்தால், அக்கப்பல்களை சர்வதேச கடல் எல்லைக்குள்ளேயே நிறுத்திச் சோதனை செய்யும் அதிகாரம் — எனப் பல்வேறுவிதமான மேலாதிக்க நடவடிக்கைகளை இரானின் மீது ஏவிவிட்டு வருகிறது, அமெரிக்கா.

சதாம் உசேன் பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களைப் பதுக்கி வைத்திருப்பதாகப் பிரச்சாரம் செய்து இராக் மீதான ஆக்கிரமிப்புப் போரை நடத்தியதைப் போல, இரான் அணு ஆயுதங்களை இரகசியமாகத் தயாரித்து வருவதாக ஒரு புளுகுணிப் பிரச்சாரத்தை அவிழ்த்து விட்டு, இரானின் மீது ஒரு ஆக்கிரமிப்புப் போரை நடத்துவதற்கான முகாந்திரத்தை உருவாக்கி வருகிறது, அமெரிக்கா.

அந்நாட்டின் பொருளாதாரத்தையும், அணு ஆற்றலையும் சீர்குலைப்பதன் மூலம், தனது எதிரியைத் தாக்குதலுக்கு முன்பாகவே பலவீனப்படுத்தும் முகமாகத்தான் இப்பொருளாதாரத் தடையுத்தரவுகளைத் திணித்து வருகிறது.

அணுகுண்டு தயாரிப்பதா, வேண்டாமா எனத் தீர்மானிக்கும் இரானின் சுயாதிபத்திய உரிமையை அமெரிக்க ஏகாதிபத்தியம் மட்டுமல்ல, இந்தியாவும் ஏற்றுக் கொள்ள மறுத்து வருகிறது. அணுகுண்டு தயாரிக்கும் அளவிற்கு யுரேனியத்தைச் செறிவூட்டும் தொழில்நுட்பம் தற்சமயம் இரானிடம் கிடையாது என்ற உண்மையையும் அமெரிக்கா போலவே இந்தியாவும் ஒப்புக் கொள்ள மறுத்து வருகிறது.

குறிப்பாக, அமெரிக்காவின் நிர்பந்தப்படி சர்வதேச அணுசக்தி முகமையில் இரானுக்கு எதிராக வாக்களித்தது, இந்தியா. இரான் - பாகிஸ்தான் - இந்தியா இடையே பேசி முடிக்கப்பட்ட குழாய் வழியாக இயற்கை எரிவாயுவைக் கொண்டுவரும் திட்டத்தையும் கிடப்பில் போட்டது. அமெரிக்கா தன்னிச்சையாக இரானின் மீது பொருளாதாரத் தடைகளை விதித்தவுடனேயே, ரிலையன்ஸ் நிறுவனம் இரானில் இருந்து கச்சா எண்ணெயை இறக்குமதி செய்துவந்ததைக் கைவிட்டது. இந்தியாவில் இருந்து அந்நாட்டிற்கு கிரானைட் கற்கள் ஏற்றுமதி செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டது. இரானுக்குப் பதிலாக அமெரிக்காவுக்கு நெருக்கமான சௌதி அரேபியாவில் இருந்து தனக்குத் தேவைப்படும் கச்சா எண்ணெயை இறக்குமதி செய்து கொள்ளும் திட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது, இந்திய அரசு. இவை அனைத்திற்கு மேலாக, இரானின் அதிபர் அகமதிநிஜாத் தனது சுற்றுப்பயணத்தின் இடையே இந்தியாவில் இறங்கிச் சென்றதற்குக்கூட அமெரிக்காவிற்கு விளக்கும் கொடுக்கும் அளவிற்கு மன்மோகன் சிங் அரசு அமெரிக்க அடிவருடியாகச் செயல்பட்டு வருகிறது.

**இரானின் அதிபர் அகமதிநிஜாத் தனது சுற்றுப்பயணத்தின் இடையே இந்தியாவில் இறங்கிச் சென்றதற்குக்கூட அமெரிக்காவிற்கு விளக்கும் கொடுக்கும் அளவிற்கு மன்மோகன் சிங் அரசு அமெரிக்க அடிவருடியாகச் செயல்பட்டு வருகிறது.**

இந்தியா தற்பொழுது ஐ.நா. சபையின் பாதுகாப்பு கவுன்சிலில் தற்காலிக உறுப்பினராகத் தேர்வாகியுள்ளது. இந்தக் காலக் கட்டத்தில் இந்தியா அமெரிக்காவின் குரலை எதிரொலித்தால், இந்தியாவை நிரந்தர உறுப்பினராக்க அமெரிக்கா உதவும் என அமெரிக்க அதிபர் ஒபாமா இந்தியாவிற்கு வந்தபொழுது எலும்புத் துண்டை வீசிவிட்டுப் போனார். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அக்கட்டளைக்கு ஏற்ப இந்தியா வாலாட்டி வருகிறது என்பதைத்தான் ஆசியன் கணக்குத்தீர்வு ஒன்றியத்தில் இருந்து இந்தியா விலகியது எடுத்துக் காட்டுகிறது.

• செல்வம்



படிப்பகம்

## வங்கதேசம்:

# பன்னாட்டு நிறுவனங்களின் கொத்தடிமைத் தேசமா?

**ஆயத்த ஆடைத் தொழிலாளர்களின் போராட்டம் பன்னாட்டு நிறுவனங்களின் கொடூரச் சுரண்டலை உலகெங்கும் அம்பலப்படுத்திவிட்டது.**

குழந்தைத் தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படுகிறார்களா, சுற்றுச்சூழல் விதிகள் பின்பற்றப்பட்டுள்ளனவா என்று ஏழை நாடுகளிலிருந்து ஏற்றுமதியாகும் பொருட்களுக்குக் கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்கும் ஏகாதிபத்தியவாதிகள், ஏழை நாடுகளில் இத்தகைய விதிகளை மீறிப் பன்னாட்டு நிறுவனங்கள் தொழிலாளர்களைக் கொத்தடிமைகளாக்கிக் கொடூரமாகச் சுரண்டுவதைப் பற்றி வாய் திறப்பதில்லை. அழகழகான லிவைஸ் ஜீன்ஸ்களாகட்டும், ஆயத்த ஆடைகளை அள்ளிச் செல்ல அழைக்கும் வால்மார்ட், டெஸ்கோ முதலான பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களாகட்டும், இவற்றின் அழகுக்கும், நேர்த்திக்கும் பின்னே உறைந்திருப்பது, ஏழை நாடான வங்கதேசத் தொழிலாளர்களின் ரத்தம்.

வங்கதேசத் தலைநகர் டாக்காவில் உள்ளது, சிட்டாகாங் ஏற்றுமதி தயாரிப்பு மண்டலம் (CEPZ). அங்கு கடந்த டிசம்பர் மாதம் கூலி உயர்வு கேட்டுப் போராடிய ஆயத்த ஆடைத் தொழிலாளர்கள் மீது துணை ராணுவப் படை மற்றும் போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் நால்வர் பலியாகினர். கடந்த நான்கைந்து வருடங்களாகவே ஆயத்த ஆடைத் தொழிலாளர்களின், குறிப்பாக பெண் தொழிலாளர்களின் இத்தகைய போர்க்குணமிக்க போராட்டங்கள் வங்கதேசத்தை உலுக்கி வருகின்றன.

வங்கதேசம், உலகிலேயே மிகக் குறைவான கூலிக்குச் சுரண்டப்படும் ஆயத்த ஆடைத் தொழிலாளர்களின் கொத்தடிமைத் தேசமாகும். இங்கு தொழிலாளர்களுக்கு மாதம் 24 டாலர் (1660 டாக்கா - ஏறத்தாழ ரூ.1200) மட்டுமே சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது. பல தொழிற்சாலைகள் இதைக்கூட கொடுக்காமல் ஏய்த்து வருகின்றன. வங்கதேசத்தின் ஒட்டுமொத்த ஏற்றுமதி வருவாயில் 80% ஆயுத்த ஆடை ஏற்றுமதியிலிருந்துதான் வருகிறது. விவசாயத்திற்கு அடுத்ததாக பெரியளவில் வேலைவாய்ப்பை உருவாக்கியுள்ள இத்துறை, நாட்டின் மொத்தத் தொழிலாளர்களில் 40% (35 லட்சம் தொழிலாளர்கள்) பேரைக் கொண்டுள்ளது. இத்தகைய பிரமாண்டமான தொழிற்துறையில் பணியாற்றும் தொழிலாளர் நிலையோ படுமோசமானது. ஒரே இடத்தில் அடைத்து வைத்து, உரிய கூலி கொடுக்காமல், பாதுகாப்பற்ற சூழலில் வேலை வாங்குவதன் காரணமாக, 2005-லிருந்து 2010 வரை நடந்த பல கொடூர விபத்துக்களில் -ற்றுக்கணக்கில் தொழிலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த டிசம்பர் மாதம் நடந்த ஒரு தீ விபத்தில் தொழிற்சாலைக் கதவுகளை நிர்வாகம் பூட்டியிருந்ததால் 25 பேர் கொல்லப்பட்டனர்.

இந்த அநீதிகளை எதிர்த்தும், கூலியை 75 டாலராக (5000 டாக்கா - ஏறத்தாழ ரூ.3750) உயர்த்தக் கோரியும் பாதுகாப்பான வேலைச்சூழலைக் கோரியும் 2007-லிருந்தே தொழிலாளர்கள் போராடி வருகிறார்கள். துப்பாக்கிச் சூடுகள், கைது, சித்திரவதை - எனப் பல்வேறு ஒடுக்குமுறைகளை மீறிப் போராட்டம் தொடர்ந்தது. இதுவரை 50,000-க்கும் மேலான தொழிலாளர்கள் மீது

வங்கதேச ஆயத்த ஆடைத் தொழிலாளர்களின் நியாயமான போராட்டத்தை மிருகத்தனமாக ஒடுக்கப் பாயும் பன்னாட்டு முதலாளிகளின் அடியாட்படை. (இடது), போலீசின் துப்பாக்கிச் சூட்டில் பலியான தொழிலாளர்கள்.





www.padippakam.com

பொய்வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. வேறு வழியின்றி கடந்த ஜூன் 2010-இல் கூலியை 43 டாலராக (3000 டாக்கா - ஏறத்தாழ ரூ.2150) உயர்த்துவதற்கு ஒத்துக் கொண்டது, அரசு. விலைவாசி உயர்வுடன் ஒப்பிட்டால் இது மிக அற்பமானதும், மனிதாபிமானமற்றதுமாகும். ஆனால், இதைக் கூடத் தராமலும், போனஸ், உணவுக் கூப்பன் உள்ளிட்டவற்றை இனி கொடுக்க முடியாது என்றும் கொக்கரிக்கிறார்கள், ஆயத்த ஆடை முதலாளிகள். பன்னாட்டு முதலாளிகளின் இந்த மோசடியையும் திமிரையும் எதிர்த்து வீதிகளில் இறங்கிப் போர்க்குணத்துடன் போராடி வருகிறது, வங்கதேசத் தொழிலாளி வர்க்கம்.



பன்னாட்டு மூலதனக் கொள்ளைக்கும் கொத்தடிமைத்தனத்துக்கும் எதிரான போராட்டத்தில் வங்கதேச ஆயத்த ஆடைத் தொழிலாளர்கள்

இத்தகைய கொடூரச் சுரண்டலும் அடக்குமுறையும், அன்னியச் செலாவணியின் பெயராலும் வேலைவாய்ப்பின் பெயராலும் வக்கிரமான முறையில் நியாயப்படுத்தப்படுகின்றன. கூலியைக் குறைத்துக் கொள்ளாவிட்டால் ஏற்றுமதி ஒப்பந்தங்கள் வங்கதேசம், சீனாவுக்குப் போய்விடும் என்று பயமுறுத்தும் திருப்பூர் முதலாளிகளின் தந்திரத்தைத்தான் வங்கதேச முதலாளிகளும் பின்பற்றுகிறார்கள். வங்கதேசத் தொழிலாளிக்கும், குர்கானில் போராடும் ஹோண்டா தொழிலாளிக்கும், திருப்பூர் தொழிலாளிக்கும் பொது எதிரி ஏகாதிபத்திய மூலதனமே. வங்கதேச ஆயத்த ஆடைத் தொழில்துறைச் சுரண்டலின் இந்திய வடிவம்தான் திருப்பூர். நாடாளுமன்ற போலி ஜனநாயக மூடுதிரையின் பின்னே, இந்தியாவிலும் வங்கதேசத்திலும் ஆட்சி செய்வது பன்னாட்டுக் குழும முதலாளிகளும் அவர்களின் கூட்டாளிகளான தரகுப் பெருமுதலாளிகளும்தான். இந்நாடுகளில் போராடும் தொழிலாளி வர்க்கம், தமது பொது எதிரிகளை எதிர்த்து ஒன்றுபட்டுப் போராட வேண்டியுள்ளதையும், அதற்குத் தெற்காசிய அளவிலான தொழிலாளர்களின் ஒற்றுமையைக் கட்டியமைக்க வேண்டிய அவசியம் உருவாகியுள்ளதையுமே வங்கதேசத் தொழிலாளர் போராட்டம் உணர்த்துகிறது.

• அன்பு

## தொடரும் தமிழக மீனவர் படுகொலைகளுக்கு எதிராக...

### – புரட்சிகர அமைப்புகளின் ஆர்ப்பாட்டம்.

அண்மையில் வேதாரண்யம் மீனவர் ஜெயக்குமார் இலங்கைக் கடற்படையினரால் கொடூரமாகக் கொல்லப்பட்டிருப்பது மட்டுமின்றி, தமிழக மீனவர்கள் தொடர்ந்து கொல்லப்பட்டு வருவதை எதிர்த்தும், இதற்குத் துணைபோகும் இந்திய அரசை எதிர்த்தும் 27.1.2011 அன்று மாலை தஞ்சை ரயிலடியில் ம.க.இ.க., வி.வி.மு., பு. மா.இ.மு., ஆகிய அமைப்புகள் இணைந்து விண்ணதிரும் முழக்கங்களுடன் ஆர்ப்பாட்டத்தை நடத்தின.



ம.க.இ.க. கிளைச் செயலர் தோழர் இராவணன் தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் வி.வி.மு. பட்டுக்கோட்டை வட்ட அமைப்பாளர் தோழர் மாரிமுத்து, ம.க.இ.க. மாநில இணைச் செயலர் தோழர் காளியப்பன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

வட்டார மேலாதிக்க அரசான இந்தியாவின் துணையுடன் ஈழத் தமிழினப் படுகொலையை நடத்திய சிங்கள இனவெறி பாசிச கும்பல், இந்தியத் தமிழனையும் வேட்டையாடி வருவதையும், பாசிச ராஜபக்சே கும்பலுக்குத் துணை நிற்கும் இந்திய மேலாதிக்க அரசை வீழ்த்தாமல், தொடரும் இத்தகைய தாக்குதல்களை முறியடிக்க முடியாது என்பதையும், கடற்பகுதிகளைப் பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள் விழுங்குவதற்காகக் கொண்டுவரப்பட்டுள்ள கடற்கரை மேலாண்மைச் சட்டம் எனும் நில அபகரிப்புச் சட்டம் மீனவர் வாழ்வுரிமைக்குப் பேரபாயமாக நிற்பதையும் உணர்த்திய இந்த ஆர்ப்பாட்டம், மக்களைப் போராட்டத்துக்கு அறைகூவுவதாக அமைந்தது.

– தகவல்: ம.க.இ.க., தஞ்சை.



படிப்பகம்

www.padippakam.com

## ஆதர்ஷ் ஊழல்:

# அம்பலமாகும் உண்மைகள்

**மும்பய் மாநகரம் ரியல் எஸ்டேட் மாஃபியாக்களின் வசமாகிவிட்டது என்பதுதான் ஆதர்ஷ் ஊழல் உணர்த்தும் உண்மை.**

''**கா**ர்கில் போரில் இறந்துபோன இராணுவச் சிப்பாய்களுக்காகக் கட்டப்பட்ட ஆதர்ஷ் கூட்டுறவு சங்க வீடுகளை, அரசியல்வாதிகளும், முன்னாள் இராணுவத் தளபதிகளும், உயர் அதிகாரிகளும் விதிமுறைகளை மீறியும் மாற்றியும் வளைத்துப் போட்டுக் கொண்டார்கள்; அந்த அடுக்குமாடிக் குடியிருப்பு சுற்றுப்புறச் சூழல் விதிகள், கடற்கரை ஒழுங்காற்றுச் சட்டம், நகர்ப்புற வளர்ச்சி விதிகளை மீறிக் கட்டப்பட்டுள்ளது'' என்பதைத் தாண்டி, ஆதர்ஷ் கூட்டுறவு சங்க ஊழல் பற்றி ஊடகங்கள் எழுதுவது கிடையாது. ஆனால், ஆதர்ஷ் ஊழல் அரசியல்வாதிகள் - அதிகார வர்க்கத்தின் முறைகேடுகள், ஊழலை மட்டும் குறிக்கவில்லை. அதையும் தாண்டி, மும்பய் மாநகரில் நிலவும் குடியிருப்புப் பிரச்சினைகள் பற்றிய உண்மைகளையும்; மும்பய் மாநகரின் பொது இடங்களை ரியல் எஸ்டேட் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள கார்ப்பரேட் நிறுவனங்கள், அரசியல்வாதிகள் - அதிகார வர்க்கத்தின் உதவியோடு தமக்குச் சொந்தமாக்கிக் கொண்டு வருவதையும் உணர்த்துகிறது.

ரியல் எஸ்டேட் அதிபர்கள் மும்பய் நகரின் பொது இடங்களை நிழல் உலக மாஃபியாக்களின் உதவியோடு ஆக்கிரமிக்கும் போக்கு 1970-களில் தொடங்கியது. இது, இன்று ரியல் எஸ்டேட் அதிபர்கள் - அரசியல்வாதிகள் - அதிகார வர்க்கக் கூட்டணியாக வளர்ந்திருப்பதோடு, மகாராஷ்டிர மாநில அதிகாரத்தையும் கைப்பற்றிக் கொண்டுவிட்டது.

1980-க்குப் பின் மகாராஷ்டிர மாநில முதல்வர் நாற்காலியில் அமர்ந்த ஒவ்வொருவருமே நகர வளர்ச்சித் துறையைத் தமது கையில் வைத்துக் கொண்டு, இந்த ரியல் எஸ்டேட் கார்ப்பரேட் நிறுவனங்களின் பகற்கொள்ளைக்காகச் சட்டங்களை வளைத்திருக்கிறார்கள், மாற்றியிருக்கிறார்கள், மீறியிருக்கிறார்கள். குறிப்பாக, 1989-இல் மகாராஷ்டிர முதல்வராக இருந்த சரத் பவார் அரசுக்குச் சொந்தமான 285 காலிமனைகளைத் தனியார் ரியல் எஸ்டேட் நிறுவனங்களிடம் ஒப்படைப்பதற்கு ஏற்றவாறு சட்டத் திருத்தம் கொண்டு வந்தார். இதன் பின் ரியல் எஸ்டேட் மாஃபியாக்கள் இந்த அரசியல் ஆதரவைப் பயன்படுத்திக் கொண்டு, முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு மும்பய் நகரின் பொது இடங்களை வளைத்துப் போட்டுக் கொள்ளத் தொடங்கினார்.

இதனையடுத்து 2001-இல், மகாராஷ்டிர நகர வளர்ச்சி சட்டத்திலுள்ள ஓட்டையைப் பயன்படுத்திக் கொண்டு, மும்பய் நகரில் மூடப்பட்டுக் கிடக்கும் ஜவுளி ஆலைகளின் நிலங்களை ரியல் எஸ்டேட் நிறுவனங்கள் கைப்பற்றிக் கொள்வதற்கு ஏற்றவாறு சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டது. இச்சட்டத் திருத்தத்திற்கு உச்சநீதிமன்றம் ஒப்புதல் அளித்ததோடு, 285 ஏக்கர் ஆலை நிலத்தில் ஆடம்பர அடுக்குமாடிக் குடியிருப்புகளையும், வர்த்தக வளாகங்களையும் கட்டி விற்பதற்கு ரியல் எஸ்டேட் மாஃபியாக்களுக்கு அனுமதியும் அளித்தது. இந்த உத்தரவு அந்த ஆலை நிலங்களின் ஒரு பகுதியில் குடியிருந்து வந்த தொழிலாளர்களின் குடும்பங்களை நகரத்தை விட்டே துரத்தியதோடு, இனி ஏழைகள் மும்பய் நகரில் வீடு கட்டிக் குடியிருப்பதற்குத் துண்டு நிலம்கூடக் கிடைக்காது என்ற நிலையை ஏற்படுத்தியது.

காங்கிர க்கு நெருக்கமான ஷஹித் முகம்மது கான் என்ற ரியல் எஸ்டேட் மாஃபியாவால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மும்பய் மாநகராட்சிக்குச் சொந்தமான 9,000 சதுர அடி பரப்பு கொண்ட மனை.



அசோக் சவான், மகாராஷ்டிர மாநில வருவாய்த் துறை அமைச்சராக இருந்த பொழுதுதான், ஆதர்ஷ் கூட்டுறவு சங்க வீடுகளைத் தனியாரிடமும் விற்பதற்கு ஏற்றவாறு சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. இந்தச் சட்டத் திருத்தத்தைப் பயன்படுத்திக் கொண்டுதான் அசோக் சவானின் மாமியாரும், கொழுந்தியாளும், முன்னாள் இராணுவத் தளபதிகளும், அதிகார வர்க்கக் கும்பலும், புதுப் பணக்காரர்



படிப்பகம்

www.padippakam.com



முகேஷ் அம்பானியின் ஆடம்பர அடுக்குமாடிக் குடியிருப்பு; வீடு என்ற பெயரில் தகரக் கொட்டகையிலும் குப்பை, சாக்கடைகளுக்கு மத்தியிலும் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள உழைக்கும் மக்களின் குடியிருப்பு; எதிரும் புதிருமான மும்பய்.

களும் அக்குடியிருப்பிலுள்ள வீடுகளை வளைத்துப் போட்டனர்.

அசோக் சவான் மகாராஷ்டிர மாநில முதல்வராக ஆன பின், ரியல் எஸ்டேட் நிறுவனங்கள் தாம் கட்டி வரும் அடுக்குமாடிக் குடியிருப்பு வளாகங்களில் பொது மக்கள் பயன்படுத்துவதற்கு ஏற்ற பூங்காக்களை அமைத்துக் கொடுத்தால், அக்குடியிருப்புகளின் கட்டுமான பரப்பை (Floor Space Index) அதிகப்படுத்திக் கொள்ளலாம் என்ற சட்டத்திருத்தத்தைக் கொண்டு வந்தார். இச்சட்டத் திருத்தம் பொது மக்களுக்குப் பயன்பட்டதைவிட, ரியல் எஸ்டேட் நிறுவனங்கள் தெற்கு மற்றும் மத்திய மும்பய் நகர்ப் பகுதிகளில் 87 இலட்சம் சதுர அடி நிலத்தைச் சட்டபூர்வமாகவே ஆக்கிரமித்துக் கொள்வதற்குத்தான் பயன்பட்டது.

அடிக்கட்டுமான வசதிகளை மேம்படுத்துவது என்ற பெயரில் அசோக் சவான் அறிவித்த திட்டங்கள் அனைத்துமே ரியல் எஸ்டேட் நிறுவனங்களின் பகற் கொள்ளைக்கான திட்டங்கள்தான். மகாராஷ்டிர மாநிலத் தலைமைச் செயலகத்தை 4,000 கோடி ரூபாய் செலவில் புதுப்பிப்பது, பாந்த்ரா காலனியைப் புதுப்பிப்பது, மும்பய் துறைமுக இணைப்புச் சாலைத் திட்டம் ஆகியவற்றைக் கைப்பற்றிக் கொள்வதில் காங்கிரசுக்கும் அதனின் கூட்டணிக் கட்சியான தேசியவாத காங்கிரசுக் கட்சிக்கும் இடையேயும், ரியல் எஸ்டேட் நிறுவனங்களுக்கு இடையேயும் பெரும் அடிதடியே நடந்ததாவும், சவான் முதலமைச்சர் பதவியில் இருந்து தூக்கியெறியப்பட்டதற்கு இந்தப் போட்டியும் ஒரு முக்கிய காரணம் என்றும் தற்பொழுது செய்திகள் கசிந்து வெளிவந்துள்ளன.

ரியல் எஸ்டேட் மாஃபியா கும்பலின் முறைகேடுகளை அம்பலப்படுத்தியதால் கொல்லப்பட்ட தன்னார்வத் தொண்டர் சதீஷ் ஷெட்டி.



லாவாசா கார்ப்பரேஷன் என்ற கார்ப்பரேட் ரியல் எஸ்டேட் நிறுவனம், புனே நகருக்கு அருகே மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் ஒரு புதிய நகரினை அமைக்க அனுமதி கோரி மகாராஷ்டிர அரசிடம் விண்ணப்பித்ததையடுத்து, இந்நிறுவனத்திற்கு அனுமதி கொடுக்கும் வகையில் அம்மாநில அரசின் மலை வாசஸ்தல கொள்கையில் பல்வேறு திருத்தங்கள் செய்யப்பட்டன. இந்த நிறுவனம் விதிகளை மீறாமல் நகரினை அமைக்கிறதா என்பதைக் கண்காணிக்க அரசால் அமைக்கப்பட்ட சிறப்புத் திட்ட ஆணையத்தின் உறுப்பினர்களாக லாவாசா கார்ப்பரேஷனின் தாய்க் கம்பெனியான ஹிந்துஸ்தான் கட்டுமான நிறுவனத்தின் ஊழியர்களே நியமிக்கப்பட்டதோடு, லாவாசா கார்ப்பரேஷனின் உயர் அதிகாரியே அந்த ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

சுற்றுப்புறச் சூழல் விதிகளையும், கடற்கரை ஒழுங்காற்றுச் சட்டத்தையும் மீறிக் கட்டப்பட்டுள்ள



படிப்பகம்

www.padippakam.com

ஆதர்ஷ் அடுக்குமாடிக் குடியிருப்பை இடிக்க உத்தரவிட்டுள்ள சுற்றுப்புறச் சூழல் அமைச்சகம், அதே போல பல விதிமுறைகளையும் சட்டங்களையும் மீறி முறைகேடான முறையில் கட்டப்பட்டுவரும் லாவாசா நகரினை இடிக்க உத்தரவிடவில்லை. அதற்கு மாறாக, எவ்வளவு விதிமுறைகள் மீறப்பட்டுள்ளனவோ, அதற்கு ஏற்றபடி அபராதம் கட்டிவிடுமாறு லாவாசாவிற்கு உத்தரவிட்டுள்ளது. மைய அரசு லாவாசாவிடம் இப்படிக் கருணை காட்டுவதற்கு காரணம், லாவாசா கார்ப்பரேட் நிறுவனம் என்பது மட்டுமல்ல; காங்கிரசின் கூட்டணிக் கட்சியான தேசியவாத காங்கிரசின் தலைவரும் விவசாயத் துறை அமைச்சருமான சரத் பவாரின் குடும்பத்திற்கும் லாவாசாவிற்கும் இடையேயுள்ள நெருக்கமும் காரணமாகும்.

லாவாசா மேற்குத் தொடர்ச்சி மலையை ஆக்கிரமித்துக் கொள்வதற்கும், அதனின் முறைகேடுகளுக்கும் அனுமதி அளித்துள்ள ஆளும் கும்பல், மும்பய் நகர்ப்புற சேரிகளை ஒவ்வொன்றாக இடித்துத் தள்ளுவதோடு, அங்கு தகரக் கொட்டகைகளைப் போட்டுக்கொண்டு குடியிருந்து வரும் உழைக்கும் மக்களை ஆக்கிரமிப்பாளர்கள் என முத்திரை குத்தித் துரத்தி வருகிறது. இதனை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில், சேரிகளில் குடிசை போட்டு வசிக்கும் உழைக்கும் மக்களை பிக்பாக்கெட் திருடர்கள் என அவமானப்படுத்தித் தீர்ப்பெழுதியது, மும்பய் உயர் நீதிமன்றம்.

மும்பய் நகருக்குள் கூலித் தொழிலாளர்கள் குடியிருந்து வரும் பகுதிகள், இன்று சேரிகளைப் புதுப்பிப்பது என்ற திட்டத்தின் அடிப்படையில் கட்டுமான கார்ப்பரேட் நிறுவனங்களிடம் சட்டபூர்வமாகவே தாரைவார்க்கப்பட்டு வருகின்றன. ஏறத்தாழ 10 இலட்சம் பேர் வசித்து வரும் ஆசியாவிலேயே மிகப்பெரிய நகர்ப்புறச் சேரியான தாராவியைக்கூட இவர்கள் விட்டுவைக்கப் போவதில்லை. தாராவியைப் புதுப்பிப்பதற்காக 15,000 கோடி ரூபாய் பெறுமான திட்டமொன்றை உருவாக்கி வைத்திருக்கிறது, மகாராஷ்டிர அரசு. மும்பய் நகரின் மையமான பகுதியில் 200 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள 50,000 கோடி ரூபாய் பெறுமான இந்த நிலத்தை ஆக்கிரமித்துக் கொள்ள ரிலையன்ஸ் உள்ளிட்ட பல்வேறு கார்ப்பரேட் நிறுவனங்களிடையே இப்பொழுது நாய்ச்சண்டை நடந்து வருகிறது.

காங்கிரசு - தேசியவாத காங்கிரசு கூட்டணி மட்டுமல்ல, எதிர்க்கட்சியான சிவசேனா-பா.ஜ.க. கூட்டணியும் மும்பய் மாநகராட்சியில் தமக்குள்ள பெரும்பான்மை பலத்தைக் கொண்டு, பொது இடத்தை ஆக்கிரமிப்பதில் தமக்குரிய பங்கைப் பெற்று வருகிறது. பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு முன்பு பா.ஜ.க.-சிவசேனா கூட்டணி மகாராஷ்டிர மாநிலத்தை ஆண்டு வந்த பொழுது, ஜவுளி ஆலை நிலங்களைக் கட்டுமான கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு விற்பதில் அதிகாரத் தரகனாகவே செயல்பட்டது. மேலும், அப்பொழுது முதல்வராக இருந்த சிவசேனாவின் மனோகர் ஜோஷியும் பால் தாக்கரேயின் மருமகன் ராஜ் தாக்கரேயும் இணைந்து 450 கோடி ரூபாய்க்கு தாங்களே மில் நிலங்களை விலைக்கு வாங்கி, ரியல் எஸ்டேட் வியாபாரத்திலும் இறங்கினர். இதன் மூலம் தமக்கு வாக்களித்த, மூடப்பட்ட மில் தொழிலாளர்களின் முதுகில் குத்தியது, பா.ஜ.க.-சிவசேனா கூட்டணி.

அரசின் பக்கபலத்தோடு ரியல் எஸ்டேட் மாஃபியாக்கள் நடத்தி வரும் இந்த ஆக்கிரமிப்பின் விளைவாக நகர்ப்புறச் சேரிகள் மட்டுமல்ல, தெற்கு மற்றும் மத்திய மும்பய் நகரில் இருந்து வரும் மத்திய தர வர்க்கக் குடியிருப்புகளும் ஒன்றன் பின் ஒன்றாக மறைந்து வருகின்றன. மும்பய்க்கு வெளியே வனப் பகுதியாகவும், விவசாய விளைநிலங்களாகவும், பழங்குடியின மக்களின் வசிப்பிடமாகவும் இருந்து வந்த வாசா - விரார் பகுதி இன்று கட்டுமான நிறுவனங்களின் கைகளுக்கு மாறிச் சென்றுவிட்டது. மும்பய் மாநகருக்குள் பணக்காரர்கள் மட்டுமே குடியிருக்க முடியும், வர்த்தக நிறுவனங்களை நடத்த முடியும் என்ற நிலைமையை ரியல் எஸ்டேட் மாஃபியாக்கள் - அரசியல்வாதிகள் - அதிகார வர்க்கக் கூட்டணி உருவாக்கி விட்டது.

**மும்பய் மாநகருக்குள் பணக்காரர்கள் மட்டுமே குடியிருக்க முடியும், வர்த்தக நிறுவனங்களை நடத்த முடியும் என்ற நிலைமையை ரியல் எஸ்டேட் மாஃபியாக்கள் - அரசியல்வாதிகள் - அதிகார வர்க்கக் கூட்டணி உருவாக்கி விட்டது.**

இந்தக் கூட்டணி நடத்திவரும் நில ஆக்கிரமிப்பு, ஊழல், அதிகார முறைகேடுகளுள் ஒரு சிறு துளிதான் ஆதர்ஷ் கூட்டுறவு சங்க வீட்டு ஊழல். ஆதர்ஷ் ஊழல் போன்று 170 வீட்டு மனை ஊழல் வழக்குகள் - இவை அனைத்தும் சேரிகளைப் புதுப்பிக்கும் திட்டம் தொடர்பானவை - மும்பய் நகர நீதிமன்றங்களில் மட்டும் நடந்து வருகின்றன. இந்த ஊழல்களைத் தனிப்பட்ட நபர்கள்தான் வெளிக்கொணர்ந்து நடத்தி வருகின்றனர். தனது ஊழல்களையும் அதிகாரமுறைகேடுகளையும் அம்பலப்படுத்திவரும் தன்னார்வத் தொண்டர்களைக் கொலை செய்துவிடும் அளவிற்கு ரியல் எஸ்டேட் மாஃபியாக்களின் பயங்கரவாதம் மும்பய் நகரில் தலைவிரித்தாடுகிறது. மைய அரசு, ஆதர்ஷ் குடியிருப்பைத்தான் இடித்துதள்ள உத்தரவிட்டிருக்கிறதேயொழிய, பொது இடங்களை ஆக்கிரமித்து வரும் இந்தப் பகற்கொள்ளைக் கூட்டணியை ஒழித்துக் கட்ட சிறு துரும்பைக்கூட எடுத்துப் போடவில்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

• குப்பன்



படிப்பகம்

www.padippakam.com

## உ.பி. உணவு ஊழல்:

# ஏழைகளின் பெயரால் நடந்த பகற்கொள்ளை!

''அரசின் உணவு தானியக் கிடங்குகளில் புழுத்துப் போய்க் கிடக்கும் ஒரு தானியத்தைக்கூட ஏழை மக்களுக்கு இலவசமாகத் தர மாட்டேன்'' என அடித்துப் பேசி வருகிறார், மன்மோகன் சிங். இன்னொருபுறமோ, உ.பி. மாநிலத்தில் ரேஷன் கடைகளின் மூலமும் சமூக நலத் திட்டங்களின் மூலமும் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் ஏழைகளுக்கு விநியோகித்திருக்க வேண்டிய இரண்டு இலட்சம் கோடி ரூபாய் பெறுமான உணவு தானியங்களைக் கடத்திக் கொண்டு போய், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விற்றுள்ள ஊழல் நடந்திருப்பது தற்பொழுது அம்பலமாகியுள்ளது. அலைக்கற்றை ஊழல் பிரபலமான அளவிற்கு, உ.பி. மாநிலத்தில் நடந்துள்ள இந்த உணவு ஊழல் ஊடகங்கள் மத்தியில்கூட விரிவாகப் பேசப்படவில்லை.

அலைக்கற்றை ஊழலை நடத்திய குற்றவாளிகள், அவ்வூழலை ''இது அரசின் கொள்கை'' எனக் கூறித் தப்பித்துக் கொள்ள முயலுகிறார்கள். இந்த உணவு ஊழலோ அப்படிபட்ட 'கொள்கை'ப் பூச்சுகள் எதுவுமின்றிப் பட்டப்பகல் வழிப்பறிக் கொள்ளையைப் போல நடந்துள்ளது. சம்பூர்ண கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம், மதிய உணவுத் திட்டம், அந்த்யோதயா உணவு விநியோகத் திட்டம் ஆகியவற்றின் மூலம் ஏழை மக்களுக்கு வழங்க வேண்டிய உணவுப் பொருட்களை, அவர்களுக்கு விநியோகித்துவிட்டதாகப் பொய்க் கணக்கு எழுதியும்; ரேஷன் உணவுப் பொருட்களை ஏற்றிச் செல்லும் லாரிகளைக் கடத்தியும்; கடத்தப்பட்ட உணவுப் பொருட்களை உள்நாட்டில் மட்டுமின்றி, போலியான ஏற்றுமதி ஆவணங்களைத் தயாரித்து, வங்கதேசம், பூடான், நேபாளம் ஆகிய நாடுகளுக்கு 'ஏற்றுமதி' செய்து விற்றும் இந்தக் கொள்ளை நடந்திருக்கிறது.

இந்த ஊழலில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்பட்டால், அவர்களை அடைப்பதற்குப் புதிதாக ஓரிரு சிறைச்சாலைகளைக் கட்ட வேண்டும். அந்தளவிற்கு இந்தக் கொள்ளையர்களின் வலைப்பின்னல் பரந்து விரிந்ததாக உள்ளது. உ.பி.அரசைச் சேர்ந்த 450 உயர் அதிகாரிகள், 800 இடைநிலை அதிகாரிகள், உள்நாட்டையும் வெளிநாடுகளையும் சேர்ந்த 10,000 க்கும் மேற்பட்ட பதுக்கல் வியாபாரிகள், அரசியல்வாதிகள், கடத்தல் பேர்வழிகள் எனவொரு பெரிய கும்பல் இணைந்துதான் இந்தப் பகற்கொள்ளையை நடத்தி வந்திருக்கிறது.

2004-இல் முலயம் சிங் ஆட்சி நடைபெற்றபொழுது, இந்த ஊழலின் நுனி தெரிய வந்தது. 2007-இல் மாயாவதி ஆட்சியில் இந்த ஊழல் உ.பி மாநிலத்தில் 54 மாவட்டங்களில் நடந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த ஊழல் குறித்த விசாரணை 2008-இல் சி.பி.ஐ.-யிடம் ஒப்படைக்கப்பட்டாலும், சி.பி.ஐ., வெறும் மூன்று மாவட்டங்களில் நடந்த ஊழலை மட்டுமே விசாரணைக்கு எடுத்துக் கொண்டது. 2010-ஆம் ஆண்டு இறுதியில் அலகாபாத் உயர்நீதி மன்றம் உத்தரவு இட்ட பிறகுதான் இந்த ஊழல் பற்றி சி.பி.ஐ., முழுமையான விசாரணை நடத்தத் தொடங்கியிருக்கிறது. இந்த வேகத்தில் இந்த ஊழல் விசாரணை நடந்தால், உ.பி. அரசிற்கு இந்த ஊழல் குற்றவாளிகளுக்காகப் புதிதாகச் சிறைச்சாலை கட்ட வேண்டிய தேவையே எழாது.

ரேஷன் அரிசியையும், கோதுமையையும் கடத்திக் கொள்ளையடிப்பது உ.பி. மாநிலத்தில் மட்டும் நடந்து வரும் விசயமல்ல. உ.பி. மாநிலத்தில் அம்பலமாகியுள்ள இந்த இரண்டு இலட்சம் கோடி ரூபாய் பெறுமான ஊழலோடு, பிற மாநிலங்களில் ரேஷன் பொருட்கள் வெளிச்சந்தைக்குக் கடத்தப்படுவதையும் சேர்த்துக் கணக்கிட்டால், இந்த உணவு தானிய ஊழலின் முன்னே அலைக்கற்றை ஊழல் வெறும் சுண்டைக்காய்தான்.

இந்தக் கடத்தலை ஒழிப்பது பற்றி நாம் பேசினால், ஆளும் கும்பலோ பட்ஜெட் பற்றாக்குறையைக் காட்டி, சமூக நலத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதைக் குறைப்பதைப் பற்றித்தான் பேசுகிறார்கள்; ரேஷன் கடைகளை ஒழித்துவிடத் திட்டம் போடுகிறார்கள். ரேஷன் அட்டைகளுக்குப் பதிலாக உணவுக் கூப்பன்கள்; ரேஷன் கடைகளுக்குப் பதிலாக வெளிச் சந்தை - இதுதான் இந்தக் கொள்ளையைத் தடுக்க ஆளும் கும்பல் முன்வைக்கும் மாற்று வழி. கடத்தல்காரர்கள் தற்பொழுது சட்டவிரோதமாக அனுபவித்து வரும் உணவு மானியத்தை, பெரிய வியாபாரிகளிடம் அரசே சட்டபூர்வமாகக் கொடுக்கும் ஏற்பாடு தான் இது.

● குப்பன்

பலாப்பழக் கொட்டைகளை உடைத்து 'உணவாக' உண்ண வேண்டிய அவலத்தில் வாழும் ஒரு ஏழைக்குடும்பம். (கோப்புப் படம்).





படிப்பகம்

www.padippakam.com

# ஆளில்லா விமானத் தாக்குதல்கள்:
# அமெரிக்கப் பயங்கரவாதிகளின் போர்க்குற்றங்கள்

**அமெரிக்காதான் உலகின் மிகக் கொடிய பயங்கரவாதி என்பதை, அந்நாடு ஆப்கானிலும், பாக்.கிலும் நடத்திவரும் இராணுவத் தாக்குதல்கள் நிரூபித்துக் காட்டுகின்றன.**

''பயங்கரவாதிகள் அப்பாவி மக்கள் திரளும் இடங்களில் குண்டு வைப்பார்கள்; மக்கள் திரளுக்குள் புகுந்து கண்மூடித்தனமாக அவர்களைச் சுட்டுக் கொல்வார்கள்'' - இவை பயங்கரவாதிகள் எனப்படுவோருக்கு முதலாளித்துவ ஊடகங்கள் உருவாக்கியிருக்கும் எளிய இலக்கண வரையறை. இந்த வரையறையின்படி பார்த்தாலும், இன்று உலகின் மிகக் கொடிய பயங்கரவாதி அமெரிக்காவாகத்தான் இருக்கமுடியும்.

பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்கள் இருப்பதாகப் பொய் சொல்லி, ஈராக்கில் நுழைந்த அமெரிக்கா கொன்றிருக்கும் அப்பாவி ஈராக் மக்கள் தொடங்கி, பயங்கரவாத எதிர்ப்புப் போர் எனும் பெயரால் ஆப்கானிஸ்தானிலும், அதன் எல்லையை ஒட்டிய பாகிஸ்தானின் வஜீரிஸ்தானிலும் கொல்லப்பட்ட பழங்குடியினர், சோமாலிய உள்நாட்டுப்போரில் கொல்லப்பட்டோர் - என அமெரிக்காவின் பயங்கரவாதத் தாக்குதல்கள் நீள்கின்றன. போர்களின்போது கடைப்பிடிக்க வேண்டிய ஜெனீவா போர் நெறிமுறைகள் அனைத்தையும் காலில் போட்டு நசுக்கியபடியே அதன் கொலைகள் தொடர்கின்றன. நோயாளிகளோ, குழந்தைகளோ, கர்ப்பிணிகளோ அதன் இலக்கிலிருந்து தப்புவதில்லை.

அநீதியான போரைத் தொடுத்திருக்கும் அமெரிக்காவுக்கு திடீர் கொரில்லா தாக்குதல்கள், கண்ணிவெடிகள், அதிக உயிரிழப்பை ஏற்படுத்தும் சக்திவாய்ந்த நாட்டு வெடிகுண்டுகள் மூலம் பதிலடி கொடுத்தனர் தாலிபான்கள். இத்தாக்குதல்களை ஒருங்கிணைக்கும் தாலிபான்கள், ஆப்கனின் எல்லையை ஒட்டி பாகிஸ்தானுக்குள் பதுங்கி இருப்பதைக் கண்டறிவதில் உள்ள சிரமம், அடுத்தடுத்த தாக்குதல்களில் உயிரிழக்கும் அமெரிக்க வீரர்களின் பிணங்கள் அமெரிக்க மக்கள் மத்தியில் ஏற்படுத்திவரும் எதிர்ப்பு, முடிவே இல்லாமல் தொடரும் போரின் காரணமாக அமெரிக்காவின் கூட்டணி நாட்டு படையினர் மத்தியிலும் பரவி வரும் வெறுப்பு — ஆகிய எதிர் விளைவுகளிலிருந்து ஆக்கிரமிப்பாளனாகிய அமெரிக்க அரசு தப்ப முடியவில்லை.

ஆப்கானில் உள்ள மிரன்ஷா என்ற பகுதியில் நடத்தப்பட்ட ஆளில்லா விமானத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் சடலங்கள். (உள்படம்) இத் தாக்குதலில் இறந்து போன குழந்தை.



போரைத் தொடரவேண்டும், அதே நேரத்தில் உயிர்ச்சேதத்தைத் தவிர்க்க வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் தள்ளப்பட்டிருக்கும் அமெரிக்க அரசு, கோடிக்கணக்கான டாலர்களைக் கொட்டி ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல் தொடுக்கிறது. இன்னொருபுறம், தனியார் கூலிப்படைகளையும் களத்தில் இறக்கியிருக்கிறது.

அமெரிக்காவின் ஆளில்லா உளவு விமானங்கள் தாலிபான் இயக்கத்தினரை அடையாளம் கண்டு, அவர்களின் ஆயுதக் கிடங்குகளைக் கண்காணித்து, ஆயுதங்கள் விநியோகிக்கப்படும் வழித்தடங்களையும், நெடுஞ்சாலைகளில் வெடிகுண்டுகள் புதைக்கப்பட்டிருக்கும் வரைபடத்தையும் கண்டறிந்து தகவல்களைத் தொகுக்கின்றன. அமெரிக்காவின் சிறப்புப்படையினர், கிழக்கு, தெற்கு ஆப்கனில் தாலிபான் தலைவர்களையும், குண்டு தயாரிப்போரின் ஒருங்கிணைப்பையும் தொடர்ந்து கண்காணித்துத் தாக்க இரண்டு - மூன்று ஆளில்லா விமானங்களை ஒரே நேரத்தில் கூட்டு வேலையில் ஈடுபடுத்துகின்றனர். 400 மணிநேரத்துக்கும் அதிகமாக ஓடக்கூடிய வீடியோக்களை தினமும் படம் பிடித்து அனுப்புகின்றனர்.

இத்தகைய விமானங்களின் வீடியோ காமிராக்கள் 20 மணிநேரம் வரை அவ்வட்டாரத்தில் தாலிபான்களின் நடமாட்டத்தை நோட்டமிட்டபடியே உள்ளன. இவ்விமானங்களுக்கான விமானிகள் அமெரிக்காவில் இருக்கின்றனர். அவர்கள் இத்தகவல்களை எல்லாம் பகுப்பாய்வு செய்து தரைப்படை தளபதிகளின் கணினிகளுக்கு அனுப்பிவைக்கின்றனர். மக்களுக்கு எச்சரிக்கை ஏதும் விடுக்காமலே தாலிபான்கள் மீது சாப்ட்வேர்களால் ஒருங்கிணைக்கப்பட்ட தாக்குதலை உடனடியாகத் தொடங்கி குறிவைக்கப்பட்ட இலக்கை அழித்து முடிக்கின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

‘‘வழக்கமான விமானத் தாக்குதலில் பொதுமக்களும் பலி ஆவார்கள் என்பதால்தான் இத்தகைய நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துகிறோம்’’ என்றும், ‘‘குறிவைக்கப்பட்டவர்களைத் தவிர வேறு யாரும் இதில் கொல்லப்பட மாட்டார்கள்’’ என்றும் மாபெரும் ஜீவகாருண்யவாதியைப் போலப் பேசுகிறது அமெரிக்க அரசு. ஆனால் குறிதவறும் தாக்குதல்களில் கொத்துக் கொத்தாய் வஜீரிஸ்தான் பழங்குடி பெண்களும், குழந்தைகளும் தலைவேறு உடல்வேறாக சிதைக்கப்பட்டுக் கொல்லப்படும் கோரம் தொடர்கிறது.

2009-ஆம் ஆண்டு பைதுல்லா மெசூத் எனும் பாகிஸ்தானிய தாலிபான் தலைவரைக் கொன்ற அமெரிக்கா, மெசூதைக் கொல்லும் முன் 14 முறை குறிதவறிய தாக்குதல்களை நடத்தி 300-க்கும் மேற்பட்ட பழங்குடியினரைக் கொன்றது. மெசூத் தங்கி இருந்த மக்கீன் நகரத்தில் 2009 ஜூன் 23 அன்று காலையில் நடந்த ஏவுகணைத் தாக்குதலில் மக்கள் சிலர் கொல்லப்பட, இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்யச் சென்ற பொதுமக்கள் மீதும் ஆளற்ற விமானங்கள் ஏவுகணைகளை வீசின. இதில் 80 பேர்கள் உடல் சிதறிப் பலியானார்கள்.

2010 டிசம்பர் 17 அன்று ஸ்பீன் ட்ராங் எனும் பழங்குடி கிராமத்தில் கூடிப் பேசிக்கொண்டிருந்த போராளிகள் என உறுதி செய்யப்படாத 32 பேரை ஆளில்லா விமானங்கள் 3 ஏவுகணைகளை வீசிக் கொன்றன. அடுத்த சில மணி நேரங்களில் ஏவுகணைகளால் குறிவைத்து சில வீடுகள் தாக்கப்பட்டு, ஒரே நாளில் 60 பேர்களை சாம்பலாக்கினர்.

கடந்த டிசம்பர் 28 அன்று,குலாம்கான் எனும் பயங்கரவாதியைத் தாக்குகிறோம் எனச் சொல்லி பொதுமக்கள் 17 பேரைக் கொன்றுள்ளது, அமெரிக்கா. அடுத்தடுத்த தாக்குதல்களில், சாலையில் சென்றுகொண்டிருந்த வாகனம் ஒன்றை அழித்து 6 பேர்களைக் கொன்றது. இந்த ஆண்டு தொடங்கி 20 நாட்கள் ஆகும் முன்னரே 5 பகுதிகளில் பொதுமக்கள் மீது தாக்குதல்கள் நடந்துள்ளன. இதில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவர்களும் தப்பவில்லை.

அமெரிக்காவின் இக்கொலைவெறித் தாக்குதல்களுக்கு பள்ளிகளும், வழிபாட்டுத் தலங்களும், ஆம்புலன்ஸ் உள்ளிட்ட பயணிகள் வாகனங்களும் தப்பியதில்லை. 2009-இல் 53 முறை தாக்கப்பட்ட அம்மலைப் பகுதி 2010-இல் 118 முறை தாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கணமும் அடுத்து நாம் தாக்கப்படுவோமோ எனும் அச்சத்தில் உறைந்து போயுள்ளனர், அப்பழங்குடி மக்கள்.

மலை சூழ்ந்த வஜீரிஸ்தான் பகுதியில் காலம் காலமாக வாழ்ந்துவரும் பழங்குடியினர் இவ்வாறு கொல்லப்பட ஏதாவது காரணம் உண்டா? அப்பிராந்தியத்தில் தாலிபான்கள் நடமாடினர் எனும் காரணம் ஒன்றே அம்மக்களையும் அவர்களின் சொத்துக்களையும் அழிக்க அமெரிக்காவுக்குப் போதுமானது போலும். இத்தகைய தானியங்கி விமானங்களால் இதுவரை கொல்லப்பட்டவர்கள் மட்டும் 2189 பேர் ஆவர்.



தாலிபான் தளபதி க்வாஸ் லாலி என்பவரின் இறுதிச் சடங்கு ஊர்வலத்தின் மீது நடத்தப்பட்ட ஆளில்லா விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட சிறுவன். தெற்கு வாஜிரிஸ்தான் பகுதியில் நடந்த இத்தாக்குதலில் 70 பேர் கொல்லப்பட்டனர்.

அமெரிக்காவில் கணினி முன்பாக அமர்ந்து கொண்டு சில பட்டன்களை அழுத்துவதன் மூலம் ஈராக்கிலோ, ஆப்கனிலோ, அல்லது தாலிபான்கள் ஒளிந்திருப்பதாக சந்தேகிக்கப்படும் பாகிஸ்தானிய பழங்குடி கிராமத்திலோ ஏவுகணைகளை வீசி அப்பாவி மக்களைக் கொல்லும் வேலையைத்தான் பயங்கரவாதத்துக்கு எதிரான போராக அமெரிக்கா சித்தரிக்கிறது. அமெரிக்க இராணுவத்தின் கொலைப்பட்டியலில் இடம் பெறாத, தாலிபான் ஆதரவாளர்கள் பதுங்கியிருக்கும் கிராமங்களை அழிப்பதற்கும் ஒபாமாவின் நிர்வாகம் சி.ஐ.ஏ.வுக்கு ரகசிய ஒப்புதல் வழங்கியுள்ளது.

இந்தப் பச்சைப் படுகொலைகளுக்கு எதிரான கண்டனக் குரல்கள் வலுக்கவே, ‘‘இதில்தான் செலவு குறைவு’’ என்று கூறி கூச்சமே இல்லாமல் மனித உயிர்களை டாலர்களால் அளந்து காட்டுகிறது அமெரிக்க அரசு. ‘‘கூட்டணிப்படையினர் துப்பாக்கிச்சூடு எல்லைக்குள் சிக்கிக் கொள்ளும்போதும், நமது படைகளுக்கு பலத்த உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தும் சக்தி வாய்ந்த நாட்டு வெடிகுண்டுகள் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் சூழலிலும் மட்டுமே ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்துகிறோம்’’ என்றும் படுகொலைகளை நியாயப்படுத்துகிறது. வழக்கமான ஏவுகணைத் தாக்குதல் நடத்தினாலும், இத்தகைய விளைவுகள் ஏற்படத்தான் செய்யும் என்று குறி தவறிய தாக்குதல்களை நியாயப்படுத்துகிறது.

இந்தப் படுகொலைகளுக்காக ஒருவேளை போர்க் குற்றம் சாட்டப்பட்டால், அதிலிருந்து அமெரிக்க ராணுவத்தைத் தப்பவைப்பதற்காகவே, பாகிஸ்தான் எல்லையிலிருந்து 13 ஆயிரம் கி.மீ. தொலைவில் உள்ள அமெரிக்காவின் நேவடா மாகாணத்தில் இயங்கும் ஆறு தனியார் ஒப்பந்த நிறுவனங்களிடம் இந்த வேவு விமானங்களை இயக்கும் பொறுப்பை ஒப்படைத்துள்ளது அமெரிக்க இராணுவம்.

‘பயங்கரவாத எதிர்ப்புப் போரில்’ அமெரிக்கா இழைத்து வரும் இக்குற்றங்கள் தற்செயலானவையோ



படிப்பகம்

www.padippakam.com

எதிர்பாராதவையோ அல்ல. தாலிபான்களையோ அல்கைதாவினரையோ உயிருடன் பிடிப்பதால், சிறை, நீதிவிசாரணை போன்ற தலைவலி பிடித்த வேலைகளைச் செய்யவேண்டி வரும் என்பதால், விசாரணை ஏதுமின்றிஅவர்களையும், அப்பிராந்தியத்தில் உள்ள அனைத்து மக்களையும் அழித்திடும் நாசகரப் போரை திட்டமிட்டேதான் அமெரிக்கா நடத்தி வருகிறது. பிடிபட்டுள்ள போர்க்கைதிகளை அமெரிக்க சிறையில் வைத்தால், எழக்கூடிய பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்காகவே, உலகெங்கும் அமெரிக்கா அமைத்திருக்கும் ரகசிய சித்திரவதை முகாம்களிலும், மிதக்கும் சிறைகளிலும் (போர்க்கப்பல்களிலேயே சித்திரவதை முகாம்கள்) அவர்களை அடைத்திருக்கிறது.




''யார் தீவிரவாதி? சி.ஐ.ஏ.வா அல்லது தாலிபானா? ஆளில்லா விமானத் தாக்குதலில் பலியானவர்களைக் கேளுங்கள்'' என்ற முழக்கத்துடன் அமெரிக்கப் பயங்கரவாதத்தை அம்பலப்படுத்தி, ஆப்கன் எல்லையையொட்டிய பாக்.கின் கிராமப்புறங்களில் நடந்த ஆர்ப்பாட்டம்.

குவாண்டனாமோ சிறையில் உள்ள தாலிபான் கைதிகளின் மீது லாரியம் என்ற தடை செய்யப்பட்ட (மலேரியா எதிர்ப்பு மருந்து) மருந்தைச் செலுத்தி சோதனை செய்திருக்கிறது அமெரிக்க இராணுவம். இம்மருந்து கடுமையான மனநோய்களையும், நரம்புச் சீர்கேடுகளையும், உருவாக்க வல்லது. கடும் மன அழுத்தம், புலனுணர்வுகள் தெளிவின்றிப் போதல், கொலை மற்றும் தற்கொலை எண்ணம் போன்றவற்றை இம்மருந்து உருவாக்க வல்லது என்பது பல ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது. லாரியம் மருந்தைத் தயாரிக்கும் நிறுவனமே, *1990*-களில் அதன் பக்கவிளைவாக தற்கொலை எண்ணம் அதிகரிப்பதாகப் பதிவு செய்துள்ளது. அமெரிக்க ராணுவம் கூட, மலேரியாவிற்கு இம்மருந்தைத் தவிர ஏனைய மருந்துகளைப் பயன்படுத்துமாறு விதிமுறைகளை வைத்துள்ளது.

குவான்டனாமோ சிறை அமைந்துள்ள கியூபத் தீவில் கடந்த *50* ஆண்டுகளாக மலேரியா நோயே இல்லை. அங்கு அடைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு லாரியம் மருந்தைத் தொடர்ந்து கொடுத்து வந்துள்ளனர். அங்குள்ள ஆப்கன் கைதிகளில் *40* சதவீதத்தினருக்கு இப்போது மலேரியா நோய் வந்துள்ளது. அமெரிக்க அரசின் சட்டப்படியே குவாண்டனாமோவில் இந்த மருந்தைப் பயன்படுத்தி இருப்பது சட்டவிரோதமானது மட்டுமல்ல, ஐ.நா.வின் சித்திரவதைக்கெதிரான விதிமுறைகளையும் மீறியதாகும். ஆனால் அமெரிக்காவோ, 'பயங்கரவாதத்திற்கெதிரான போரில்' பிடிபட்டவர்களுக்கு எல்லாம் இவ்விதிமுறைகள் பொருந்தாது என ஈவிரக்கமின்றி சொல்லி கைதிகளிடம் மருத்துவ ஆராய்ச்சி செய்யும் வக்கிரத்தை அரங்கேற்றி இருக்கிறது.

உலகப்போரின்போது சீனமக்கள் மீது ஜப்பானும், ரஷ்ய மக்கள் மீதும், யூதர்கள் மீதும் ஜெர்மனியும் இத்தகைய மருந்துப் பரிசோதனைகளைச் செய்து பார்த்தன. நாஜிகளால் ஆஷ்விட்ஸ் சித்திரவதை முகாமில் யூதர்களின் மீது பரிசோதனை மருந்துகள் செலுத்தப்பட்டு ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. அக்குற்றங்கள் நியூரம்பர்க் விசாரணையில் போர்க்குற்றங்களாக அறிவிக்கப்பட்டு அக்குற்றமிழைத்தவர்களுக்கு மரண தண்டனை தரப்பட்டது. இவற்றை அன்று போர்க்குற்றங்கள் என்று சொன்ன அமெரிக்கா, அதே போர்க்குற்றங்களைத்தான் குவாண்டனாமோ சிறையில் செய்து கொண்டிருக்கிறது.

பயங்கரவாத எதிர்ப்பு என்ற பெயரில் அமெரிக்கா கடைப்பிடிக்கும் இந்த வழிமுறைகளை எல்லா நாட்டு ஆளும் வர்க்கங்களும் பின்பற்றத் தொடங்கியிருக்கின்றன. பாலஸ்தீன மக்களுக்கு எதிராக வெகு நீண்ட காலமாகவே இசுரேல் இத்தகைய நெறியற்ற பயங்கரவாதப் போர்முறைகளைப் பயன்படுத்தி வருகிறது.

இலங்கையில் இன அழிப்புப் போரின்போது வேவு விமான நுட்பம் பயன்படுத்தப்பட்டது. அதற்கான சேவைகளை 'ஒப்பந்தங்கள்' மூலம் செய்து தர தொழில்நுட்ப நிபுணர்கள் அமர்த்தப்பட்டனர். புலி அழிப்பு என்ற பெயரில் தமிழின அழிப்பை ராஜபக்சே அரசு நியாயப்படுத்தியது. சோமாலிய 'கடற்கொள்ளையர்'களைத் தாக்குவதற்கு பிளாக் வாட்டர்ஸ் எனும் தனியார் பாதுகாப்பு நிறுவனப் படை அமர்த்தப்பட்டுள்ளது. மாவோயிஸ்ட்டுகளுக்கு எதிரான போரில், சல்வா ஜூடும் என்ற கூலிப்படையை களத்தில் இறக்கி தோல்வி கண்ட அரசு, இப்போது ஆளற்ற விமானங்கள் மூலம் மாவோயிஸ்டுகள் மீது 'குறி வைத்து தாக்குதல் நடத்த' தயாராகிக் கொண்டிருக்கிறது. இதற்கென இஸ்ரேல் இராணுவத்துடன் பேச்சுவார்த்தை நடக்கின்றது.

தன்னுடைய ஆக்கிரமிப்புப் போர்களில் பயங்கரவாத முறைகளைப் பின்பற்றுவது மட்டுமின்றி, அதே வழிமுறைகளில் எல்லா நாடுகளின் ஆளும் வர்க்கங்களையும், அரசுகளையும், இராணுவங்களையும் பயிற்றுவிக்கிறது அமெரிக்க அரசு. உலகின் கொடிய பயங்கரவாதி மட்டுமல்ல, பல்வேறு பாசிச பயங்கரவாத அரசுகள் அனைத்துக்கும் ''காட்ஃபாதர்'' அமெரிக்காதான்.

• அழகு



படிப்பகம்

www.padippakam.com







# “காங்கேயம்–முத்தூர் மின்வாரிய அலுவலகமா? ஆதிக்க சாதிவெறியர்களின் கூடாரமா?”

**– ஆதிக்க சாதிவெறி எதிர்ப்புக் கூட்டியக்கத்தின் ஆர்ப்பாட்டம்.**

திருப்பூர் மாவட்டம், காங்கயம் வட்டம் முத்தூரில் உள்ள மின்வாரிய அலுவலகத்தில், கடந்த ஆண்டு டிசம்பர் 6-ஆம் நாளன்று தாழ்த்தப்பட்ட அருந்ததி பிரிவைச் சேர்ந்த இளம் பொறியாளர் சாமிதுரை மீது உள்ளூர் வேளாளக் கவுண்ட ஆதிக்க சாதிவெறியர்கள் சாதியைச் சொல்லி இழிவுபடுத்திக் கொலைவெறித் தாக்குதலை நடத்தியுள்ளனர். இத்தாக்குதலுக்கு மின்வாரிய அதிகாரிகள் ஆதரவாக நின்றுள்ளனர். தமிழக நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் சாமிநாதனின் தூண்டுதலால், போலீசார் சாமிதுரை மீது பிணையில் வெளிவர முடியாத பிரிவின் கீழ் பொய்வழக்குப் பதிவு செய்துள்ளனர். மின்வாரியமும் சாமிதுரையைத் தற்காலிகப் பணியிடை நீக்கம் செய்து பழிவாங்கியுள்ளது.

அமைச்சர் சாமிநாதனின் ஊர் என்பதால், முத்தூரில் அவரும் அவரது உறவினர்களும் மின்திருட்டில் ஈடுபட்டு வருவதற்கும், அதிகாரிகள் இலஞ்ச ஊழலில் ஈடுபடுவதற்கும் உடந்தையாக இருக்க சாமிதுரை மறுத்துவிட்டார். இதனால், சாதிவெறிபிடித்த அதிகாரிகள் அவரைப் புறக்கணித்துத் தொல்லைப் படுத்தி வந்தனர். அமைச்சர் நிர்ப்பந்தித்ததால், மின்வாரிய அதிகாரிகளால் மனநலம் பாதிக்கப்பட்டவராகச் சித்தரிக்கப்பட்டு அவர் நீலகிரிக்கு மாற்றப்பட்டார். பு.ஜ.தொ.மு., உதவியுடன் மேற்படி உத்தரவுக்கு உயர் நீதிமன்றத்தில் இடைக்காலத் தடை பெறப்பட்டது. இதனால் அவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்று நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டிய கட்டாயம் எழுந்ததால், மின்வாரிய நிர்வாகம் அதிர்ச்சியடைந்து, அவருக்குத் தொடர்ந்து தொல்லைகள் கொடுத்தது. அவரது கோப்புகளும் பதிவேடுகளும் களவாடப்பட்டன.

இதற்கெதிராக அனைத்து அதிகாரிகள் மீதும் வழக்குத் தொடர அனுமதி கேட்டு சாமிதுரை முறையிட்டதும், இவர் நக்சல்பாரி இயக்கத்தைச் சேர்ந்தவர் என்றும் அரசின் திட்டங்களை முடக்கி வைத்துச் சதி செய்வதாகவும் அதிகாரிகள் அவதூறு செய்தனர். அவரை அச்சுறுத்திப் பணிய வைக்கவே சாதிவெறியர்களைக் கொண்டு கடந்த டிசம்பர் 6-ஆம் தேதியன்று கொலைவெறித் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இந்த அநீதியை எதிர்த்து, பெரியார் தி.க., ஆதித் தமிழர் பேரவை, தலித் விடுதலைக் கட்சி உள்ளிட்டுப் பல்வேறு அரசியல் கட்சிகள் - தாழ்த்தப்பட்டோர் இயக்கங்களோடு பு.ஜ.தொ.மு., மக.இ.க., ஆகிய அமைப்புகளும் இணைந்து ‘‘ஆதிக்க சாதிவெறி எதிர்ப்புக் கூட்டியக்கம்’’ உருவாக்கப்பட்டது. இக்கூட்டியக்கத்தின் சார்பில், ‘‘காங்கயம் - முத்தூர் மின்வாரிய அலுவலகமா? ஆதிக்க சாதிவெறியர்களின் கூடாரமா?’’ என்ற தலைப்பில் 31.12.2010 அன்று முத்தூர் பேருந்து நிலையத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் பெரியார் தி.க. தலைவர் தோழர் கொளத்தூர் மணி, ஆதித்தமிழர் பேரவை நிறுவனர் தோழர் அதியமான், மூத்த வழக்குரைஞர் ப.பா.மோகன், பு.ஜ.தொ.மு.வைச் சேர்ந்த தோழர் இராமசாமி மற்றும் பிற முன்னணியாளர்கள் தீண்டாமைக் கொடுமைக்கு எதிராகக் கண்டன உரையாற்றினர். தாக்குதலை நடத்திய சாதிவெறியர்களையும் துணை நின்ற அதிகாரிகளையும் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து தண்டிக்க வேண்டும்; சாமிதுரை மீது போடப்பட்டுள்ள பொய்வழக்குகளை உடனே திரும்பப் பெற வேண்டும் என்ற கோரிக்கையோடு இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்திய இக்கூட்டியக்கத்தினர், அடுத்த கட்ட போராட்டத்துக்கு ஆயத்தமாகி வருகின்றனர்.

– தகவல்: பு.ஜ.தொ.மு., காங்கயம்.

## “ஸ்பெக்ட்ரம் ஊழல் என்பது வெறும் ஊழல் மட்டுமில்லை; இது கார்ப்பரேட் முதலாளிகளின் பகற்கொள்ளை!”

– கார்ப்பரேட் கொள்ளைக்கு எதிராகப் புரட்சிகர அமைப்புகளின் பிரச்சாரம்.

‘‘ஸ்பெக்ட்ரம் ஊழல் என்பது வெறும் ஊழல் மட்டுமில்லை; இது கார்ப்பரேட் முதலாளிகளின் பகற்கொள்ளை! தனியார்மயமே இதன் ஆணிவேர்; இதனைத் தகர்க்க நக்சல்பாரியாய் ஒன்றுசேர்! கார்ப்பரேட் கொள்ளைக்கு எதிராகக் கிளர்ந்தெழுவோம்! ஊழல் சொத்துக்களைப் பறித்தெடுப்போம்!’’என்ற முழக்கத்தின் அடிப்படையில் ம.க.இ.க., வி.வி.மு., பு,மா.இ.மு., பு.ஜ.தொ.மு., பெ.வி.மு., ஆகிய புரட்சிகர அமைப்புகள் தமிழகமெங்கும் வீச்சாகப் பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகின்றன. துண்டறிக்கைகளோடு தெருமுனைக் கூட்டங்கள், ஆலைவாயிற் கூட்டங்கள், பேருந்துகளில் பிரச்சாரம் எனப் பல வடிவங்களில் இப்பிரச்சார இயக்கம் நடந்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக, ஓசூரில் செயல்பட்டு வரும் பு.ஜ.தொ.மு., வி.வி.மு.,வுடன் இணைந்து 24.1.2011 அன்று மாலை ஓசூர் மூக்கொண்ட பள்ளி பேருந்து நிறுத்தம் அருகே தெருமுனைக் கூட்டத்தை நடத்தியது. பொதுச் சொத்துக்களைச் சூறையாடும் கார்ப்பரேட் கொள்ளையையும், இதற்கு அடிப்படையான தனியார்மயத்தையும் விளக்கி, இக்கொள்ளையர்களிடமிருந்து நமது சொத்துக்களைப் பறிக்க அறைகூவிய இக்கூட்டம், பகுதிவாழ் உழைக்கும் மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றது.




–பு.ஜ.செய்தியாளர், ஓசூர்.



படிப்பகம்

# விக்கிலீக்ஸ்:
# உண்மை சுடுகிறது! அமெரிக்கா அலறுகிறது!

**விக்கிலீக்ஸின் குரல்வளையை நெறிக்கும் அமெரிக்காவுக்கு ஜனநாயகம் பற்றிப் பேசும் அருகதை கிடையாது.**

பின்லாடன் போலவே, விக்கிலீக்ஸ் எனும் தகவல் ஊடக நிறுவனத்தின் நிறுவனரான ஜூலியன் அசாங்கேவும் அமெரிக்க வல்லரசால் பயங்கரவாதியாக அறிவிக்கப்பட்டிருக்கிறார். அவர் கைது செய்யப்படவேண்டும், கொல்லப்பட வேண்டும் என்று அமெரிக்கக் குடியரசுக் கட்சியின் பிரமுகரான சாரா பாலின் கொக்கரிக்கிறார். அமெரிக்க உள்துறைச் செயலரான ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஹிலாரி கிளிண்டன், அமெரிக்கத் தேச நலனுக்கு எதிராக இராணுவ இரகசியங்களை வெளிப்படுத்திய குற்றத்தை இழைத்துள்ளதாகக் கூறி, அசாங்கேவுக்கு எதிராக அமெரிக்கத் தேசிய வெறியைக் கிளறிவிட முயற்சிக்கிறார்.

அசாங்கேவின் சொந்த நாடான ஆஸ்திரேலியாவின் பிரதமர், அவரது கடவுச்சீட்டு திரும்பப் பெறப்படும் என்று அறிவித்துள்ளார். அசாங்கே ஸ்விட்சர்லாந்து நாட்டில் அரசியல் தஞ்சம் கோரியதும், கடும் விளைவுகளை ஸ்விட்சர்லாந்து எதிர்கொள்ள நேரிடும் என்று எச்சரிக்கிறார், அந்நாட்டிலுள்ள அமெரிக்கத் தூதர். தனது நாட்டின் இரு பெண்களிடம் அசாங்கே பாலியல் வன்புணர்ச்சியில் ஈடுபட்டார் என்று குற்றம் சாட்டி அவரைத் தேடுகிறது ஸ்வீடன். பிரிட்டனில் அவர் கைது செய்யப்பட்டு தினசரி போலீசு நிலையத்தில் கையெழுத்திட வேண்டும் என்ற நிபந்தனையில் அவரை வீட்டுக் காவலில் வைத்திருக்கிறது பிரிட்டிஷ் அரசு. அவரை அமெரிக்காவுக்குக் கொண்டு வந்து, அமெரிக்கச் சட்டப்படி தண்டிக்க வேண்டும் என்கிறது, அமெரிக்கா.

விக்கிலீக்ஸ் எனும் தகவல் ஊடக நிறுவனத்தின் நிறுவனரான அசாங்கே செய்த மாபெரும் குற்றம் தான் என்ன? ஏகாதிபத்திய உலகம் ஏன் அவரைப் பயங்கரவாதியாகக் கருதித் தண்டிக்கத் துடிக்கிறது? ஊடகங்கள் சித்தரிப்பதைப் போல உலகம் இயங்கிக் கொண்டிருக்கவில்லை என்ற உண்மையை வெளிப்படையாக்கிவிட்டது, விக்கிலீக்ஸ். எவற்றையெல்லாம் இரகசியம் என்று அறிவித்து ஏகாதிபத்திய உலகம் மூடிமறைக்கிறதோ, அவற்றையெல்லாம் பகிரங்கப்படுத்தியுள்ளார் அசாங்கே. ஏகாதிபத்திய நாடுகளின் கணினிகளுக்குள் ஊடுருவல் (ஹாக்கிங்) செய்து, தகவல்களைச் சேகரித்து வெளியிட்டதுதான் அவர் செய்த 'குற்றம்'. அமெரிக்கா மற்றும் மேற்கத்திய ஏகாதிபத்தியங்கள் நடத்திவரும் ஆக்கிரமிப்புப் படுகொலைகளையும், அப்பட்டமான மனித உரிமை மீறல்களையும், போர்க்குற்றங்களையும் அவர்களின் இரகசிய ஆவணங்கள், வாக்குமூலங்கள், ஒளிநாடாக்களிலிருந்து உலகுக்கு அம்பலப்படுத்தியதுதான் அவர் செய்த 'குற்றம்'. எனவேதான், தனது அரசின் ஆவணங்களை இரகசியமாகத் திருடி உளவு வேலைகளில் ஈடுபட்டார் என்று குற்றம் சாட்டி அவரைத் தேடுகிறது அமெரிக்கா. பாலியல் வன்முறைக் குற்றம் சாட்டி தண்டிக்கத் துடிக்கிறது, அமெரிக்க ஆதரவு நாடான ஸ்வீடன்.

2006-ஆம் ஆண்டில் ஆசிய, ஆப்பிரிக்க, மத்தியக் கிழக்கு நாடுகளின் அரசுகள் பற்றியும், அவற்றின் மனித உரிமை மீறல்கள் பற்றியும் விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்தி வந்தது. கென்யாவின் படுகொலைகளை அம்பலப்படுத்தியதற்காக 2008-ஆம் ஆண்டில் அனைத்துலக பொது மன்னிப்புக் கழகத்தின் (ஆம்னஸ்டி) விருது அசாங்கேவுக்கு வழங்கப்பட்டது. இதர நாடுகளின் மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்துவது பற்றி அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகளுக்கும் கவலையில்லை. இத்தகைய மனித உரிமை மீறல்களைக் காட்டி தலையீடு செய்வதற்கு அவர்களுக்குச்






படிப்பகம்

www.padippakam.com

சாதகமான விசயம்தான் இது. ஆனால், பின்னர் வந்த காலத்தில் அசாங்கே அமெரிக்கப் பயங்கரவாதத்தை அம்பலப்படுத்தும் அதன் இரகசிய ஆவணங்களை வெளியிடத் தொடங்கியதால், இப்போது அவர் ஏகாதிபத்திய உலகத்துக்குப் பயங்கரவாதியாகிவிட்டார். இந்த ஆவணங்கள் வெளிவராமல் தடுக்க அமெரிக்கா எடுத்த முயற்சிகளும் தோல்வியில் முடிந்து விட்டன.



அமெரிக்காவால் பயங்கரவாதியாக அறிவிக்கப்பட்டுள்ள விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாங்கே.

அமெரிக்கா மற்றும் மேற்கத்திய ஏகாதிபத்தியவாதிகளின் கரங்களில் ஏழைநாட்டு மக்களின் இரத்தம் படிந்திருப்பதை அவர்களது வாக்குமூலங்களிலிருந்தே இந்த ஆவணங்கள் அம்பலப்படுத்திக் காட்டுகின்றன. பயங்கரவாதத்துக்கு எதிரான போர், மனித உரிமை - ஜனநாயகத்தை நிலைநாட்டுவது என்று கூறிக் கொண்டு ஆக்கிரமிப்புப் போர்களை நடத்திவரும் அமெரிக்காவின் பயங்கரவாத கோரமுகத்தை இந்த ஆவணங்கள் திரைகிழித்துக் காட்டுகின்றன. அமெரிக்கா என்பது மிகக் கொடூரமான வக்கிரமான வெறிபிடித்த மனிதத் தன்மையற்ற உலக மேலாதிக்க வல்லரசு என்று இப்போது கிழிபடுவதால், ஏகாதிபத்தியவாதிகள் அசாங்கேயைத் தண்டித்து உண்மைகள் வெளிவராமல் வாயடைக்கக் கீழ்த்தரமாக முயற்சிக்கின்றனர். இப்போது விக்கிலீக்ஸ், ஏகாதிபத்திய நாடுகளது வங்கிகளின் இரகசிய ஆவணங்களை வெளியிடப் போவதாக அறிவித்துள்ளதால், ஏகாதிபத்தியவாதிகள் மேலும் ஆத்திரமடைந்து இந்த உண்மைகளை அழிக்கத் துடிக்கின்றனர்.

தென் அமெரிக்க நாடுகளில் மக்களால் ஜனநாயக ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளைத் தூக்கியெறியவும், ஈரானுக்கு எதிராகப் போர் தொடுக்கவும் அமெ

## காஷ்மீரில் தொடரும் மனித உரிமை மீறல்கள் விக்கிலீக்ஸ் வழியே கசியும் உண்மைகள்

**உ**லகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு என்று பீற்றிக் கொள்ளும் இந்தியா, காஷ்மீரில் அப்பட்டமாக மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ள விவகாரம் விக்கிலீக்ஸ் மூலம் கசியத் தொடங்கியுள்ளது.

செஞ்சிலுவைச் சங்கத்தினர் 2002-ஆம் ஆண்டிலிருந்து 2004 வரையிலான காலத்தில் காஷ்மீரில் 177 முறை கைதிகள் முகாமுக்குச் சென்று 1491 கைதிகளைச் சந்தித்து, தனிப்பட்ட முறையில் 1296 பேரிடம் பேட்டியெடுத்துள்ளனர். இவற்றில் 852 பேர் தாங்கள் கடுமையாக வதைக்கப்படுவதாகவும் கீழ்த்தரமாக நடத்தப்படுவதாகவும், மொத்தத்தில் 171 பேர் தங்கள் மீது ஒன்று முதல் ஆறு வடிவங்களிலான சித்திரவதைகள் ஏவப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர். மின் அதிர்ச்சி கொடுப்பது, உத்தரத்தில் தலைகீழாகத் தொங்கவிட்டு வதைப்பது, கைதிகளின் கால்களின் மீது பலகையை வைத்து அதன் மீது நாற்காலியைப் போட்டு, அதில் சிறை அதிகாரிகள் அமர்ந்து கொண்டு கால்களை நசுக்குவது, கால்களை 180 டிகிரிக்குத் திருப்பி ஒடிப்பது, தண்ணீர் சித்திரவதை, பாலியல் வன்முறை - எனப் பல்வேறு கொடிய சித்திரவதைகளை ஏவியதாகக் குறிப்பிட்டுள்ளனர்.




மனித உரிமை மீறல்களுக்கும் அரசு பயங்கரவாதத்துக்கும் எதிராக காஷ்மீர் மக்கள் விடுதலை லீக் அமைப்பினர் சீறீநகரில் நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப்படம்)

கடந்த 2005-ஆம் ஆண்டில் அமெரிக்க அதிகாரிகளிடம் அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தினர் இக்கொடுமைகள் பற்றி ஆதாரங்களுடன் ஆவணமாகச் சமர்ப்பித்துள்ளனர். இது, அமெரிக்க அரசுக்கு கேபிள் செய்தியாக அனுப்பப்பட்டுள்ளது. இது தவிர, 2007-ஆம் ஆண்டில் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்குமாறு கைதிகளை வதைத்து இந்திய இராணுவம் மனித உரிமை மீறல் குற்றங்களை இழைத்துள்ளதாகவும், இந்திய இராணுவம் போஸ்னியாவில் நடந்ததைப் போல இனப்படுகொலையில் ஈடுபடுகிறது என்றும் மற்றொரு கேபிள் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டுள்ளவர்கள் இஸ்லாமிய தீவிரவாதிகளோ, பாகிஸ்தானால் ஏவிவிடப்பட்டவர்களோ அல்ல என்றும், அவர்கள் காஷ்மீரின் சாமானிய குடிமக்கள் தான் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உண்மைகள் அம்பலமானதும், தனது அரசு ஆட்சிக்கு வருவதற்கு முன்பு நடந்தவை என்று இவற்றைத் தட்டிக் கழிக்கிறார், முதல்வர் ஓமர் அப்துல்லா. காஷ்மீரின் போலீசு தலைமை இயக்குனரான எஸ்.எம்.சோஹய், இவை ஆதாரமற்ற அவதூறுகள் என்கிறார்.

அருந்ததி ராய், சையத் அலி ஷா ஆகியோர் மீது தேசத்துரோக வழக்கு போட்டு எச்சரிக்கும் இந்திய ஆட்சியாளர்களோ, விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்தும் ஆவணங்களைப் பொய் என்று இட்லரின் கோயபல்ஸ் பாணியில் குற்றம் சாட்டி, தேசியவெறியைக் கிளறிவிட்டுத் தப்பித்துக் கொள்ள முயற்சிக்கின்றனர்.



படிப்பகம்

ரிக்கா மேற்கொண்டுள்ள சதிகளையும், ராஜபக்சேவின் போர்க் குற்றங்களையும் விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்திக் காட்டியுள்ளது. போர்க்குற்ற விசாரணையைச் செயல்படுத்தி ராஜபக்சே கும்பலைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்ற அமெரிக்காவும் மேற்கத்திய ஏகாதிபத்தியங்களும் தயாராக இல்லை என்பதை அமெரிக்கத் தூதர் அனுப்பியுள்ள கேபிள் செய்தி தெளிவாக்கிக் காட்டுகிறது. அரசுதந்திர இரகசியம் என்ற பெயரில் மூடி மறைக்கப்பட்டுத் தனிச்சுற்றுக்கு விடப்பட்ட இத்தகவல்கள் இன்று அனைவரும் பார்க்கும் வண்ணம் இணையத்திலும் ஊடகங்களிலும் கொட்டப்படுகின்றன. அமெரிக்காவின் உலக மேலாதிக்கப் போர்த் திட்டங்களும் அதற்கேற்ப அது மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்த விவரங்களும் அடுத்தடுத்து அம்பலப்படுத்தப்படுவதாலேயே, அமெரிக்கா ஆத்திரம் கொண்டு அசாங்கேயை முடமாக்கத் துடிக்கிறது.




அராஜகவாத சித்தாந்தத்தைக் கொண்டவராக அசாங்கே இருந்தபோதிலும், அவரது இந்த அம்பலப்படுத்தல்கள் சாமானிய மக்களிடம் அமெரிக்கா மற்றும் ஏகாதிபத்திய உலகைப் பற்றிய மாயைகளைத் தகர்க்கும். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் நாஜிப் படைகளின் போர்க்குற்றங்களை -ரம்பர்க்கில் விசாரித்து தண்டித்ததைப் போல, உலகப் பொது எதிரி அமெரிக்காவின் போர்க்குற்றங்களும் மேலாதிக்கச் சதிகளும் பகிரங்கமாக விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டுமென பொதுக் கருத்தை உருவாக்குவதும், அசாங்கேயை முடக்கத் துடிக்கும் ஏகாதிபத்திய மேலாதிக்கவாதிகளின் சதிகளை அம்பலப்படுத்தி, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்வதும் புரட்சிகர ஜனநாயக இயக்கங்களின் அவசியமான கடமை. நம் கடமை.

● சேகர்

# தொழிலாளர்கள் வேலைநீக்கம்! மாணவர்களிடம் பகற்கொள்ளை!

## சீயோன் மெட்ரிக் பள்ளி நிர்வாகத்தின் உண்மை முகம்

**செ**ன்னை - தாம்பரம் அருகேயுள்ள செம்பாக்கத்தில் உள்ள சீயோன் மெட்ரிக் பள்ளியில் ஓட்டுநர்களாகவும் கிளீனர்களாகவும் பத்தாண்டுகளுக்கும் மேலாகப் பணிபுரியும் 30-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், சங்கமாகத் திரண்டு சட்டபூர்வமான உரிமைகளைக் கேட்டதற்காக திடீர் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இதற்கெதிராக உயர் நீதிமன்றத்தில் தொழிலாளர் சங்கத்தினர் தடையாணை பெற்றிருந்தபோதிலும், சங்கச் செயலாளர் உள்ளிட்டு அடுத்தடுத்துப் பலரைச் சட்டவிரோதமாகப் பணிநீக்கம் செய்துள்ளது, இப்பள்ளி நிர்வாகம்.

தொழிலாளர்களின் வயிற்றிலடித்துவிட்டு அறிவைப் போதிப்பதாகக் காட்டிக் கொள்ளும் இந்தப் பள்ளியின் முதலாளியான விஜயன், முன்னாள் அரசுத் தலைவர் அப்துல் கலாமிடமிருந்து நல்லாசிரியர் விருது வாங்கியதைக் காட்டி, ஏதோ உயர்ந்த மனிதனைப் போல வேடமிட்டுவரும் மிகப் பெரிய கொள்ளையன். இவர்தான் தமிழ்நாடு - புதுச்சேரி மெட்ரிக் பள்ளி முதலாளிகள் சங்கச் செயலாளராக இருக்கிறார். இத்தகைய கல்விக் கொள்ளையர்கள்தான் மாணவர்கள், பெற்றோர்கள், தொழிலாளர்களைச் சுரண்டித் தங்களது வியாபாரத்தை விரிவுபடுத்தி வருகிறார்கள்.

புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியில் சங்கமாக அணிதிரண்டுள்ள சீயோன் பள்ளியின் ஓட்டுநர்கள், பெரிய மனிதர் போர்வையில் விஜயன் நடத்தும் கொள்ளையையும், தொழிலாளர்களை வீதியில் வீசியெறிந்துள்ள சட்டவிரோதத் திமிரையும் விளக்கி செம்பாக்கம் - காமராஜபுரம் பேருந்து நிறுத்தம் அருகே 29.12.2010 அன்று தெருமுனைக் கூட்டத்தை நடத்தினர்.

தோழர் ஜோஸ்வா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், கல்வி தனியார்மயமும் தொழிலாளர் உரிமை பறிப்பும் வெவ்வேறானவை அல்ல என்பதையும், இத்தகைய கொள்ளைக்கும் அடக்குமுறைக்கும் அடிப்படையான தனியார்மயத்தை எதிர்த்துத் தொழிலாளர்களும் உழைக்கும் மக்களும் ஓரணியில் திரண்டு போராட வேண்டிய அவசியத்தை விளக்கியும் தோழர் வெற்றிவேல் செழியன் சிறப்புரையாற்றினார்.

கல்விக் கொள்ளையன் விஜயனின் உண்மை முகத்தைத் திரைகிழித்துக் காட்டிய இக்கூட்டம், பகுதிவாழ் உழைக்கும் மக்களிடம் சிறப்பானதொரு வரவேற்பைப் பெற்றது.

-தகவல்: பு.ஜ.தொ.மு., காஞ்சிபுரம் மாவட்டம்.

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHILPRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

பென் அலி சர்வாதிகார கும்பலின் உல்லாசக் கார்களும் பண்ணைகளும், நாட்டை ஆளும் கோடீசுவர கும்பல்களின் ஆடம்பர மாளிகைகளும் விடுதிகளும் போராடும் உழைக்கும் மக்களால் கைப்பற்றப்பட்டன. சிறைகள் உடைக்கப்பட்டு அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். மக்களின் சீற்றத்தைக் கண்டு அஞ்சி பென் அலி கும்பல், ஜனவரி 14 அன்று சவூதி அரேபியாவுக்குத் தப்பியோடியது. இன்னும் இரு மாதங்களுக்குள் புதிய அதிபருக்கான தேர்தல் நடைபெறும் என்று அறிவித்து, நாடாளுமன்ற அவைத் தலைவர் தற்காலிக அதிபராகப் பொறுப்பேற்ற பின்னரே துனிசியாவில் மக்களின் போராட்டம் தணியத் தொடங்கியது.

முன்னாள் பிரெஞ்சுக் காலனி என்பதால் துனிசியா, பிரான்சின் முக்கியமான வர்த்தகக் கூட்டாளியாக இருந்துவந்தது. பென் அலியின் சர்வாதிகார ஆட்சியை பிரான்சும் மேற்கத்திய நாடுகளும் முட்டுக் கொடுத்து ஆதரித்து வந்தன. மனித உரிமைகள் துனிசியாவில் பெரிதும் மதிக்கப்பட்டு வருவதாக பிரெஞ்சு அதிபர் சர்கோசி சான்றிதழ் அளித்தார். மக்கள் எழுச்சி பெருகியதும், அதை ஒடுக்குவதற்கு பிரெஞ்சுப் படைகளை அனுப்பவும் அந்நாடு தயாராக இருந்தது. போராடும் மக்கள் மீது சித்திரவதையும் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடும் கட்டவிழ்த்து விடப்பட்ட போதிலும், அமெரிக்க அதிபர் ஒபாமா வாய்திறக்கவில்லை. இப்போது போராட்டப் புயல் சுழன்றடிக்கத் தொடங்கியதும், பிரான்சும் அமெரிக்காவும் நாக்கைச் சுழற்றி பென் அலியின் ஊழலையும் மனித உரிமை மீறல்களையும் சாடுகின்றன.

இது, சர்வாதிகார அடக்குமுறைக்கும் வேலையின்மைக்கும் எதிரான எழுச்சி மட்டுல்ல; இது, உலக முதலாளித்துவத்துக்கு எதிரான பேரெழுச்சி. தனியார்மயம், தாராளமயம், உலகமயம் - என உலக மேலாதிக்க வல்லரசுகளால் திணிக்கப்படும் கொள்கைகளையே உலகின் பெரும்பாலான நாடுகள் பின்பற்றி வருகின்றன. அக்கேடுகெட்டப் பொருளாதாரக் கொள்கையால், உணவும் வேலையும் ஊதியமும் மானியமும் மூலவளங்களும் பறிக்கப்படுவதை எதிர்த்தும், நாட்டைச் சூறையாடும் முதலாளித்துவக் கும்பல்களுக்கு எதிராகவும் தொடங்கிய இளைஞர்களின் கலகம், துனிசியாவில் மக்களின் பேரெழுச்சியாகச் சுழன்றடித்துள்ளது.

துனிசிய பேரெழுச்சியைத் தொடர்ந்து எகிப்து, லிபியா, ஜோர்டான், மாரிடோனியா முதலான நாடுகளிலும் இளைஞர்களின் போராட்டங்கள் வெடித்துள்ளன. அல்ஜீரியாவில் உணவுக் கலகம் வெடித்துப் பரவுகிறது. காட்டுத் தீயாகப் பரவும் இப்போராட்டங்களைக் கண்டு இந்நாடுகளின் சர்வாதிகார ஆட்சியாளர்கள் அரண்டு போயுள்ளனர்.

தீவிரமாகிவிட்ட முதலாளித்துவப் பொருளாதார நெருக்கடிகளின் சுமைகளை உழைக்கும் மக்கள் மீது சுமத்தும் சதிகளுக்கு எதிராக ஐரோப்பிய நாடுகள் மட்டுமின்றி, இப்போது ஆப்பிரிக்க கண்டத்திலும் போராட்டங்கள் பரவத் தொடங்கியுள்ளன. ஏற்கெனவே ஐந்தாண்டுகளுக்கு முன்பாக தென் அமெரிக்க நாடுகளில் இத்தகைய எழுச்சிகள் நடந்து சர்வாதிகார ஆட்சியாளர்கள் தூக்கியெறியப்பட்டனர். தொடரும் இப்போராட்டங்களின் ஊடாக புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் தேவையையும், முதலாளித்துவ அரசியலமைப்பு முறையை வீழ்த்தி சோசலிசத்தை நிறுவுவதுதான் ஒரே தீர்வு என்பதையும் உழைக்கும் வர்க்கம் உணர்ந்து கொள்ளும் நாள் வெகுதொலைவில் இல்லை.

● குமார்

தனது தீக்குளிப்பின் மூலம் பேரெழுச்சிக்கு வித்திட்ட வேலையற்ற பட்டதாரி இளைஞர் மொகம்மது பௌவாசிசி. மரணப்படுக்கையில் வீழ்த்தப்பட்ட மொகம்மதுவைப் பார்வையிடும் பென் அலி சர்வாதிகார கும்பல்



# மூலதனத்தின் கொள்ளைக்கு எதிராக பிரிட்டிஷ் மாணவர்களின் போர்க்கோலம்

பிரிட்டிஷ் அரசு உயர்கல்விக் கட்டணத்தை 3 மடங்கு உயர்த்தியுள்ளதையும், கல்விக்கான நிதி ஒதுக்கீட்டில் 40% அளவுக்குக் குறைத்துள்ளதையும், ஏறத்தாழ 70 சதவீத ஏழை மாணவர்கள் பயனடைந்து வந்த உதவித் தொகை நிறுத்தப்பட்டதையும் எதிர்த்து கடந்த நவம்பர் மாத இறுதியில் பிரிட்டனில் மாணவர்கள் நடத்திய போராட்டம் அந்நாட்டையே உலுக்கியுள்ளது. கல்லூரி மாணவர்கள் மட்டுமின்றி பள்ளி மாணவர்களும் போராட்டத்தில் குதித்தனர். ''முதலாளிகளின் நெருக்கடிகளுக்கு நாங்கள் பணம் செலுத்த மாட்டோம்'' என்ற முழக்கத்தோடு மாணவர்களால் தொடங்கப்பட்ட இந்தப் போராட்டத்தை தொழிற்சங்கங்களும் கல்லூரிப் பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் ஆதரித்ததோடு, அவற்றை முறைப்படுத்தி நடத்தவும் வழிகாட்டினர். லண்டன் மட்டுமின்றி பிரிட்டனின் அனைத்து பெருநகரங்களிலும் இப்போராட்டம் தீயாகப் பரவியது. பிரிட்டிஷ் மாணவர் போராட்டத்தை ஆதரித்து பிரெஞ்சு மாணவர்கள் பாரீஸ் நகரிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்தை முற்றுகையிட்டுப் போராடினர். கிரேக்க நாட்டின் மாணவர்கள் ஏதென்ஸ் நகரில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஐரோப்பிய கண்டத்தில், நாடுகளின் எல்லைகளைக் கடந்து முதலாளித்துவத் தாக்குதலுக்கு எதிராக போராட்டம் பரவி வருகிறது.





படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/09-11 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/09-11

### ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நல மாணவர் விடுதிகள்:

# அரசின் வதைமுகாம்கள்!



தெருநாய்கள் ற்றித்திரியும் நிலையில் உள்ள சென்னை-சைதாப்பேட்டை எம்.சி.ராஜா விடுதி.

**செ**ன்னையிலுள்ள அர கல்லூரிகள், அர உதவி பெறும் கல்லூரிகளில் படித்துவரும் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் கடந்த டிசம்பர் 21 அன்று சென்னை - அண்ணா சாலையில் நடத்திய சாலை மறியல் போராட்டம், அம்மாணவர்கள் தங்கிப் படிப்பதற்காகத் தமிழக அரசால் நடத்தப்படும் நல விடுதிகள் அனைத்தும் மாட்டுக் கொட்டகைகளைவிடக் கேவலமாக இருப்பதை வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டது.

''கடந்த பல ஆண்டுகளாகவே முறையாகப் பராமரிக்கப்படாததால், சிதிலமடைந்துவிட்ட கட்டிடங்கள்; உடைந்து போன கழிவு நீர் செல்லும் குழாய்கள் மாற்றப்படாததால், மலமும், சிறுநீரும் விடுதிக்குள்ளேயே குட்டையைப் போலத் தேங்கி நின்று, அதனால் வீ ம் துர்நாற்றம்; 52 அறைகளில் 595 மாணவர்கள் தங்க வேண்டும் என்ற அரசின் கணக்கே அளவுக்கு அதிகமானது எனும்பொழுது, இப்பொழுது அந்த 52 அறைகளில் 1,600 மாணவர்கள் (ஒரு அறைக்கு 30 மாணவர்கள்) அடைபட்டுக் கிடக்கும் அவலம்.'' - இதுதான் சென்னை - சைதாப்பேட்டையிலுள்ள எம்.சி.ராஜா விடுதியின் குறுக்குவெட்டுத் தோற்றம்.

ஆதி திராவிடர் நல விடுதிகளின் சீர்கேட்டைக் கண்டித்துத் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் சென்னை-அண்ணா சாலையில் நடத்திய மறியல் போராட்டம்.



சென்னையிலுள்ள மற்ற 16 விடுதிகளும், தமிழகத்தின் பிற பகுதிகளிலுள்ள விடுதிகளும் எம்.சி.ராஜா விடுதியைப் போன்று அல்லது அதைவிடக் கேவலமான நிலைமையில்தான் இருக்கின்றன.

இவ்விடுதிகள் ஒவ்வொன்றிலும் மாவரைக்கும் இயந்திரங்கள், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், குடிநீரைச் சுத்திகரிப்பதற்கான கருவிகள் இருக்க வேண்டும் என ஆதிதிராவிடர் நலத் துறையின் கொள்கைக் குறிப்பு கூறுகிறது. ஆனால், இவ்விடுதிகளில் காலைக் கடன்களைக் கழிப்பதற்கும், குளிப்பதற்கும்கூட முறையான, போதுமான வசதிகள் கிடையாது என்பதுதான் உண்மை.

இவ்விடுதிகளில் தங்கிப் படிக்கும் ஒவ்வொரு கல்லூரி மாணவன் மற்றும் பள்ளி மாணவனின் உணவிற்காக மாதமொன்றுக்கு ரூ.550/- வரை நிதி ஒதுக்கப்படுவதாக அர கூறுகிறது. இந்த ஒதுக்கீடைத் தின்று தீர்ப்பது அதிகார வர்க்கம்தான் என்பதை இவ்விடுதிகளால் போடப்படும் உணவே காட்டிக் கொடுத்துவிடுகிறது. புழுத்துப் போன அரிசிச் சோறுதான் இவ்விடுதிகளால் போடப்படும் ஒரே 'சத்தான' உணவு. குழம்புக்கும் காய்கறிக்கும் மாணவர்கள் தங்கள் கைக்காசைத்தான் போட்டுக் கொள்ள வேண்டும். உணவிற்காகவும், கல்விச் செலவிற்காகவும் விடுமுறை நாட்களில் கூலி வேலைக்குப் போவதாகக் குறிப்பிடுகிறார்கள், இம்மாணவர்கள்.



எம்.சி. ராஜா விடுதி மாணவர்கள் உடைந்து போன பிளாஸ்டிக் வாளிகளைக் கொண்டுதான் உணவைப் பரிமாறிக் கொள்கிறார்கள்.

இப்படிபட்ட இழிந்த சூழ்நிலையில் தங்க நிர்பந்திக்கப்பட்டுள்ள ஏழை தாழ்த்தப்பட்ட மாணவனால், தனது படிப்பில் முழுமையான கவனத்தை எப்படிச் செலுத்த முடியும்?

அடித்தட்டு மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து தர வேண்டிய கடமையை அர புறக்கணிக்கிறது என்பதாக மட்டும் இந்தப் பிரச்சினையைப் பார்க்க முடியாது. தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர்களாகப் பட்டம் சூட்டிக் கொண்டுள்ள திருமா., ரவிக்குமார் போன்றவர்களால் ஆதரிக்கப்படும் தி.மு.க. ஆட்சி, தாழ்த்தப்பட்ட மாணவர்களின் மீது கொண்டுள்ள தீண்டாமை மனோபாவத்தையும் பிரதிபலிப்பதாகவே இதனைப் பார்க்க முடியும்.



படிப்பகம்